# இலங்கை

இலங்கை செயற்றிறனுடைய பல் கட்சி முறைமை கொண்ட ஒரு குடியரசு நாடு. மக்களின் விருப்பத்துக்கமையத் தெரிவுசெய்யப்பட்டு ஓர் இரண்டாவது 6 ஆண்டு காலப் பகுதிக்காக 1999ஆம் ஆண்டில் மீண்டும் ஆணை வழங்கப்பட்ட ஜானாதிபதியும், 2001ம் ஆண்டில் ஓர் 6 ஆண்டு பதவிக் காலத்திற்கெனத் தெரிவுசெய்யப்பட்ட 225 உறுப்பினர் பாராளுமன்றமும் அரசியலமைப்பு அதிகாரத்தைப் பகிர்ந்து கொண்டுள்ளனர். 1983 முதல் 2001ம் ஆண்டு வரை அரசாங்கம் நாட்டின் வடக்கையும் கிழக்கையும் உள்ளடக்கியதாக இன அடிப்படையில் தனியானதொரு தமிழ்நாடுகோரி வரும் ஒரு பயங்கரவாத இயக்கமான தமிழ் ஈழ விடுதலைப்புலிகள் இயக்கத்துடன் (எல்ரிரிஈ) போரிட்டு வந்தது. 2001 டிசம்பரில் அரசாங்கமும் எல்ரிரிஈயும் தனித்தனியாக ஒரு தலைபட்சமான போர்நிறுத்தத்தை அறிவித்தது. பின்னர் 2002 பெப்ரவரியில் ஒரு முறையான போர் நிறுத்த ஒப்பந்தத்தில் கைசாத்திட்டன. நோர்வே அரசாங்கத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட பேச்சுக்களில் ஆறு தடவைகள் கலந்து கொண்ட பின்னர் எல்ரிரிஈ ஏப்ரிலில் பேச்சுவார்த்தைகளை இடைநிறுத்திக்கொண்டது. எனினும் இரு தரப்பும் போர்நிறுத்த ஒப்பந்தத்தை தொடர்ந்து பின்பற்றிவருகின்றன. இந்த சமாதான நடைமுறையின் விளைவாக நாடெங்கிலும் அமைந்திருந்த வீதித்தடைகள் பரிசோதனை நிலையங்கள் என்பவற்றின் எண்ணிக்கையில் குறிப்பிடத்தக்க வீழ்ச்சி ஏற்பட்டது. ஏறத்தாழ 341,000 இடம்பெயர்ந்த மக்கள் வடக்கிலும் கிழக்கிலும் தத்தமது சொந்த இடங்களுக்குத் திரும்பினர். அத்தோடு பாதுகாப்புப் படையினரின் தவறான செயற்பாடுகள் பற்றிய விசாரணைகளையும் ஆரம்பித்தனர்.

மக்கள் ஐக்கிய முன்னனிக்(பி.ஏ) க் கூட்டமைப்பின் தலைவி ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க நவம்பர் 4ந் திகதி பாராளுமன்றச் செயற்பாடுகளைத் தற்காலிகமாக இடைநிறுத்தினார். சமாதான செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுவரும் இக்காலகட்டத்தின்போது ‘‘பாதுகாப்பு நிலைமை மோசமடைந்துவருவதாக “ ஜனாதிபதி தெரிவித்த கருத்தின் காரணமாக ,ஜனாதிபதி பாதுகாப்பு, உள்நாட்டு விவகார, மக்கள் தொடர்பாடல் அமைச்சர்களைப் பதவி நீக்கம்செய்து அப்பதவிகளை தாமே பொறுப்பேற்றுக்கொண்டார். பாராளுமன்றம் நவம்பர் 19ம் திகதி மீண்டும் கூட்டப்பட்டதோடு , பிரதமர்- ஜனாதிபதி ஆகியோரின் பிரதிநிதிகளுக்கிடையே ஆண்டின் முடிவுறு காலப்பகுதியில் அதே மூண்று அமைசுக்களினதும் கட்டுப்பாடு மற்றும் சமாதான நடைமுறையில் பிரதமரின் பங்கு என்பன தொடர்பில் பேச்சுவாத்தைகள் தொடர்ந்தன. ஜானாதிபதி, சமாதான நடைமுறை தொடர்பில் தமது உறுதியான ஈடுபாட்டினை மீண்டும் வலியுறுத்தினார். ஆனால் சமதானப் பேச்சுவார்த்தைகள் ஆண்டு இறுதியின் போது நிறுத்தப்பட்டேயிருந்தன.

போர் நிறுத்தத்திற்கு முன்னதாக 2001ல் நடைபெற்ற பாராளுமன்றத் தேர்தல் பொதுவாக சுகந்திரமானதாகவும் நியாயமானதாகவும் நடைபெற்றிருப்பினும் முறைகேடுகள் காரணமாகப் பங்கமேற்பட்டதுடன் குறைந்தது 50 இறப்புகளுக்கும் காரணமாயிற்று. தேர்தல் ஐக்கிய தேசிய முன்னனிக்கு (யூஎன்.எப்), ஐக்கிய தேசிய கட்சி(யு.என்.பி)யின் தலைமையிலான கூட்டுக்கட்சிகளின் அமைப்பாக பாராளுமன்றத்தில் பெரும்பான்மையை வழங்கியிருந்தது. தேர்தலின்போது எல்ரிரிஈ ஊடுருவலாம் எனத் தமக்குப் பயமாக இருப்பதாக கூறி, எல்ரிரிஈ யின் கட்டுபாட்டுப்பிரதேசத்திலுள்ள 40,000 க்கு மேற்பட்ட வாக்காளர்கள் வாக்களிப்பதற்கென இராணுவத்தின் கட்டுப்பாட்டு நிலைகளைத்தாண்டுவதை அரசாங்கம் தடைசெய்தது. அந்த ஆண்டின்போது, இந்தச் செயற்பாடு வாக்களிக்கத் தகுதி பெற்றிருந்த தமிழ் வாக்காளர்களின் அடிப்படை உரிமைகளை மீறுவதாக உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்து. வாக்களிப்பதற்கு அவர்களுக்குள்ள உரிமைகளை மறுத்ததன் மூலம் அரசாங்கம் தவறிழைத்துவிட்டதாக கூறி அபராதமும் விதித்தது. ஒரு சுகந்திரமான நீதித்துறைவிடயத்தில் அரசியலமைப்பிலுள்ள கட்டுப்பாடுகளை அரசாங்கம் பொதுவில் கடைப்பிடித்தே வருகிறது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

# இலங்கை

ஜனாதிபதி குமாரதுங்க டிசம்பர் 19ம் திகதி உள்நாட்டுப் பாதுகாப்பு அமைச்சு என மறுபெயர் சூட்டிய உள்விவகார அமைச்சே, எல்ரிரிஈக்கு எதிரான இராணுவ நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தப்பட்டதும் நாட்டின் பெரும்பாலான பகுதிகளில் உள்நாட்டுப் பாதுகாப்புக்காகப் பயன்படுத்தப்பட்டதுமாக 60,000 உறுப்பினர்களைக்கொண்ட பொலிஸ் படைக்குப் பொறுப்பாக உள்ளது. கடந்த காலத்தில் துணைப்படைத்திறன் கொண்ட விசேட பொலிஸ் பிரிவு (எஸ்.ரி.எப்) எல்ரிரிஈக்கெதிரான இராணுவ நடவடிக்கையிலும் ஈடுபடுத்தப்பட்டிருந்தது. பாதுகாப்பு அமைச்சு, 112,000 உறுப்பினர்களைக் கொண்ட இராணுவத்தையும், 27,000 உறுப்பினர்களைக் கொண்ட கடற்படையையும், 20,000 உறுப்பினர்களைக்கொண்ட விமானப்படையையும் தன் கட்டுப்பாட்டில் கொண்டுள்ளது. அவ்வவ்விடங்களிலிருந்து திரட்டப்பட்டதும் பொலிஸுக்குப் பொறுப்பாகவுள்ளதுமான 20,000 உறுப்பினர்களைக்கொண்ட ஆயுதந்தரித்த ஊர்காவல்படை, எல்ரிரிஈயின் கட்டுப்பாட்டுப்பகுதிகளை அண்மித்ததாகவுள்ள இடங்களில் முஸ்லிம் சிங்கள சமுதாயங்களுக்குப் பாதுகாப்பு வழங்குகின்றது. சிவிலிய அதிகாரிகள் பாதுகாப்புப்படைகள் மீது ஆற்றல்வாய்ந்ததான கட்டுப்பாட்டை நிலைநாட்டி வருகின்றனர். பாதுகாப்புப்டைகளைச் சேர்ந்த சில உறுப்பினர்கள் மோசமான மனிதஉரிமை மீறல் செயற்பாடுகளில் ஈடுபட்டிருந்துள்ளனர்.

புடவைகள்,தேயிலை,இறப்பர்,தேங்காய்,இரத்தினக்கல் போன்ற பொருட்களின் ஏற்றுமதியில் பிரதானமாகத் தங்கியுள்ள ஒரு சந்தைப் பொருளாதாரத்தில் இலங்கை குறைந்த வருமானம் ஈட்டும் ஒரு நாடாகும். வெளிநாடுகளில் தொழில்புரியும் பிரஜைகளின் வருமானத்தின் மூலமும் உல்லாசப்பிரயாணத்துறை மூலமும் அது கணிசமான வருவாயை வெளிநாட்டு நாணயமாகப் பெற்றுவருகிறது. மக்கள்தொகை ஏறத்தாழ 19.4 மில்லியன்களாகும். உண்மையான உள்ஊர் உற்பத்தி(ஜி.டி.பி) வளர்ச்சி 2002ல் 3.2 சதவீதமாகும். நடப்பு ஆண்டில் அது 5.5 சதவீதமாக இருக்குமென எதிர்வு கூறப்பட்டுள்ளது. சமாதான முற்கட்டத்தின் ஒரு பெறுபேறாக நாடு பாதுகாப்புச் செலவினங்களைக் குறைக்கவும், அதன் பெருந்தொகையான பொதுக்கடன்பழுவைக் கட்டுப்படுத்தும் விவகாரத்தில் முனைப்பான கவனம் செலுத்தவும் முடிந்துள்ளது. குறைந்தவட்டி விகிதங்கள், உள்ஊர் தேவையில் ஏற்பட்ட ஒரு மீட்சி, அதிகரித்த உல்லாசப்பிரயாணிகளின் வருகை, பங்குச்சந்தை வாத்தகத்தின் மீட்சி, வெளிநாட்டு நேரடி முதலீட்டின் அதிகரிப்பு என்பனவற்றின் விளைவாக பொருளாதாரம் நன்மையடைந்தது. ஜனாதிபதிக்கும் பிரதமமந்திரிக்குமிடையே ஆண்டின் கடைசி 2 மாதங்களாக சகவாழ்வு விடயத்தில் ஏற்பட்டிருந்த முட்டுக்கட்டை, பொருளாதாரத்தில் அதிலும் குறிப்பாக நாட்டின் சரி ஒப்புரவுச்சந்தைகள், வெளிநாட்டு நேரடிமுதலீடு என்பனவற்றில் பாதகமான விளைவினை ஏற்படுத்தியிருந்தது.

அரசாங்கம், பொதுவாக அதன் பிரஜைகளின் மனித உரிமைகளை மதித்துவரினும், சில துறைகளில் பாரதூரமான பிரச்சினைகள் இருந்தேயுள்ளன. பாதுகாப்புப்படைகள் அரசியல் தூண்டுதலின்பேரில் கொலைகள் புரிந்துள்ளதாகவோ ஆட்கள் காணாமல் போவதற்குக்காரணமாக இருந்ததாகவோ தகவல்கள் இல்லை. எனினும் இராணுவமும் பொலிஸாரும் தடுத்து வைக்கப்பட்டிருந்தோர் மீது சித்திரவதை புரிந்ததாகவும், கொலைகள் செய்ததாகவும், வன்புணர்ச்சிகளில் ஈடுபட்டதாகவும் அறிவிக்கப்பட்டிருந்தது. சிறைச்சாலை நிலமைகள் மோசமாகவே இருந்துள்ளன. ஆண்டின் போது எதேச்சையான கைதுகள் நிகழ்நதுள்ளதாகவும் அறிவிப்புகள் வெளியாகியிருந்தன. 2002ம் ஆண்டின்போது அரசாங்கம் பயங்கரவாதத்தடுப்புச்சட்டத்தின் கீழ் (பி.ரி.ஏ) தடுத்து வைக்கப்பட்டிருந்த 750க்கும் கூடுதலான தமிழர்களை விடுதலை செய்தது. பி.ரி.ஏயின் கீழ் 65 தமிழர்கள் மட்டுமே தடுத்து வைக்கப்பட்டிருந்தனர். 2001ம் ஆண்டில் விலக்கிக்கொள்ளப்பட்ட அவசரகாலச் சட்டவிதிமுறைகளைப் போன்றே , பி.ரி.ஏ அதிகாரமளிக்கப்படாத கைதுகளையும் பதில் சொல்லும் பொறுப்பற்ற தடுத்து வைப்புகளையும் அனுமதித்தது. அண்மிய கடந்த காலத்தில் நிகழ்ந்தவைமாதிரியிலன்றி அந்த ஆண்டில் பாதுகாப்புப்படைகள் ஊடகவியலாளர்களை

# இலங்கை

அந்த அளவுக்குத் தொல்லைப்படுத்தவில்லை என்று தெரிகிறது, பெண்களுக்கெதிரான வன்செயல்பாகுபாடு சிறுவர் பரத்தைமை, சிறுவர்களை வேலைக்கமர்த்தல், தொழிலாளர்கள் உரிமைகள் மீதான மட்டுப்பாடுகள், அதிலும் குறிப்பாக ஏற்றுமதி உற்பத்தி வலயங்களில் (ஈபிசெற்கள்) மற்றம் வலுக்குறைந்தோர் மீதான பாகுபாடு என்பன பிரச்சனைகளாகவே தொடர்ந்தன. மத ரீதியில் சிறுபான்மையினராக உள்ளோர்க் கெதிரான வன்செயல்கள் அதிகரித்தன. நிறுவனங்கள் ரீதியில் தமிழர்களுக் கெதிரான இனப்பாகுபாடு ஒரு பிரச்சனையாகவே இருந்துள்ளது.

கட்டாயத்தின் பேரில் வேலையில் ஈடுபடுத்துவதற்காக பெண்களையும் பிள்ளைகளையும் வாணிகநோக்குடனும் இழிதொழிலில் ஈடுபடுத்துவதற்கெனவும் கடத்திச் சென்றதான சில சம்பவங்களும் நிகழ்ந்திருக்கின்றன. பிள்ளைகளைப் புணர்ச்சித் தொழிலில் ஈடுபடுத்துவதற்கெதிராக அரசாங்கம் நடவடிக்கை எடுத்ததால் இந்த வியாபாரத்தில் சர்வதேச ஈடுபாடு குறிப்பிடத்தக்கதாகக் குறைந்தது.

எல்ரிரிஈ மோசமானவிதத்தில் மனித உரிமைகளை மீறும் செயல்களில் தொடர்ந்து ஈடுபட்டுவந்தது. தன்னிச்சையான கைதுகள், சித்திரவதைகள், தொல்லைப்படுத்தல் ,ஆட்கள் காணாமல் போவது, அச்சுறுத்தி பணம் சம்பாதித்தல், தடுத்து வைத்தல் ஆகிய செயற்பாடுகளுக்கும் பொறுப்பாயிருந்துள்ளது. பயமுறுத்தல் இயக்கமொன்றின் மூலம் எல்ரிரிஈ யாழ்ப்பாணத்திலும் கிழக்கிலும் தேர்ந்தெடுக்கப்பட்ட உள்ஊர் ஆட்சிசபையின் செயற்பாட்டினைத் தொடர்ந்து அடியறுத்து வந்துள்ளது. எல்ரிரிஈ அவ்வவ்போது வடக்கிலும் கிழக்கிலும் அரசியல் மற்றும் அரசாங்க செயற்பாடுகள் நிகழ்வதைத் தடுத்தும் வந்திருக்கிறது. அந்த ஆண்டின்போது எல்ரிரிஈ தனக்கு விரோதமான தமிழ் அரசியல் குழுக்களைச் சேர்ந்தோரையும் தன்னைப்பற்றி தகவல் தெரிவித்தோராகக் கருதியவர்களுமாக 36க்கும் கூடுதலானோரைக் கொன்றதற்குப் போதுமான ஆதாரமும் இருந்துள்ளது. எல்ரிரிஈ முஸ்லிம்களைப் பயமுறுத்திய சந்தர்ப்பங்களும் கிழக்கில் எல்ரிரிஈக்கும் முஸ்லிம்களுக்குமிடையே கைகலப்புகள் ஏற்பட்ட சம்பவங்களும் நிகழ்ந்துள்ளன. இவற்றில் முஸ்லிம்கள் பலர் கொல்லப்பட்டுள்ளனர். எல்ரிரிஈ வடக்கிலும் கிழக்கிலும் பெருமளவு பகுதிகளை தொடர்ந்தும் தன் கட்டுப்பாட்டில் வைத்துள்ளது. நாட்டில் அதன் கட்டுப்பாட்டிலுள்ள பகுதிகளுக்குச் சென்றுவருவதற்கு எல்ரிரிஈ ஊடகவியலாளர்களுக்கு மட்டுப்படுத்தப்பட்ட அனுமதியை வழங்கியிருந்தது. மக்களின் சுதந்திரமான நடமாட்டம் மீது எல்ரிரிஈ விதித்திருந்த சில கட்டுப்பாடுகள் தொடர்ந்தும் இருந்துள்ளன. தனது கட்டுப்பாட்டின் கீழுள்ள பகுதிகளில் வாழும் மக்களுக்குத் தங்களின் அரசாங்கத்தை மாற்றும் உரிமையை மறுத்ததுடன் எல்ரிரிஈ நியாயமான விசாரணைக்கு வகை செய்யாது அந்தரங்கம் பேணுவதிலுள்ள உரிமைகளை மீறித்தலையிட்டு, சிறார்களைப் போரில் ஈடுபடுத்தி, மற்றும் இன மத ரீதியில் சிறுபான்மையினராக உள்ளோர்மீது பாகுபாடுகாட்டியும் வந்திருக்கின்றது.

## மனித உரிமைகளுக்கு மதிப்பளித்தல்

### பிரிவு 1 பின்வருவனவற்றிலிருந்து விடுபடுவது உட்பட ஆளின் நேர்மைக்கு மதிப்பளித்தல்.

### அ. தன்னிச்சையாக அல்லது சட்டத்துக்கு முரனாக உயிரைப்பறித்தல்.

அரசியல் கொலைகள் நிகழவில்லையெனினும் மனித உரிமைகள் ஆணைக்குழு(எச்.ஆர்.சி) பொலிஸ் அடித்தலில் இருவருக்கு மரணம் சம்பந்தமான குற்றச்சாட்டு உட்பட பொலிஸ் காவலில் இருந்தபோது ஆறுபேர் இறந்ததாக அறிவித்தது. ஜுலை 24ம் திகதி மொறகஹஹேன பொலிஸால் கைது செய்யப்பட்ட சுனில் ஹேமச்சந்திர பொலிஸ் அடித்ததான குற்றச்சாட்டைத் தொடர்ந்து பின்னர் கொழும்பு தேசிய

## இலங்கை

ஆஸ்பத்திரியில் மரணமானார். நவம்பர் 10ந் திகதி எஸ்.எல். குலதுங்க நிவித்திகல பொலிஸாரினால் அடிக்கப்பட்டதாகக் குற்றஞ்சாட்டப்பட்ட நிலையில் கொழும்பு தேசிய ஆஸ்பத்திரியில் மரணமானார். மேலும் வேறு நான்குபேர் பொலிஸ் காவலிருந்தபோது மரணித்ததாக எச்.ஆர்.சி அறிவித்தது. ஆனால் ஒவ்வொருவரையும் பொறுத்தவரை பொலிஸாரின் கடுமையான தாக்குதலின் விளைவாகத்தான் அவர்கள் இறந்தனர் எனக்கொள்ள முடியாதுள்ளது. மே 13ந் திகதி இலந்தர பெடிகே விஜயரத்ன கைதுசெய்யப்பட்டபோது அவர் சுகவீனமுற்ற நிலையில் வெலிவேரிய பொலிஸ் கம்பஹா ஆஸ்பத்திரிக்குக் கொண்டுசெல்லப்பட்டபோது காலமானார். ஓகஸ்ற் 12ல் கைதுசெய்யப்பட்ட மைக்கேல் மனோகுமாரவின் இறப்பு, கொஸ்கம பொலிஸாரினால் அவர் விடுவிக்கப்பட்ட பின்னர் நிகழ்ந்தது, எலிபாஷாணம் உட்கொண்டதால் ஏற்பட்ட அம் மரணம், தற்கொலை என நிர்ணயிக்கப்பட்டது. கடவத்தை பொலிஸாரினால் ஓகஸ்ற் 27ந் திகதி கைதுசெய்யப்பட்ட காரனின் சஞ்சீவ, அவரது சிறைக்கூடத்தனியறையில் தூக்கில் தொங்கக் காணப்பட்டார். அவரின் இறப்பு தற்கொலை எனத் தீர்ப்பளிக்கப்பட்டது. ஓகஸ்ற் 28ம் திகதி மத்துறட்ட பொலிஸார் ஆர்.எம். லொக்கு பண்டாவைக் கைது செய்தபோது, அவர் தமது நெஞ்சு வலிப்பதாக முறையிட்டார். அவர் மத்துறட்ட ஆஸ்பத்திரிக்குக் கொண்டு செல்லப்பட்டபோது அங்கு காலமானார். இருதயம் செயற்படாதலால் எற்பட்ட இயற்கை மரணம் என வைத்திய அதிகாரிகள் தெரிவித்தனர். 2001ம் ஆண்டின்போது பாதுகாப்பிலிருந்த கணபதிப்பிள்ளை உதயகுமார் மரணமானது அல்லது விமானப்படையினரால் கொல்லப்பட்டார் எனக்கொள்ளப்படும் சிவஞானம் மனோஹரியின் மரணம் தொடர்பிலான விசாரனையில் எந்தவித முன்னேற்றமும் இருக்கவில்லை.

அந்த ஆண்டின்போது, அரசாங்கம் பல தெளிவான தோற்றமுடைய வழக்குகளில் பாதுகாப்புப்படைகளைச் சேர்ந்த சிலரைக் குற்றவாலிகளாகக் கண்டிருப்பினும் பாதுகாப்பு படையினர்க்கு உள்ள தண்டனை விலக்கீட்டு உரிமை, இன்னும் ஒரு பிரச்சனையாகவே இருந்துவருகிறது. ஆண்டின் இறுதி வாக்கில் அரசாங்கம் பாதுகாப்பு படையினரால் மேற்கொள்ளப்பட்டதான 5 வன்புணர்ச்சிகள், 50 சித்திரவதைகள் மற்றும் ஏறத்தாழ ஆட்கள் காணாமல்போன 500 சம்பவங்கள் தொடர்பில் விசாரணைகளைத் தொடர்ந்து மேற்கொண்டிருந்தது. பல்கலைக்கழக மாணவி கிருஷாந்தி குமாரசாமி , 1996ம் ஆண்டு கொலை செய்யப்பட்டது தொடர்பில் பாதுகாப்புப்படையைச் சேர்ந்த ஆறுபேரைக் குற்றவாளிகளாகக்கண்டு தண்டனை வழங்கப்பட்டது. 2000ம் ஆண்டில், மிருசிவில்லில் 9 தமிழ்க்குடிமக்களைச் சித்திரவதை செய்து அவர்களில் எட்டுப்பேரைக் கொன்றதற்காக குற்றச்சாட்டின்பேரில் அனுராதபுர நீதிமன்றத்தில் 5 இராணுவ வீரர்களுக்கெதிரான விசாரணை தொடர்ந்தது. முன்னதாக இராணுவத்தளபதி ஒருவர், அவர்களின் சம்பளங்களை வழங்காது தடுத்து வைத்திருந்ததன் மூலம் ஒன்பது வீரர்களுக்கும் நிர்வாக ரீதியில் தண்டனை வழங்கியிருந்தார். (1பி, 1சி பிரிவுகளைப் பார்க்க)

2000ம் ஆண்டில் பிந்துனுவெவ புனர்வாழ்வு முகாமில் 27 தமிழ் ஆண்கள் கொல்லப்பட்டது தொடர்பாக இடம்பெற்ற நீதிமன்ற விசாரணையின்போது, ஜூலை 1ல் 2 பொலிஸ் அதிகாரிகள் உட்பட 5 பேருக்கு மரண தண்டனைத் தீர்ப்பு வழங்கப்பட்டது. அந்தத்தீர்ப்பு உடனடியாகவே 23 ஆண்டுகாலக் கடுழிய சிறைத்தண்டனையாக மாற்றப்பட்டது. முன்னர் ஜனவரி 4 மற்றொரு நீதிமன்ற நடவடிக்கையின்போது, 1 பொலிஸ் அதிகாரி உட்பட மேலும் 23 பேர் விடுதலை செய்யப்பட்டனர். பொலிஸார், “ கடமையில் கடுமையான தவறிழைத்து விட்டதாக” எச்.ஆர்.சி தெரிவித்திருந்தது. அக்கொலைகளில் பங்கேற்றதாகவும், கிராமவாசிகள் அத்தடுப்பு முகாமுக்குள் புகுவதைத் தடுப்பதற்கும் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லையென்றும் பொலிஸார் மீது குற்றம் சார்த்தப்பட்டிருந்தது. கொலைகளுக்குப் பின்னதாக வன்செயல்கள் அனேகமாக 1 வாரகாலம் நீடித்தன. அதனைத் தொடர்ந்துதான் பொலிஸாரால் நிலைமையைக் கட்டுப்படுத்தமுடிந்தது.

# இலங்கை

முன்னைய ஆண்டுகளின்போது, எல்ரிரிஈ மேற்கொண்டிருந்த தாக்குதல்களில், பாதுகாப்புப்படை உறுப்பினர்கள் அல்லது குடிமக்கள் கொல்லப்பட்டது அல்லது காயமடைந்ததற்கு பழிவாங்கும் விதத்தில் தன்னிச்சையாகச் சில கொலைகள் இடம்பெற்றன. அனேகமானவற்றில், பலியானோர் எல்ரிரிஈ உறுப்பினர்களே என பாதுகாப்புப்படைகள் உரிமை கோரின, ஆனால் மனித உரிமைக் கண்காணிப்பாளர்கள் அவற்றை வேறு விதத்தில் கருதினர். உதாரணமாக அவ்வாண்டின்போது, திருகோணமலைக்குச் சமீபமாகவுள்ள தம்பலகாமத்தில் 1998ல் 8 தமிழ்க்குடிமக்கள் கொல்லப்பட்டது தொடர்பில் எட்டுப் பொலிஸ் அதிகாரிகளுக்கெதிரான குற்றச்சாட்டு விசாரணைகள் தொடர்ந்தன. ஒரு வாரத்திற்கு முன்னதாக தலதாமாலிகை ஆலயம் எல்ரிரிஈ யினரால் குண்டுவீசித் தாக்கப்பட்டதற்குக் பழிவாங்கும் நோக்கத்துடன் பொலிஸாரும் ஊர்காவற்படையினரும் அப் பொதுமக்களைக் கொன்றதாகக் கருதப்பட்டது. 1999ல் இடா காமெற்றா என்ற ஒரு தமிழ்ச்சிறுமியைக் கூட்டாகக் கற்பளித்துக் கொலை செய்ததான குற்றச்சாட்டின் பேரில் கைதுசெய்யப்பட்ட 5 படைவீரர்கள் மீதான நீதிமன்ற விசாரணை தொடர்ந்தது. 1996ல் பாதுகாப்புப் படையினரால் கொல்லப்பட்டுப் புதைக்கப்பட்ட சுமார் 400 பேரின் சடலங்களைக் கொண்ட பாரிய புதைக்குழிகள் யாழ்ப்பாணம் செம்மணிப் பகுதியில் கண்டுபிடிக்கப்பட்டது மீதான வழக்கொன்று விசாரனை செய்யப்பட்டுக் கொண்டிருந்தது. செம்மணிப் பகுதியில், 6 படைவீரர்கள், தங்களின் மேலதிகாரிகள் இட்ட கட்டளைகளுக்கு இயைய, 120 முதல் 140 வரையிலான உடல்களைப் புதைத்திருந்ததாகத் குற்றஞ்சார்த்தப்பட்டிருந்தது. 1999ல் மேற்கொள்ளப்பட்ட தோண்டுதல்களின்போது 15 எலும்புக் கூடுகள் கண்டெடுக்கப்பட்டன. பலியானோரில் இருவர், 1996ல் காணாமல்போன இளைஞர்கள் என அடையாளங் காணப்பட்டது. 2001ல் அவ்வுடல்களில் 13, அடையாளங் காணப்படவில்லை. இக்கொலைக்கு முன்னால் பொலிஸ்கரார்கள் உட்பட 20 பாதுகாப்புப்படை ஆட்களே பொறுப்பு என அந்த 6 படைவீரர்களும் பெயர் விபரங்களை வெளியிட்டனர். அடையாளங்காணப்படாதிருந்த எஞ்சிய உடல்கள் அடையாளங்காணப்படுவதற்காக டி.என்.ஏ பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன. சட்டமா அதிபரின் (ஏ.ஜி) அலுவலகம் தீர்க்கமற்ற அந்த ஆரம்பப் பெறுபேறுகளையிட்டுத்தான் திருப்த்தியடையவில்லையென்றும், எனவே, மேலும் விரிவான பரிசோதனைகளை மேற்கொள்வதற்காக நிதி கோரியதாகவும் அறிவிக்கப்பட்டிருந்தது. அவ்வாண்டின்போது 1992ல் மயிலந்தனைக் கிராமத்தில் படுகொலை செய்யப்பட்ட 35 தமிழ்க்குடிமக்களைப் பிரநிதித்துவப்படுத்தியோர், அக்கொலைகளைச் செய்ததாகக் குற்றஞ் சுமத்தப்பட்டிருந்த அந்த 21 படைவீரர்களும் 2002ல் விடுதலை செய்யப்பட்டதற்கு எதிராக ஏ.ஜி மேன் முறையீடு செய்ய வேண்டுமெனக்கோரியிருந்தனர். 2000ஜனவரியில் தமிழ் அரசியல்வாதியான குமார் பொன்னம்பலம் கொல்லப்பட்டதுடன் சம்பந்தப்பட்டிருந்த இரண்டு பிரதான சந்தேக நபர்கள் அவ்வாண்டின் முற்பகுதியில் இனந்தெரியாத கொலைஞர்களால் கொல்லப்பட்டனர். எஞ்சியுள்ள சந்தேக நபர் மீதான நீதி விசாரணை தொடர்ந்தது.

கடந்த காலத்தில் அனேகர் கொல்லப்பட்டதற்கு தமிழ் ஈழ மக்கள் விடுதலை அமைப்பின் இராணுவப் பிரிவும் ராசிக் குழுவும் காரணமாயிருந்துள்ளன, எனினும் அவ்வாண்டின் போது அத்தகைய கொலைச் சம்பவங்கள் நிகழ்ந்ததாக தகவல் இல்லை. பாதுகாப்பு படைகள் இந்தக் குடிப்படைகளுக்கும் ஏனைய பல தமிழ்ப்போராளிகள் அமைப்புகளுக்கும் ஆயுதங்கள் வழங்கி எல்ரிரிஈ பயங்கரவாதிகளை அடையாளங் காண்பதற்கான தகவல்களை வழங்க உதவுவதற்குமாகவும் சில சந்தர்ப்பங்களில் அப்பயங்கரவாதிகளுக்கெதிரான இராணுவ நடவடிக்கைகளில் பங்குபற்றவும் பயன்படுத்தியுள்ளன. இந்தக் குடிப்படைகளின் சரியான அளவை மதிப்பிட இயலாது. ஆனால் அவை மொத்தம் 2000க்குக் குறைந்த தொகையினரையே அனேகமாகக் கொண்டிருக்கக் கூடும். அரசாங்கத்துக்கும் ஏல்ரிரிஈ க்கும்மிடையே 2002 பெப்பரவரியில் ஏற்பட்ட போர்நிறுத்த இணக்கத்தை தொடர்ந்து, ஆயுதங்களை களையுமாறு கேட்கப்பட்டனர். இந்தக் குடிப்படைகள் சில ஆயுதங்களை அரசாங்கத்திடம் ஒப்படைத்தனர், எனினும்,

# இலங்கை

இந்தக் குழுக்கள் சில ஆயுதங்களைத் தம்வசம் வைத்திருப்பதாக அனேகமான நோக்கர்கள் நம்புகின்றனர். இந்தப் போராளிகளால் கடந்த காலத்தில் கொல்லப்பட்டவர்களில் அனேகமாக எல்ரிரிஈ செயற்பாட்டாளர்களும், பணப்பறிப்பு வற்புறுத்தல்களுக்குப் பணியத் தவறும் குடிமக்களும் இடம்பெற்றிருக்கக் கூடும்.

குறிப்பிட்ட ஆண்டின் போது பிரதானமாக வடக்கிலும் கிழக்கிலும் எல்ரிரிஈ தங்களுக்கு விரோதமான தமிழ் அரசியல் குழுக்கள் மற்றும் பாதுகாப்பு படைகளுக்கு தகவல் வழங்கியதாக கருதப்பட்டோருமாக 36க்குக் கூடுதலானோரைக் கொன்றதற்கு நம்பகமான ஆதாரம் உள்ளது. எல்ரிரிஈக்கு விரோதமான தமிழ் அரசியல் கட்சிகளைச் சேர்ந்த முன்னைய - தற்போதைய அங்கத்தவர்கள் ஆகிய இரு தரப்பினரையும் எல்ரிரிஈ குறி வைத்துத் தாக்கியுள்ளது. ஒப்பீட்டளவில் தெளிவான முனைப்புடைய ஒரு சம்பவமாக ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னனியின் துனைத்தலைவர் யாழ்ப்பாணத்தில் ஜூனில் சுட்டுக் கொல்லப்பட்டார். இராணுவத்தினர்க்குத் தகவல் தெரிவித்தான குற்றச்சாட்டின் பேரில் எல்ரிரிஈ அந்த ஆண்டின் போது பலரைக் குறிவைத்துக் கொன்றது. எல்ரிரிஈ யினது போன்று தோற்றும் ஒரு தாக்குதலில் ஒரு பொலிஸ் அதிகாரியும் கொழும்பில் கொல்லப்பட்டார். முன்னைய ஆண்டுகளில் போலன்றி அரசாங்கப் படைகளுக்கும் எல்ரிரிஈக்குமிடையே தாக்குதல்களோ அன்றி எதிர்த்தாக்குதல்களோ இடம்பெறவில்லை. எனினும் மார்ச் - ஜுன் மாதங்களில் இடம்பெற்ற இரு சம்பவங்களில் ஆயுதங்களையும் வெடிபொருட்களையும் ஏற்றிச்சென்றதான சாட்டுரையின் அடிப்படையில் கடற்படை, எல்ரிரிஈ கப்பல்களை மூழ்கடித்தது. இச்சம்பவங்கள் ஒவ்வொன்றிலும் அனேக எல்ரிரிஈ ஆட்கள் கொல்லப்பட்டனர். அந்த ஆண்டின்போது தற்கொலைக்குண்டுத்தாக்குதல்கள் இடம்பெற்றதற்கான ஆதாரங்கள் இல்லை.

### ஆ. காணாமல் போனமை

கடந்த ஆண்டின்போது, அரசியல் தூண்டுதலின் பேரில் பாதுகாப்புப்படைகளின் செயற்பாடு களினால்,ஆட்கள் காணாமல் போனதாகத் தகவலில்லை. 2000ம் ஆண்டில் மிருசுவில்லில் 8 தமிழ் குடிமக்கள் காணாமல் போனதாக அறிவிக்கப்பட்டிருந்தது. அவ்வாண்டின் இறுதியின்போது அது தொடர்பான வழக்கில் ஐந்து படைவீரர்கள் மீது கொலைக் குற்றஞ்சார்த்தப்பட்டு அவர்கள் விசாரணையை எதிர் நோக்கியிருந்தனர். (1அ 1சி பிரிவுகளைப் பார்க்க)

2000ம் ஆண்டில் திருகோணமலைக்கு அருகே கடற்படை வீரர்களால் கைது செய்யப்பட்ட ஒரு மீனவர், காணாமல் போயிருந்தார். 2002ல் திருகோணமலை உயர் நீதிமன்றம் பொலிஸ் அணிவகுப்பொன்றுக்கு உத்தரவிட்டிருந்தது, எனினும் அந்த சாட்சியினால் எந்தவொரு சந்தேக நபரையும் அடையாளங்காட்ட முடியவில்லை. 2002ம் ஆண்டு இறுதிவாக்கில், உயர் நீதிமன்றம், இவ்வழக்கு தொடர்பில் ஆட்கொணர்வு மீது விசாரணையொன்றை நடத்தியது, எனினும் ஆண்டின் இறுதி வாக்கில் மேலதிக முன்னேற்றம் எதுவும் ஏற்படவில்லை.

2001லும் அதற்கு முன்னைய ஆண்டுகளிலும் காணாமல் போனோர், வழக்கம் போல இறந்துவிட்டதாகவே கொள்ளப்பட்டது. கட்டாயத்தின் பேரில் அல்லது சுயமாகவே காணாமல் போனோர் பற்றி ஐ. நா. செயற்குழு, 2000ல் தயாரித்த ஓர் அறிக்கையில் மிகக் கூடுதலான ஒரு தொகையில், " தெளிவுபடுத்தப்படாத" காணாமல் போனமைக்குரியது, என்ற வகையில் நாட்டை நிரலிட்டிருந்தது. இராணுவத்தளபதி, பொலிஸ் மா அதிபர் ஆகிய இருவருமே, காணாமல் போனமைகளைக் கண்டித்து அவற்றுக்குக் காரணமானோர் வகை சொல்ல வேணடும் என்றும் தெரிவித்தனர்.

# இலங்கை

1994ல் அமைக்கப்பட்ட மூன்றும், 1998ல் ஒன்றுமாக நிறுவப்பட்ட நான்கு பிராந்திய விசாரணைக் குழுக்கள் 1988க்கும் 1994க்கும் இடைப்பட்ட காலப்பகுதியில் மொத்தம் 21,215 பேர் காணாமல் போன சம்பவங்கள் நிகழ்ந்துள்ளதாகும். அதிலும் பெரும்பான்மையானவை, 1988 -89 காலப்பகுதியில் ஜனதா விமுத்தி பெரமுனவின் (மக்கள் விடுதலை முன்னனி -ஜேவிபி) கிளர்ச்சியின்போது ஏற்பட்டன என்றும் அறிவித்திருந்தன. அனேகமானோர் தத்தமது வீடுகளிலிருந்து, சுயவிருப்பத்தின் பேரிலன்றிப் பலாத்காரமாக அகற்றப்பட்டனர் என்றும் அதிலும் கூடுதலானவை பாதுகாப்புபடையினரால் மேற்கொள்ளப்பட்டன என்றும் அவ்விசாரணைக் குழுக்கள் உண்மை நிலையைக் கண்டறிந்தன. இச்சம்பவங்கள் பல தொடர்பில் ஏ.ஜியின் அலுவலகம் தொடர்ந்து விசாரணைகளை நடத்தி வந்தது, ஆனாலும் ஆண்டின்போது முன்னேற்றங்கள் எதுவுமில்லை.

இந்நாள்வரை, பாதுகாப்புப் படையினர் சம்பந்தப்பட்ட விவகாரத்தில் ஒரு சில வழக்கு விசாரனைகளே இடம் பெற்றிருப்பினும், அவ்வாண்டின்போது பிந்துனுவெவப்படுகொலை (பிரிவு 1அ வைப்பார்க்க) யில் சம்பந்தப்பட்ட பாதுகாப்புப்படையினர், மற்றும் மிருசுவில் கொலைகள் (பிரிவுகள் 1அ, 1ஈ களைப்பார்க்க) தொடர்பில் சம்பந்தப்பட்டோர் உட்பட ஏனையவை மீதும் வழக்குகள் தொடரப்பட்டதுடன் விசாரணைகளும் மேற்கொள்ளப்பட்டு வந்திருக்கின்றன. 1996-1999 காலப்பகுதியில் யாழ்ப்பாணப்பகுதியில் நிகழ்ந்த காணாமல் போனமை சம்பந்தப்பட்ட விவகாரம் பற்றி விசாரனை நடத்துவதற்கென, அரசாங்கம் 2002, நவம்பரில் ஒரு புதிய விசாரணைக்குழுவை அமைத்தது, எனினும் அது அந்த ஆண்டின்போது எதுவித நடவடிக்கையும் எடுக்கவில்லை. ஐ.நா. செயற்குழுவொன்று கட்டாயத்தின் பேரில் அல்லது சுயவிருப்பமாகவே காணாமல் போனோர் பற்றி 1999ல் வெளியிட்ட ஓர் அறிக்கை, காணாமல்போனமைகளுக்கு பி.ரி.ஏ யும் ஈ.ஆரும் முக்கிய பங்களிப்புகளைச் செய்துள்ளன எனக் குறிப்பிட்டு சர்வதேச ரீதியில் அங்கீகரிக்கப்பட்டுள்ள மனித உரிமைகளின் தரங்களுக்கமைய அவற்றில் திருத்தங்கள் செய்யப்பட வேண்டும் அல்லது அவற்றை நீக்கிவிடவேண்டும்மென விதந்துரைத்தது. ஈ.ஆர் 2001ல் நீக்கப்பட்டுவிட்டது. 2002ல் அல்லது நடப்பு ஆண்டில் கைதுகள் எதுவும் செய்யப்படவில்லை, எனினும் முழுமையாகத் தேவைப்படும் பதிவெதுவுமின்றி தடுப்புக்கட்டளைகள் போன்ற சில கைதுகள் மேற்கொள்ளப்பட்டே வருகின்றன. அரசாங்கமும், பி.ரி.ஏயின் கீழ் முன்னர் தடுத்து வைத்திருந்த அனைவரையும் ஆண்டின் இறுதிவாக்கில் விடுதலை செய்யவில்லை.(பிரிவு 1.ஈ யைப்பார்க்க). சில வழக்குகள் தொடர்பில் அந்த ஆண்டின்போது மீள் பரிசீலனை தொடர்ந்தது.

முன்னைய பி.ஏ அரசாங்கத்துடன் இணைந்திருந்த தமிழ்க் குடிப்படைகளும், கடந்த ஆண்டுகளில் காணாமல் போனமைச்சம்பவங்களுக்குக் காரணமாயிருந்துள்ளன, எனினும் அந்த ஆண்டின்போது அத்தகைய சம்பவங்கள் எதுவும் நிகழ்ந்ததாகத் தகவலில்லை. குடிப்படைக் குழுக்களின் தவறான செயற்பாடுகளை விசாரிப்பதற்கு எச்.ஆர்.சிக்கு உரிய ஆணையோ அல்லது அதிகாரமோ இல்லை. இந்தக் குழுக்கள் இயங்குவதில் பின்பற்றப்பட்டுவரும் அந்தரங்க முறைமை காரணமாக, பாதிக்கப்பட்டோரின் சரியான எண்ணிக்கையை நிர்ணயிப்பது இயலாததாகவே உள்ளது. அரசாங்கம் 2002ல் இந்தக்குடிப்படைகள் கொண்டிருந்த ஆயுதங்களைப் பெருமளவில் களைந்தது.

எல்ரிரிஈ 2002ல் சில படைவீரர்கள் உட்பட 10பேரை விடுவித்துச் சர்வதேச செஞ்சிலுவைச்சங்கக் குழுவிடம் (ஐ.சி.ஆர்.சி) ஒப்படைத்தது. ஆண்டு இறுதியின்போது எல்ரிரிஈ கைதிகளை மேலும் தடுத்து வைத்திருக்கிறார்களோ என்பது சரியாகத் தெரியவில்லை, எனினும் அவர்கள் வைத்திருப்பதாகவே

# இலங்கை

அநேக நோக்கர்கள் நம்புகின்றனர்.

## இ. சித்திரவதை மற்றும் பலவிதகொடுமை, மனிதாபிமானமற்ற அல்லது தரக்குறைவாக நடத்தல் அல்லது தண்டனை வழங்கல்.

1994ன் சித்திரவதைச்சட்டத்திற்கெதிரான பொது இணக்க ஒப்பந்தம் (காட்டா, சிஏரிஏ) இந்த வதையைத் தண்டனைக்குரிய ஒரு குற்றச் செயலாகப்பிரகடனப்படுத்தியுளளது.நடைமுறையில் பாதுகாப்புப்படையினர், குறிப்பாக விசாரணையின்போது தடுத்துவைத்திருப்போரையும் மற்றைய கைதிகளையும் தொடர்ந்து சித்திரவதைக்குள்ளாக்கியும் முறைகேடாக நடத்தியும் வருகின்றனர். காட்டாவின் கீழ், சித்திரவதை குற்றவாளிகளாக காணப்படுவோர்க்கு குறைந்தது 7 ஆண்டுகால சிறைத்தண்டனை வழங்கும் திட்டவட்டதாமானதொரு பாரிய குற்றச் செயலாக விவரிக்கப்பட்டிருக்கிறது. இதனை மீறுவது தொடர்பில் உரிய நடவடிக்கை எடுப்பதற்கு உயர் நீதிமன்றத்திற்கு அதிகார எல்லையுண்டு. இந்த ஐ.நா.பொது இணக்க ஒப்பந்தத்துடன் காட்டா கணிசமான அளவில் “ ஒத்துப்போவதான” கருத்தை அரசாங்கம் நிலைநாட்டினும் அந்த ஒப்பந்தத்தின் பல ஏற்பாடுகளை காட்டா நிறைவேற்றுவதில்லை. மனித உரிமைகள் குழுக்களின் கணிப்பின்படி அதன் பெறுபேறு, குறிப்பிட்ட சூழ்நிலைகளின் கீழ் சித்திரவதை தடுக்கப்பட்டிருப்பினும் ஏனையவற்றின் கீழ் அது அனுமதிக்கப்படுவதாகவும் உள்ளது. எனவே ஒப்பீட்டளவில் குறைவான தண்டனை விலக்கீட்டுரிமையுடன் சித்திரவதை தொடர்கிறது. சித்திரவதை உட்பட எந்தச் சூழ்நிலைகளாயினுஞ்சரியே பெறப்படும், குற்றத்தை ஒப்புக்கொள்ளும் விதத்திலான சான்றுகள்,அந்நபர் நீதிமன்றத்துக்குக் கொண்டுவரப்படும்வரை ஒருவனைத் தடுத்து வைப்பதற்குப் போதுமான ஓர் ஆதாரம் என பி.ரி.ஏ நிலை நிறுத்துகிறது. சில நேர்வுவகைகளில் தடுப்பு பல ஆண்டுகளுக்கு நீடிக்கலாம். (பிரிவு 1 ஈயைப்பார்க்க)

சித்திரவதை முறைகளில், மின் அதிர்ச்சிப்பிரயோகம், அடுத்தடுத்தடித்தல், மணிக்கட்டுகள் அல்லது கால்களைச் சேர்த்துக்கட்டி கோணல்மாணலான நிலைகளில் தொங்க விடுதல், தீயினால் சுடுதல், மேசை இலாச்சுக்களிலிட்டு அண்டவிதைகளை அடித்தல், முச்சுத்திணறும் அளவுக்கு நீரில் அமிழ்த்தி வைத்தல் போன்றவையும் அடங்கும். ஏனைய நேர்வுவகைகளில் பலியாட்கள் நீண்டநேரத்திற்கு அசாதாரண நிலைகளில் இருப்பதற்குக் கட்டாயப்படுத்தப்படல், புழுப்பூச்சி கொல்லி மருந்து, மிளகாய்த்தூள் அடைத்த பைகளை உடலில் கட்டித்தொங்கவிடல், அல்லது எரிபொருட்களை தலைகள் மீது வைத்தல் என்பனவும் இடம்பெறும். அவர்களின் முறைகேடான கொடிய நடத்தைகளால், தங்களின் எலும்புகள் முறிந்ததாகவும், கடுமையான காயங்கள் ஏற்பட்டதாகவும் தடுத்துவைக்கப்பட்டோர் முறையிட்டனர். தடுப்புக்காவலின்போது, மரணங்களும் நேர்ந்திருக்கின்றன.(1 பிரிவு 1அ வைப்பார்க்க) 2000ம் ஆண்டு முதல் கைது செய்யப்பட்டோர் மீது நடத்தப்பட்ட மருத்துவப்பரிசோதனை பல்வேறு தரப்பட்ட சித்திரவதைகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டுவருவதைப் புலப்படுத்தியிருக்கிறது.

தடுப்புக்காவலில் வைக்கப்படும் சமயம், பாதுகாப்புப்படைகளைச் சேர்ந்த சிலர், தனிப்பட்டவர்களைச் சித்திரவதை செய்வதாக சில நம்பகரமான அரசசார்பற்ற அமைப்புகள் (என்.ஜி.ஓ) தெரிவித்திருக்கின்றன. உதாரணமாக ஏஷியன் ஹியுமன் றைற்ஸ் கமிஷன், (ஏ.எச்.ஆர்.சி) ,வேல்ட் ஓகனை டேஷன் எகெய்ன்ஸ்ற் த்றோச்சர் (ஓ.எம்.சி.ரி) ஆகியவற்றின் கூற்றுப்படி , பமுனுஆராச்சி பத்திரணலாகே சரத்குமார என்பவர் நவம்பர் 13 திகதி கைது செய்யப்பட்டு குளியாப்பிட்டி பொலிஸ் நிலையத்தில் சித்திரவதைக்கு உட்படுத்தப்பட்டதாகத் தெரிவித்துள்ளன. தாம் கைது செய்யப்பட்டதற்கான காரணம் அவருக்குத் தெரியப்படுத்தப்படவில்லை, ஆனாலும் அன்று பிற்பகுதியில் விடுவிக்கப்பட்டபோது, தாக்கப்பட்டும், முதுக்குப்புறமாக கைகள் கட்டப்பட்ட நிலையில் ஓர் உத்தரத்தில் தொங்கவிடப்பட்டிருந்தது சம்பந்தமாகவும்

# இலங்கை

எந்த ஒரு ஆஸ்பத்திரியிலும் தன்னை அனுமதித்துக்கொள்ளக் கூடாது என பொலிஸாரால் எச்சரிக்கை செய்யப்பட்டிருந்தார். எனினும் சரத்குமாரவின் சகோதரர் அவரை குளியாப்பிட்டிய ஆஸ்பத்திரிக்குக் கொண்டு சென்றார். அங்கு 3 நாட்கள் தங்கிச் சிகிச்சைபெற்ற பிறகு, குருநாகலைப் பொலிஸில் முறைப்பாடு செய்தார். ஓ.எம்.சி.ரி, ஏ.எச்.ஆர்.சி ஆகியவற்றின் கூற்றுப்படி , 16 வயதுடைய ஹிக்கடுவ லியனகே சந்துன் குமார செட்டம்பர் 13ந்திகதியும், அடுத்து வந்த பல நாட்களிலும் றத்கம, பொலிஸ் நிலையத்தில் வைத்து பொலிஸாரினால் கடுமையாகத் தாக்கப்பட்டிருக்கிறார். குமாரு தமது ஷேட்டினால் தன் தலை சுற்றிக்கட்டப்பட்ட நிலையில் அவரின் முகத்தின் மீது தண்ணீர் ஊற்றப்பட்டது, அந்தச் செயல் அவர், அனேகமாக மூச்சுத்திணறலுக்கு உள்ளாகும் நிலைமை ஏற்படுத்தியது. ஏனைய தாக்குதல்களுக்கிடையே அவரின் தலை சுவரில் மோதப்பட்டது. இவற்றின் காரணமாக அவர் பின்னர், செட்டம்பர் 21,23ந்திகதிகளில் கராப்பிடிய போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றார். இந்தச் சம்பவம்பற்றி ஓர் ஒழுக்காற்று விசாரணையை நடத்தும்படி உச்ச நீதிமன்றம், தேசிய பொலிஸ் ஆணைக்குழுவுக்கு உத்தரவிட்டதாக, ஏ.எச்.ஆர்.சி யும் ஓ.எம்.சி.ரி யும் தகவல் தெரிவித்தனர்.

2002 மார்ச்சில் தடுப்புக்காவலிலிருந்து விடுதலை செய்யப்பட்ட மாணவ தலைவன் திவ்வியன் கிருஷ்ணசாமி விவகாரத்தில் முன்னேற்றமெதுவும் இருக்கவில்லை. யாழ்ப்பாணத்திலுள்ள பாதுகாப்புப்படை தொடர்பில் அவர் வெளிப்படையாகவே விமர்சித்து வந்தார் என்றும், ஆகவே தான் அவர் தமது அரசியல் தீவிரம் காரணமாகக் கைது செய்யப்பட்டார் என மனித உரிமைகள் நோக்கர்கள் உரிமை பாராட்டினர். ஆனால் பொலிஸாரோ அவர் எல்ரிரிஈயுடன் தொடர்பு வைத்திருந்தார் எனத் தெரிவித்தனர். 2001ல் கைது செய்யப்பட்டதைத் தொடர்ந்து தாம் சித்திரவதைக்கு உட்படுத்தப்பட்டிருந்ததாக அவர் புகார் செய்திருந்தார். சித்திரவதை தொடர்பான அவரின் குற்றச்சாட்டுகளுக்கு ஆதரவாக யாழ்ப்பாண மாணவர் ஒன்றியம் 2001ம் ஆண்டு இலையுதிர் பருவத்தின்போது எதிர்ப்பு ஊர்வலங்களை நடத்தினர். வன்செயல்களைத் தவிர்ப்பதற்காக பல்கலைக்கழக நிர்வாகிகள், பல்கலைக்கழகத்தைத் தற்காலிகமாக மூடினர்.

தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருந்தபோது வன்புணர்ச்சியும், பாலீடுபாட்டு மோதல்களும் ஒரு பிரச்சனையாகவே இருந்தன. அது தொடர்பான பல வழக்குகள் நீதிமன்றங்களிலுள்ளன. சர்வதேச மன்னிப்புச்சபை(ஏ.ஜி)யின் கூற்றுப்படி களவுச்குற்றச்சாட்டின் பேரில் 2000 மார்ச்சில் கைது செய்யப்பட்ட நந்தினி ஹேரத் விவகாரமும் ஒன்று வாரியப்பொல பொலிஸில் தடுத்துவைக்கப்பட்டிருந்தபோது தாம் பால்வகையிலான இம்சைகளுக்கு உட்பட்டிருந்ததாக அவர் கூறியிருக்கிறார். ஜுலை 14ந்திகதி வாரியப்பொல பொலிஸ் நிலையப்பொறுப்பதிகாரி 1994ன் இலங்கைச் சித்திரவதைச்சட்டத்தின் கீழ் உயர் நீதிமன்றத்தினால் தண்டிக்கப்பட்டார்;ஆனால் அவர் பிணையில் விடுவிக்கப்பட்டார். ஆனால் பின்னர், அதில் சம்பந்தப்பட்ட வேறு ஐந்து அதிகாரிகளும் குற்றவாளிகளாக் காணப்பட்டனர். சுமத்தப்பட்டிருந்த குற்றச்சாட்டுக்களை விளக்கிக்கொள்ளவைக்கும் ஒரு முயற்சியாக ஹேரத்தும் அவரின் தகப்பனாரும் பொலிஸ்சாரால் மிரட்டப்பட்டதாகவும் அச்சுறுத்தப்பட்டதாகவும் ஏ.ஜி தெரிவித்திருந்தது. ஆண்டின் இறுதிவாக்கில் எவ்வித முன்னேற்றமும் ஏற்பட்டிருக்கவில்லை. 2001ல் மன்னாரில் கைது செய்யப்பட்ட 2 பெண்கள் தாக்கல் செய்திருந்த வழக்கில், தாங்கள் கடற்படை பொலிஸ் வீரர்களால் சித்திரவதைக்கு உட்படுத்தப்பட்டதாகவும், அவர்களால் தாங்கள் அடுத்தடுத்து வன்புணர்ச்சிக்கு ஆளானதாகவும் ஆணித்தரமாகக் கூறியிருந்தனர். வன்புணர்ச்சி சித்திரவதை அல்லது அவை இரண்டிற்காகவும் 14 உத்தியோகத்தர்கள் மீது வழக்கு விசாரனை நடந்தது. அந்த ஆண்டின்போது, குற்றம் புரிந்ததான இருவர் விடுதலை செய்யப்பட்டனர்; ஆண்டின் இறுதியின் போதும் வழக்கு விசாரணை தொடர்ந்தது. மனித உரிமைகள் மீறல் வழக்கொன்றும் (அடுத்த பந்தியைப் பார்க்க)

# இலங்கை

குற்றஞ்சார்த்தப்பட்டிருந்தோருக்கு எதிராகத் தொடரப்பட்டிருந்தது. பாதுகாப்பில் வைக்கப்பட்டிருந்த போது பெண்கள் மீது வன்புணர்ச்சி கொண்டதாகப் பாதுகாப்புப்படையினர் மீது குற்றம் சுமத்தப்பட்டிருந்த மேலும் நான்கு வழக்குகள் மீதான விசாரணைகள் ஆண்டின் இறுதியின் போது இடைநிறுத்தி வைக்கப்பட்டிருந்தன.

அரசியலமைப்பில், மனித உரிமைகள் ஏற்பாடுகளின் கீழ் சித்திரவதைக்கு உள்ளான பலியாட்கள், நஷ்ட ஈடுகோரி, உயர் நீதிமன்றங்களிலோ அல்லது உச்ச நீதிமன்றத்திலோ சிவில் வழக்குத் தொடுப்பதற்கு வகை செய்யப்பட்டிருக்கிறது. நீதி மன்றங்கள், ஏறத்தாழ 150 டொலர்கள்(14,200ரூபாய்கள்) முதல் 1940 டொலர்கள் வரை (182,500 ரூபாய்கள்) வரையிலான தொகைகளை நஷ்டஈடாக வழங்கியுள்ளன. சில நேர்வுகளைப் பொறுத்தவரை, சித்திரவதைகளுக்காகக் குற்றவாளிகளாகக் காணப்பட்ட பாதுகாப்புப்படையின் மீது விதிக்கப்பட்ட தெண்டப்பணங்களை அரசாங்கம் செலுத்தவில்லை. வழக்கை விசாரித்த நீதிபதியின் தீர்மானத்தின் அடிப்படையில் அரசாங்கமோ அன்றி குற்றமிழைத்த தரப்போ தெண்டப்பணங்களைச் செலுத்தவில்லை.

சித்திரவதை முறைப்பாடுகள் தொடர்பில் கருத்தினைக் கூர்ப்புடன் ஈர்ப்பதற்காக ஏ.ஜியின் அலுவலகமும் குற்ற விசாரனைப்பிரிவும் உரிய கூறுகளை அமைத்தன. அந்த ஆண்டின்போது, அப்பிரிவுகள் வழக்குத் தொடர்வதற்காக 50 நேர்வுகளை அனுப்பியிருந்தன; அவற்றில் 20 மீது வழக்குகள் பதிவு செய்யப்பட்டன; ஆனால் குற்றத் தீர்ப்பு ஏதும் வழங்கப்படவில்லை .மனிதஉரிமைகள் விவகாரங்கள் தொடர்பில் பாராளுமன்றங்களுக்கிடையேயான நிரந்தர நிலையான குழுவும், சர்வதேச அமைச்சுக்களுக்கிடையேயான செயற் குழுவும், சித்திரவதை பற்றிய குற்றவியல் விசாரணையை கண்டறிவதில் தொடர்ந்தும் ஈடுபட்டிருந்தன.

இராணுவம், சாகடிக்காதவிதத்திலான பல தவறானவகைச் செயற்பாடுகளில் ஈடுபட்டிருந்திருக்கிறது. உதாரணத்திற்கு அகதிகள் சபையின் (ஆர்.சி) கூற்றுப்படி, ஒக்டோபர் 22ல் படையினர் யாழ்ப்பாணம், பருத்தித்துறைக்கருகே முனையில் குடிமக்களைத் தாக்கியதில் 20 பேர் காயமடைந்தனர். மற்றொரு சம்பவத்தில் ஓர் இராணுவ வீரர் யாழ்ப்பாணத்தில் டிசெம்பர் 8ல் பஸ் நடத்துனர் ஒருவரைச் சுட்டுக் கடுமையாகக் காயப்படுத்தினார். இச்சம்பவம் தொடர்பில் யாழ்ப்பாண மஜஸ்ரேற் நிதிமன்றம் 3 படைவீரர்களைத் தடுப்புக்காவலில் வைத்தது.

ஆண்டின் இறுதிவாக்கில், ஐந்து இராணுவ வீரர்கள் மிருசுவில்லில், இராணுவத்தினால் சித்திரவதை செய்யப்பட்டுக் கொல்லப்பட்டதாக கொள்ளப்படும். எட்டுத் தமிழர்களின் உடல்கள் 2000ம் ஆண்டில் தோண்டி எடுக்கப்பட்டது தொடர்பிலான வழக்கில் விசாரணையை எதிர்நோக்கியிருந்தன. (பிரிவுகள் 1அ,1ஆ வைப்பார்க்க) தண்டனையிலிருந்து விலக்கீட்டுரிமை வழங்கப்படுவது ஒரு பிரச்சனையாகவே இருந்துள்ளது. மனித உரிமைகளை மீறியதான குற்றங்களைப்புரிந்திருக்கக் கூடும் எனக் கொள்ளப்படும் இராணுவத்தைச் சேர்ந்தோர் மீதான பெரும்பான்மை வழக்குகளைப் பொறுத்தவரை, அரசாங்கம் அவற்றிற்குப்பொறுப்பானவர்களை அடையாளங்காட்டவில்லை அல்லது நீதியின் முன் நிறுத்தவில்லை. சித்திரவதை மீதான 2000ம் ஆண்டின் ஐ.நா குழு அறிக்கை , 2001ல் அரசாங்கத்திடம் சமர்ப்பிக்கப்பட்டது; ஆனால் ஆண்டின் இறுதி வாக்கிலும் கூட அது பொதுமக்களின் பார்வைக்காக வெளியிடப்படவில்லை. கடந்த காலத்தில் முன்னைய பி.ஏ அரசாங்கத்துடன் இணைத்திருந்த தமிழ்ப் போராளிகள் சித்திரவதைகளில் ஈடுபட்டிருந்தனர்; எனினும் அந்த ஆண்டின் போது அத்தகைய செயற்பாடுகள் இடம்பெற்றதாகத் தெரியவில்லை. எல்ரிரிஈ ஓர் ஒழுங்குமுறையிலான அடிப்படையில் சித்திரவதையைப் பயன்படுத்தி வந்திருக்கிறது.

# இலங்கை

சிறைக்கூட நிலைமைகள் பொதுவில் மோசமானதாகவே இருந்துள்ளன. கைதிகள் அளவுக்கு அதிகமாக வைக்கப்பட்டமை, உடல் நலத்திற்குகந்த வசதிகளின் பற்றாக்குறை என்பன காரணமாக அவை சர்வதேசதரங்களை எட்டியிருக்கவில்லை. பெண்கள் ஆண்களிடமிருந்து பிரித்து வைக்கப்பட்டிருந்தனர். சில நேர்வுகளில் இளமைப்பருவத்தினர், வயதுவந்தோர்களிடமிருந்து பிரித்துத் தனியாக வைக்கப்படவில்லை. மன்று விசாரணைக்காகத் தடுத்து வைக்கப்பட்டோர், குற்றவாளிகளாகக் காணப்பட்டோரிடமிருந்து வேறாக பிரித்து வைக்கப்பட்டிருக்கவில்லை. அரசாங்கம் அந்த ஆண்டின் போது சிறைக்கூடங்கள் மற்றும் இராணுவ மறியல்சாலைகள் உட்பட தடுப்பு வசதிகளைக் கொண்ட 33 அரசாங்க அமைவுகளுக்கு சுயேச்சையான மனித உரிமைகள் மற்றும் ஐ.சி.ஆர்.சி சார்ந்த பார்வையாளர்களை 69 தடவைகள் சென்றுவர அனுமதித்திருந்தது. எச்.ஆர்.சி யும் 690 பொலிஸ் நிலையங்கள் மற்றும் தடுப்பு வசதிகளைக் கொண்ட 96 அமைவுகளுக்கும் சென்று வந்தது. (பிரிவு 1 ஈ யைப் பார்க்க) ஐ.சி.ஆர்.சி, எச்.ஆர்.சி என்பனவற்றின் கூற்றுப்படி இறைக்கூட வசதிகள் பொதுவாக மோசமானதாய் இருந்துள்ளதுடன், அவை சர்வதேச தரங்களை எட்டியிருக்கவுமில்லை.

எல்ரிரிஈயினால் நடத்தப்பட்டுவரும் தடுப்பு நிலையங்களிலும் நிலைமைகள் மோசமானதாகவே இருந்துள்ளன. ஐ.சி.ஆர்.சி, எட்டுத்தடவைகள் அவற்றிற்கு விஜயம் செய்துள்ளது. 2000ம்ஆண்டில் தடுத்து வைக்கப்பட்டிருநதோர் விடுதலை செய்யப்பட்டது, மற்றும் 2002ம் ஆண்டில் தடுத்து வைக்கப்பட்டிருந்த ஏனைய இராணுவ வீரர்கள் விடுதலை செய்யப்பட்டதான தோற்றத்தின் காரணமாக ஐ.சி.ஆர்.சி, முன்னைய ஆண்டுகளைவிட குறைந்த எண்ணிக்கையிலான எல்ரிரிஈ தடுப்பு நிலையங்களுக்கே சென்று வந்தது. (பிரிவு 1 ஈ யைப் பார்க்க)

**ஈ தன்னிச்சையான கைது, தடுப்பு அல்லது நாடுகடத்தல்.**

அந்த ஆண்டின்போது தன்னிச்சையான கைதுகளும் தடுத்து வைக்கப்பட்டமையும் சம்பவித்ததாக அறிக்கைகள் தெரிவித்தன. சட்டத்தின் கீழ் நாம் கைது செய்யப்பட்டதற்கான காரணத்தை அதிகாரிகள் கைதுசெய்யப்பட்டவருக்கு கட்டாயம் தெரியப்படுத்த வேண்டும், அத்தோடு அவரை 24 மணித்தியாலங்களுக்குள் ஒரு மஜஸ்ற்றேற்க்கு முன் ஆஜர்படுத்த வேண்டும். நடைமுறையிலோ தடுத்து வைக்கப்பட்ட ஆட்கள் பொதுவாக ஒரு சில நாட்களுக்குள் ஒரு மஜஸ்ற்றேற்றுக்கு முன் கொண்டுவரப்படுகின்றனர். அவர் பிணையை அனுமதிக்கலாம்; அல்லது 3 மாதங்கள் வரை அல்லது அதற்குக் கூடுதலான காலத்திற்கு விசாரணைக்கு முன்னதான விதத்தில், தொடர்ந்து தடுத்துவைப்பதற்கான உத்தரவைப் பிறப்பிக்கலாம். கைது செய்யப்படும்போது பாதுகாப்புப் படையினர் கைதுக்கான ஒரு பற்றுச்சீட்டை வழங்க வேண்டும். இந்த நடைமுறைத்தரத்தை அமுல் செய்வதற்கு அரசாங்கம் சில முயற்சிகளை மேற்கொண்டிருப்பினும், முன்னைய ஆண்டுகளில் இந்தப்பற்றுச்சீட்டு வழங்கல் மிக அரிதாகவே பின்பற்றப்பட்டிருக்கிறது. கடந்த காலத்தில் கைதுப்பற்றுச்சீட்டு வழங்குவதில் இருந்த குறைபாடு அந்நேர்வுகள் தொடர்பில் போதுமான அளவில் சம்பந்தப்பட்டவர்களைத் தேடிக்கண்டுபிடிக்கும் முயற்சிகள் தடங்கலுக்குள்ளாகியிருப்பதோடு அவ்வாறு தடுத்துவைக்கப்பட்டோர் விடயத்தில் எத்தகையோரையும் நேரடிப்பொறுப்புக்கு உட்படுத்தமுடியாதுள்ளதால் அவர்கள் நீண்டகாலம் தடுத்து வைக்கப்படுவதற்கும் சித்திரவதைக்கு ஆளாவதற்கும் ஏதுவாக அமைகிறது. குறிப்பிட்ட ஆண்டிலுங்கூட சில நேர்வுகள் விடயத்தில் கைதுப்பற்றுச்சீட்டுகள் வழங்கப்படாதிருந்துள்ளது. அரசியலமைப்பின் 17வது திருத்தத்திற்கமைய அரசாங்கம் 2002 டிசெம்பரில் தேசிய பொலிஸ் ஆணைக்குழுவை (என்.பி.சி) அமைத்தது. முற்றிலும் சிவிலியங்களையே உள்ளடக்கியதான என்.பி.சி, நியமனம், பதவிஉயர்வு, இடமாற்றம், ஒழுக்காற்று,

# இலங்கை

பொலிஸ் மா அதிகாரி தவிர்ந்த ஏனைய அனைத்துப் பொலிஸ் அதிகாரிகளையும் பதவி நீக்கம் செய்தல் ஆகிய அனைத்து அதிகாரங்களையும் கொண்டுள்ளது. அத்தோடு பொலிஸுக்கு எதிராகப் பொதுமக்கள் தெரிவிக்கும் புகார்களை விசாரணை செய்வதற்கான நடைமுறைகளை ஏற்படுத்துவதற்கும் அதற்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டுகளின் போது, இராணுவம் பொதுவாக ஈ.ஆர்.இன் கீழ் தான் கைது செய்தோரை 24 மணித்தியாலங்களுக்குள் பொலிஸிடம் கையளித்தது, எனினும் பொலிஸும், இராணுவமும் எல்லாச் சந்தர்ப்பத்திலும் கைதுப்பற்றுச்சீட்டுகளை வழங்கவில்லை அல்லது அவைபற்றி 24 மணிநேரத்துக்குள்ளாக எச்.ஆர்.சிக்குத் தெரிவிக்கவுமில்லை. கைதுசெய்யப்பட்டோரைச் சென்று பார்ப்பதற்கு பொதுவில் பொலிஸார் கண்ணியப்படுத்தும் விதத்தில் சட்டப்படியான அதிகாரத்தைக்கொண்டுள்ளது. செய்தித்தணிக்கை மற்றும் அடிக்கடி சென்று வருவதற்கான வாய்ப்பின்மை காரணமாக எல்ரிரியின் கட்டுப்பாட்டிலுள்ள பகுதிகளில் நிலவும் நிலைமைகளை நோக்கர்களால் சரியாக மதிப்பிட முடியாதுள்ளது.

ஜுனில் தமிழர்கள் கூடுதலான அளவில் கைதுசெய்யப்பட்ட சில சம்பவங்கள் நிகழ்ந்துள்ளன. எனினும் கைது செய்யப்பட்டவர்களில் மிகப் பெரும்பான்மையானோர் அதனை அடுத்து சொற்ப நேரத்தின் பின்னர் அவர்கள் விடுதலை செய்யப்பட்டனர். கடந்த காலத்தில் எல்ரிரிஈ யினர்க்கெதிரான நடவடிக்கையின் போதே, அனேக தடுப்புக்காவல் சம்பவங்கள் நிகழ்ந்துள்ளன. அனேகமான தடுப்புக் காவல்கள் மிகக் கூடுதலாகப் பல நாட்கள் நீடித்தன. ஆனாலும் சில பல மாதங்கள் நீடித்தன. ஆண்டின் இறுதிவாக்கில், பி.ரி.ஏயின் கீழ் குற்றஞ்சார்த்தப்பட்ட 65 தமிழர்கள், பிணை வழங்கப்படாத நிலையில், வழக்கு விசாரணைகளுக்காக காத்திருந்தனர். 2002ம் ஆண்டின்போது பி.ரி.ஏயின் கீழ் கைதுசெய்யப்பட்ட 750க்கும் கூடுதலான தமிழர்களை அரசாங்கம் விடுதலை செய்தது, எதிர்க்கட்சியைச்சேர்ந்த சிரேஷ்ட உறுப்பினர்கள் மற்றும் தமிழ்ப் பிரதிநிதிகளை உள்ளடக்கியதும் பாதுகாப்புப்படையினரால் மேற்கொள்ளப்படும் தகாத கைது, தொல்லைகள் பற்றி விசாரணை நடத்துவதற்கென நியமிக்கப்பட்டதுமான குழு அவை பற்றிய புகார்களையிட்டுப் பரிசீலனை செய்து (சி.ஐ.யூ.ஏ.எச்), அவசியமான பரிகார நடவடிக்கையை மேற்கொள்கிறது. சி.ஐ.யூ.ஏ.எச் இன் ஆற்றல் திறன் தொடர்பிலான கருத்துக்கள் வெவ்வேறினவாக கலந்திருந்தன. அக்குழுவின் பணி, அன்றொங்கின்றொன்றாக நிகழும் கைதுச்சம்பவங்களையும், தடுத்து வைக்கப்படுவோரிலும் அவர்களின் குடும்பங்களினாலும் எதிர் கொள்ளப்படும் பிரச்சனைகளை இலகுவாக்குவதற்கும் உதவித்தயக்கமுண்டுபண்ணி தடுத்திருக்கிறது. சி.ஐ.யூ.ஏ.எச் ஆண்டு முழுவதிலும் தொடர்ந்து கூட்டங்களை நடத்தி வந்திருப்பினும் அது குறிப்பிடத்தக்கான நடவடிக்கை எதையும் எடுக்கவில்லையென ஏனையோர் கருதினர்.

உச்ச நீதிமன்றமும் தனிப்பட்டவிதத்தில் ஆட்கள் தடுத்து வைக்கப்பட்டமை குடிமக்களதும் தொடர்பில் தாக்கல் செய்திருந்த வழக்குகள் பற்றித் தனது கருத்துக்களை அறிவதற்காக எச்.ஆர்.சிக்கு அனுப்பியிருந்த ஆவணங்களையிட்டு அவற்றின் சட்ட பூர்வத்தன்மையை அது விசாரணை செய்துள்ளது. பாதுகாப்புப்படையினரால் மேற்கொள்ளப்படும் கைதுகள் தடுத்து வைத்தல் போன்றவை தொடர்பில் கண்காணிப்பினைக் கொண்டிருப்பதற்கும் சிறைச்சாலைகளுக்குச் சென்றுவருவதற்கும் எச்.ஆர்.சி க்குச் சட்டபூர்வமான அதிகாரமிருப்பினும் பாதுகாப்புப்படை உறுப்பினர்கள் சில சமயங்களில் அந்த விதிமுறைகளை மீறியும், எச்.ஆர்.சி யுடன் ஒத்துழைக்கவும் தவறியுள்ளனர்.

தடுத்துவைக்கும் நிலையங்கள் என உத்தியோக பூர்வமாக ஏற்றுக்கொள்ளப்பட்ட ஏறத்தாழ 160 தடுப்பு நிலையங்கள் பொலிஸ் நிலையங்கள் மற்றும் இராணுவ முகாம்கள் என்பனவற்றிற்குத்

# இலங்கை

தங்கு தடையற்ற விதத்தில் சென்றுவருவதற்கு அரசாங்கம் ஐ.சி.ஆர்.சி க்கு அனுமதி வழங்கி வந்துள்ளது. ஈ.ஆர், 2001ல் காலாவதியானதின் காரணமாகவும், அதனைத் தொடர்ந்து இராணுவம் முன்னைய ஆண்டுகளைவிட குறைந்த அளவிலேயே ஆட்களைக் கைது செய்து அவ்வாறு தடுத்து வைக்கப்பட்டவர்களை அதி துரிதமாக பொலிஸ் வசதிகொண்ட இடங்களுக்கு மாற்றியமையும், இராணுவத் தளங்களில் தடுத்துவைக்கப்பட்டோரின் எண்ணிக்கை, வியக்கத்தக்கு விதத்தில் குறைந்தது. போர் நிறுத்த இணக்கம், ஏற்பட்டதுடன் இராணுவத்தினால் மேற்கொள்ளப்பட்டுவந்த கைதுகளின் எண்ணிக்கை, அதிசயிக்கத்தக்கவிதத்தில் குறைவு கண்டது.

எல்ரிரிஈ கடந்த காலத்தில் சிவிலியன்களைக் கைதுசெய்து தடுத்துவைத்து வந்தது. இத்தகைய நிகழ்வுகள் அடிக்கடி நிகழ்ந்தது, பணம் பறிப்பதற்காகவே அந்த ஆண்டின்போது இந்த நடைமுறை இருந்துவந்துள்ளதாக அறிக்கைகள் தெரிவித்தன. அதிலும் குறிப்பாக கிழக்கில் முஸ்லிம்கள் கடத்தப்பட்டன. பல தரப்பட்ட செய்திகள் வெளிவந்த வண்ணமாக இருந்தது. வழக்கமாக முஸ்லிம்கள் கடத்தப்பட்ட கையொடு கோரும் மீட்புப்பணம் செலுத்தப்பட்டதும் விடுவிக்கப்பட்டுவிடுவர். ஆண்டின் இறுதியின் போது எல்ரிரிஈ முஸ்லிம்களைத் தடுத்து வைத்திருந்ததற்கான செய்திகள் எதுவும் வெளிவரவில்லை. கட்டாயத்தின் பேரில் நாடுகடத்தப்படுவதை அனுமதிப்பதற்கு சட்டப்படியான ஏற்பாடுகள் எதுவுமில்லை, அத்தோடு அரசாங்கம் அதனை நடைமுறையில் பின்பற்றவுமில்லை.

## உ. நியாயமான பகிரங்க வழக்கு விசாரணை மறுப்பு

அரசியலமைப்புச் சட்டம், சுகந்திரமானதொரு நீதிமுறைமைக்கு வகை செய்கிறது. அரசாங்கம் நடைமுறையில் இந்த ஏற்பாட்டுக்கு பொதுவாக மதிப்பளித்து வருகிறது. ஜனாதிபதியே உச்ச நீதிமன்றம், உயர் நீதிமன்றம் மற்றும் முறையீட்டு நீதிமன்றம் என்பனவற்றிற்கு நீதிபதிகளை நியமனம் செய்கிறார். பிரதம நிதியரசர் மற்றும் 2 உச்ச நீதிமன்ற நிதியரசர்களைக்கொண்ட ஒரு நீதிசேவை ஆணைக்குழு, கீழமட்ட நீதிமன்ற நீதிபதிகளை நியமிப்பது மற்றும் இடம்மாற்றஞ் செய்வது தொடர்பிலான பொறுப்புக்களை கொண்டுள்ளது. நடத்தைக்கேடு அல்லது தகைமையீனம் காரணமாக நீதிபதிகள் பதிவியிலிருந்து அகற்றப்படக் கூடும், ஆனால் விசாரணை நடத்தப்படுவதைத் தொடர்ந்து ஜனாதிபதி -பராளுமன்றம் ஆகியோரின் கூட்டுச் செயற்பாட்டை அடுத்தே அத்தகைய நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது.

குற்றவியல் வழக்குகளைப் பொறுத்தவரை, குற்றம்சார்த்தப்பட்டவர்களை ஜுரர்கள் பகிரங்கமாக விசாரணை செய்கின்றனர். அவர்களுக்கு சார்த்தப்பட்டுள்ள குற்றங்கள் பற்றியும் உள்ள சாட்சியங்கள் பற்றியும் தெரிவிக்கப்படுவதோடு தங்களின் சார்பில் வாதிடச் சட்டத்தரணிகளை அமர்த்துவதற்கும் ,முறையீடு செய்வதற்கும் உரிமை வழங்கப்பட்டிருக்கிறது. குற்றவியல் சார்ந்த வழக்குகளில் விசாரணைக்குட்படும் வறுமைப்பட்ட ஆட்களுக்குத் தங்களின் சார்பில் வாதாட, உயர்நீதிமன்றத்திலும், மேன்முறையீட்டு நீதிமன்றத்திலும், அரசாங்கம் வழக்கறிஞர்களின் சேவையை வழங்குகிறது; ஆனால் ஏனைய வகைப்பட்ட வழக்குகளில் இவ்வுதவி வழங்கப்படுவதில்லை. குற்றஞ்சார்த்தப்பட்டோருக்கு தனிப்பட்ட வகையில் சட்டஉதவி வழங்கும் அமைப்புக்கள் , உதவிபுரிந்துவருவதும் குறிப்பிடத்தக்கது. அத்தோடு தங்களைப் பிரதிநிதித்துவப்படுத்துவதற்கு வசதியற்ற நிலையிலுள்ளொருக்குகாக நீதி அமைச்சு , சமூக சட்ட உதவி நிலையங்களை நடத்திவருவதோடு, அவற்றை அவ்அவ்விடங்களிலுள்ள சமுதாயங்களுக்கு அறிவு புகட்டும் வள நிலையங்களாகவும் பயன்படுத்தி வருகிறது. எனினும் ஆண்டு இறுதிவாக்கில் அந்த சட்ட உதவி நிலையங்கள் எந்தவொரு வழக்கையும் நடத்தவில்லை. பி.ரி.ஏ யின் கீழ் தொடரப்படும் வழக்குகளில் ஜுரர்கள் அற்றதான விசாரணைகளும் இடம்பெற்றே வருகின்றன. குற்றவியல் வழக்கு விசாரணைகளின்போது, சித்திரவதை உட்பட பல்வேறு முறைகேடான வழிகளில் பலாத்காரமாகப்

## இலங்கை

பெறப்படும் வாக்கு மூலங்கள் ஏற்றுக்கொள்ளப்படுவதில்லை. ஆனால் பி.ரி.ஏ யின் கீழ் அவை அனுமதிக்கப்படுகின்றன. அத்தகைய தங்களின் வாக்கு மூலங்கள் முறைகேடான விதங்களில் பெறப்பட்டன என்பதை ஆதார பூர்வமாக நிரூபிக்கும் பாரிய பொறுப்பு குற்றஞ்சார்த்தப்பட்டவர்களையே சார்ந்துள்ளது. பி.ரி.ஏ வழக்குகளைப் பொருத்தவரை அவர்களுக்கு மேன்முறையீடு செய்யும் உரிமையுண்டு. சில வழக்குகளைப் பொறுத்தவரை நீதி மீள்பரிசீலனைக்கு அமைய தங்களின் வழக்கு விசாரணைக்காக நிர்வாகக்கட்டளைக்கியைய 18 மாதங்கள் வரை சிறையில் கழிக்க நேரிடலாம். அவர்கள் மீதான வழக்குகள் விசாரணைக்கு வந்ததும் ஒப்பீட்டளவில் தீர்ப்புகள் விரைவாகவே வழங்கப்பட்டுவிடுகின்றன.

கொழும்பிலும் தெற்கிலும் அநேகமான நீதிமன்ற விசாரணைகள் ஆங்கிலம் அல்லது சிங்களத்திலேயே நடைபெறுகின்றன. இதற்கு காரணம் நீதிமன்றத்தில் நியமனம் செய்யப்படும் உரைபெயர்பாளர் எண்ணிக்கை குறைவாயிருப்பதாகும். இதன் காரணமாக தமிழ் பேசும் பிரதிவாதிகள் நியாயமானதொருவிதத்தில் தமது கட்சியை எடுத்துரைப்பதில் உள்ளதகைமை மட்டுப்படுத்தப்படுகிறது என்பது யதாத்தம். வடக்கிலும் கிழக்கிலும் வழக்கு விசாரணைகளும் சாட்சியங்களின் பதிவுகளும் தமிழிலும் ஆங்கிலத்திலும் இடம்பெறுகின்றன. ஆனால் அனேக சிக்கலான வழக்குகள் -பயங்கரவாதத்துடன் தொடர்புடையவை உட்பட கொழும்பில் விசாரணை செய்யப்படுகிறது. மஜேஸ்ற்றேற் நிலையில் தமிழ் பேசும் நீதிபதிகள் உள்ள போதிலும் 4 உயர் நீதிமன்ற நீதிபதிகளும் ஒரு மேன்முறையீட்டுமன்ற நீதிபதியும் ஓர் உச்ச நீதிமன்ற நீதிபதியுமே தமிழை சரளமாகப் பேசக்கூடிய ஆற்றலுடையவர்கள். தமிழில் ஒரு சில சட்டப்பாட நூல்களும் ஒரேயொரு சட்ட அறிக்கையுமே உள்ளன. அனைத்துச்சட்டங்களையும் ஆங்கிலம் சிங்களம், தமிழ் ஆகிய மொழிகளில் வெளியிட அரசாங்கம் மெதுவாக நடவடிக்கை எடுத்துவருகிறது.

திருமண வயது, விவாகரத்து, சொத்துப்பங்கீடு என்பன தொடர்பில் பெண்களுக்குப் பாகுபாடு காட்டும் சில சொந்தமுறைச்சட்டங்களின் சில அம்சங்கள், தொடர்ந்து இருந்து வருவதை அரசாங்கம் அனுமதிக்கிறது. (பிரிவு 5ஐப்பார்க்க) கடந்த காலத்தில் யாழ்ப்பாணத்தில் நீதிமன்ற அதிகாரிகளுக்கு எதிராக எல்ரிரிஈ விடுத்துவந்த பயமுறுத்தல்கள், சில சமயங்களில் வழக்கமான நீதிமன்றச் செயற்பாடுகளைக் குழப்பியுள்ளன. 2000ம் ஆண்டில் பாதுகாப்புக் காரணங்கள் கருதி யாழ்ப்பாண நீதிமன்றம் செயற்பாடுகளை இடைநிறுத்தியிருந்தும் அது 2001ல் மீண்டும் திறக்கப்பட்டு, அது முதல் தொடர்ச்சியாகச் செயற்பட்டுவருகிறது. அவ்வாண்டின்போது, எல்ரிரிஈ முன்னர் வடக்கிலும் கிழக்கிலும் அரசாங்கத்தின் நீதி முறைமைக்கு உட்பட்டிருந்த பகுதிகளில் தனது சொந்த நீதிமன்ற முறைமையின் செயற்பாட்டினை விரிவுபடுத்தியது. அந்த விரிவாக்கலோடு, சகல தமிழ்க்குடிமக்களும் அரசாங்க நீதி முறைமைப்பயன்பாட்டினை நிறுத்தி, எல்ரிரிஈ யின் சட்டமுறைமையில் மட்டுமே தங்கியிருக்கவேண்டுமென எல்ரிரிஈ வற்புறுத்தியது. எல்ரிரிஈ அந்த மாற்றத்தைப் பலாத்காரப்பயமுறுத்தல் மூலமே நடைமுறைப்படுத்தியதாக நம்பகரமான தகவல்கள் உணர்த்தின.

எல்ரிரிஈ குறுகிய சட்டஅறிவு அல்லது சட்டத்துறையில் பயிற்சியெதுவுமற்ற நீதிபதிகளை உள்ளடக்கியதானதும் தன்னளவில் பெருமை பாராட்டிக்கொள்வதுமான தனது சொந்த சட்ட முறைமையைக்கொண்டுள்ளது. எல்ரிரிஈ நீதிமன்றங்கள், தொகுத்தமைக்கப்படாத அல்லது வரையறை செய்யப்படாத சட்டமுறைமையைக் கொண்டதாகவும் ஒரு சுயேச்சையான நீதிமுறைமைக்குப்புறம்பாக யதார்த்தத்தில் எல்ரிரிஈயின் முகவர்களாகவுமே செயற்பட்டுவருகின்றன. இந் நீதிமன்றங்கள் மரண தண்டனை உட்பட மிகக்கடுமையான தன்டனைகளை விதிப்பதாகச் சொல்லப்படுகிறது. பி.ரி.ஏ யின் கீழ் தடுத்துவைக்கப்பட்ட அனைவருமே எல்ரிரிஈ உறுப்பினர்களாகச் சந்தேகிக்கப்படுவோர் என்றும் எனவே சட்டப்படி அவர்களால் பாதுகாப்புக்குப் பயமுறுத்தல்கள் உண்டு என்றும் அரசாங்கம் உரிமை பாராட்டுகிறது.

## இலங்கை

இவ் உரிமைக் கூற்றைச்சரி பார்ப்பதற்கும், தடுத்துவைக்கப்படும் இத்தகையோர் அரசியல் கைதிகள்தானா என்பதை நிாணயிப்பதற்கும் குறையளவிலான தகவலே உள்ளது. பல நேர்வுகளைப் பொறுத்தவரை மனித உரிமைகள் கவணிப்பாளர்கள் இத்தகையோர்க்கெதிராகக் கொண்டுவரப்படும் குற்றவியல் புகார்களின் சட்டபூர்வத்தன்மை பற்றிவினாவியுள்ளனர். 2002ல் ஏ.ஜி 750 பி.ரி.ஏ வழக்குகளைத் தள்ளுபடி செய்தார். அந்த ஆண்டின் போது, பி.ரி.ஏ யின் கீழ் குற்றஞ்சார்த்தப்பட்ட 65 தமிழர்கள் தடுப்புக்காவலில் இருந்துள்ளனர். எஞ்சியுள்ளோர் விவகாரத்தை பொறுத்தவரை அவர்கள் தற்கொலைக் குண்டுத்தாக்குதல்கள் அல்லது ஏனைய பயங்கரவாத மற்றும் குற்றவியல் சார்ந்த செயற்பாடுகளில் மட்டுமே நேரடியாகச் சம்பந்தப்பட்டவர்கள் என அரசாங்கம் உரிமை பாராட்டியது. எல்ரிரிஈ அனேக அரசியல் கைதிகளைத் தடுத்து வைத்திருப்பதாக அறிவிக்கப்பட்டிருந்தது. இந்த அமைப்பின் அந்தரங்கத்தன்மை காரணமாக எண்ணிக்கையை நிர்ணயிக்கமுடியாதுள்ளது. இந்தச்சிறைக்கைதிகளைச்சென்று பார்ப்பதற்கு எல்ரிரிஈ , ஐ.சி.ஆர்.சிக்கு அனுமதி மறுத்துள்ளது.

### ஊ அந்தரங்கம்,குடும்பம், இல்லம் அல்லது கடிதத்தொடர்பு என்பவற்றில் தன்னிச்சையான தலையீடு.

அந்தரங்கம் பேனுவதற்குள்ள உரிமைக்கு, அரசியலமைப்புச் சட்டம் வகை செய்கிறது. நடைமுறையில் அரசாங்கம் இந்த ஏற்பாட்டை பொதுவில் மதித்தே வருகிறது, எனினும் சில துறைகளில் பிரஜையின் அந்தரங்க உரிமைகளை அது மீறுகிறது. சாதாரண சட்டத்தின் கீழ் ஆட்களைக் கைது செய்வதற்கும், தேடுதல்களை நடத்துவதற்கும், பொலிஸார் பொதுவாகவே உரிய பற்றாணைகளைப் பெற்றுக்கொள்கின்றனர். எனினும் காலாவதியான ஈ.ஆர் அல்லது பி.ரி.ஏ யின் கீழ், தேடுதல்களை நடத்துவதற்குப் பாதுகாப்புப்படைகளுக்குப் பற்றானைகளைப் பெறுவது அவசியமில்லை. அத்தகைய தேடுதல்களை நடத்துவதற்கான கண்காணிப்புகளை மேற்கொள்ளும் பொறுப்பு பாதுகாப்பு அமைச்சின் செயலாளரைச் சார்ந்ததாகும். ஒரு தேர்வு அடிப்படையில் தொலைபேசி உரையாடல்களையும் கடிதத்தொடர்புகளையும் அரசாங்கம் ஒற்றுணர் ரீதியில் கண்காணித்து வருவதாக நம்பப்படுகிநது. எனினும் அவ்வாண்டின்போது பாதுகாப்புப்படைகள் அத்தகைய செயற்பாடுகளில் ஈடுபட்டிருந்ததாக எந்தத் தகவலுமில்லை.

2002 செப்டெம்பரில் அரசாங்கம் எல்ரிரிஈ மீது விதிக்கப்பட்டிருந்த தடையுத்தரவை நீக்கியது. இதன் கருத்தானது வெறுமனே அவர்களின் அந்தஸ்துக்காரணமாக எல்ரிரிஈ உறுப்பினர் இனிமேலும் கைதுகளுக்கு ஆளாகமாட்டார்கள் என்பதாகும். செயற்திறன்மிக்க தகவல் தெரிவிப்போர்களைக்கொண்ட ஒரு வலையமைப்பை வைத்திருப்பதன் மூலம் எல்ரிரிஈ ஓர் ஒழுங்கு முறையாகவே பிரஜைகளின் அந்தரங்க செயற்பாடுகள் மீது எல்லைமீறி தலையீடு செய்து வந்திருக்கிறது. எல்ரிரிஈ அவ்வாண்டின்போது பிள்ளைகளை வலுக்கட்டாயமாக இயக்கத்தில் சேர்த்து வந்திருக்கிறது. (பிரிவு 6 ஈ யைப்பார்க்க). எனினும் அவ்வாண்டின்போது 141 பிள்ளைகளையும் எல்ரிரிஈ விடுதலை செய்துள்ளது. 2002 பிற்பகுதியில் சுய விருப்பத்தின் பேரில் சேவையில் சேர்ந்ததாகக் கூறியும் எல்ரிரிஈ பிள்ளைகளை ஏற்றுக்கொள்ளவில்லை எனத் தெரிவித்தும் அது, மேலதிகமாக 85 பிள்ளைகளையும் யுனிசெப்பிடம் ஒப்படைத்தது. (பிரிவு 6 ஈ யைப் பார்க்க) எல்ரிரிஈ முன்னைய ஆண்டுகளில் போலன்றி முஸ்லிம்களை அவர்களின் வீடுகளிலிருந்து வெளியேற்றியதான செய்திகள் எதுவும் வெளிவரவில்லை.

# இலங்கை

## எ. உள்வெளிச்சர்ச்சைகளில் அத்து மீறிய பலாத்காரப்பிரயோகமும், மனிதாபிமானச்சட்ட மீறல்களும்

2001ல் டிசெம்பரில், ஒரு தலைப்பட்சமான போர்நிறுத்தம் அறிவிக்கப்பட்டதையும், 2002 பெப்ரவரியில் முறையானதொரு போர்நிறுத்த இணக்கப்பாடு ஏற்பட்டதையும் தொடர்ந்து அரசாங்கத்திற்கும் எல்ரிரிஈக்குமிடையே இருந்துவந்த பகைமைச் செயற்பாடுகள் தனிந்தன. இதனைத் தொடர்ந்து இரு தரப்பினரும் ஒரு தொகைக் கைதிகளை விடுதலை செய்ததோடு, யாழ்ப்பாணத்தை நாட்டின் ஏனைய பகுதிகளுடன் இணைக்கும் பிரதான நெடுஞ்சாலையின் திறப்பும் இடம்பெற்றது. பகைமைச் செயற்பாடுகளின் தணிவு, நாடெங்கிலும் வீதித்தடைகள், பரிசோதனை நிலைகள் என்பனவற்றில் குறிப்பிடத்தக்கதான குறைப்புக்கு இட்டுச் சென்றதுடன் ஏறத்தாழ 341,000 ஐடிபிக்களே வடக்கிலும் கிழக்கிலுமுள்ள தத்தமது சொந்த இருப்பிடங்களுக்குத் திருப்பிச் செல்லவும், பாதுகாப்புப் படையினரின் செயற்பாடுகள் பற்றிய விசாரனைகளை ஆரம்பிப்பதற்கும் வழிவகுத்தன.

2002 ஏப்பரலில் நிலாவொலி கடற்படை ஆட்கள் துப்பாக்கிப் பிரயோகம் செய்து இரு தமிழ்ப்பெண்களைக் காயப்படுத்தினர். சம்பவத்தின் பின்னனி தெளிவானதாக இருக்கவில்லை எனினும், ஆண்டின. இறுதி வாக்கில் இச்சம்பவம் தொடர்பிலான விசாரணை தொடர்ந்து சென்றது. 2001ல் இராணுவம் மனித உரிமைகள் மற்றும் மனிதாபிமானச்சட்டம் தொடர்பிலான இயக்குனர் குழுமத்தை உருவாக்கியது. ஐ.சி.ஆர்.சி யின் உதவியுடன் இராணுவத்திற்கான சகல மனித உரிமைகள் செயற்பாடுகளுக்குமான பயிற்சிகளை அளிப்பதுடன், இராணுவத்திற்கென நாடெங்கிலும் ஒதுக்கப்பட்டுள்ள மனிதஉரிமைகள் கூறுகளைக் கண்காணிப்பது உட்படக் கூட்டிணைக்கும் பணி அனைத்தும் இந்தக் குழுமத்திற்கு ஒப்படைக்கப்பட்டிருந்தது. தனது பணியாட்கள் அனைவரும் பொருத்தமான பயிற்சியினைப் பெற்றுவிட்னர் என்றும் சர்வதேச மனிதாபிமானச்சட்டத்தை ஏற்று நடப்பதாக வாக்குறுதி அளித்துள்ளனர் என்றும் இராணுவம் தெரிவித்தது. 2002 முற்பகுதியில் விமானப்படையும் கடற்படையும் இதே மாதிரியான திட்டங்களை ஆரம்பித்தன. குடிமக்கள் வாழும் பகுதிகளில் பீரங்கிச் சூடு, குண்டு வீச்சு அல்லது மிகையான துப்பாக்கிச்சூட்டுப் பிரயோகம் என்பது மேற்கொள்ளப்படுவது தொடர்பில் ஆயுதப்படைகள் எழுத்து மூலமான கட்டளைகளுக்கமையச் செயற்பட்டதால் அத்தகைய நடவடிக்கைகளில் ஈடுபடுவது கடுமையான விதத்தில் கட்டுப்படுத்தப்பட்டிருந்தது. அவ்வாண்டின்போது அதிகாரிகளுக்கும் அத்தகைய மனித உரிமைகள் பயிற்சித்திட்டத்தைக் கட்டாயமானதாக்கி நடத்தத் தொடங்கியதுடன் இராணுவம் அதற்கான ஆட்களையும் திரட்டியது.

எல்ரிரிஈயின் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் உள்ளோர் உட்பட இடம் பெயர்ந்த மற்றும் உதவி தேவைப்பட்ட பிரஜைகளுக்குமாக அரசாங்கம் அத்தியாவசிய சேவைகளுக்கான கமிஷனர் ஜெனரல் மற்றும் பலநோக்குச் கூட்டுறவுச்சங்கங்கள் ஊடாக உணவு நிவாரணத்தை தொடர்ந்து வழங்கிவந்தது. வடக்கில் எல்ரிரிஈ யின் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் ஒன்றான வன்னிப்பகுதிக்கும், அரசாங்கம் ஒரு புறத்தில் பாதுகாப்புப் படையினராலும் மறுபுறத்தில் எல்ரிரிஈயினராலும் கட்டுப்படுத்தப்பட்டிருக்கும் ஒரு பரிசோதனை நிலையத்தின் ஊடாக உணவுப்பங்கீடுகளை விநியோகித்துவந்தது. எல்ரிரிஈ யினால் கட்டுப்படுத்தப்பட்டுள்ள பிரதேசத்திற்குள் செல்வதற்கான எல்லை ஆண்டு முழுவதும் திறந்திருந்தது. முன்னைய ஆண்டுகளிற் போலன்றி, விரிவான அரசாங்கத்தின் மேற்பார்வையற்றவிதத்தில், என்.ஜி.ஓக்கள் உதவிகளை எல்ரிரிஈ யின் கட்டுப்பாட்டுப்பகுதிக்குள் நகர்த்த முடிந்துள்ளது.

# இலங்கை

போர்நிறுத்த ஒப்பந்த நியதிகளை நேரடியாகவே மீறும்விதத்தில் அரசாங்கத்தின் கட்டுப்பாட்டிலுள்ள பகுதிகளுக்குள் ஆயுதங்களுடன் சென்ற பல எல்ரிரிஈ ஆட்கள் கைது செய்யப்பட்டதாக 2002ல் பாதுகாப்பு அமைச்சு அறிவித்திருந்தது. அத்தகையோரில் அநேகரை மிகஅண்மையிலுள்ள எல்ரிரிஈ யின் பரிசோதனை நிலைகளில் அரசாங்கம் ஒப்படைத்துவிட்டதாக அறிவிக்கபட்டிருந்தது. எனினும் சிலர் நீண்ட காலத்திற்குத் தடுத்துவைக்கப்பட்டனர். முன்னர் இராணுவம் தான் கைது செய்த அல்லது தன்னிடம் சரன் அடைந்த எல்ரிரிஈ போராளிகளை மறுவாழ்வு நிலையங்களுக்கு அனுப்பி வந்தது. அரசாங்கத்தினால் பண்டாரவளைக்கு அணித்தாகவுள்ள பிந்துனுவெவயில் நடத்தப்படும் அத்தகைய நிலையமொன்றில் 2000ம் ஆண்டு ,20க்கும் கூடுதலான அத்தகையோர் படுகொலை செய்யப்பட்டதைத்தொடர்ந்து, இத்தகைய நிலையங்களில் பராமரிக்கப்படுவோரின் பாதுகாப்புக் குறித்து நோக்கர்கள் தொடர்ச்சியாக வினா எழுப்பிவரினும், ஐ.சி.ஆர்.சி, அத்தகைய முகாங்களில் முன்னார் எல்ரிரிஈ உறுப்பினர்களைச் சென்று பார்த்து வருகிறது. (பிரிவுகள் 1அ ,1எ யைப் பார்க்க) முன்னைய ஆண்டுகளில் நிலவிய பகைமைச் செயற்பாடுகள் பெருமளவிலான எல்ரிரிஈ இழப்புகள் என்பனவற்றின் அளவு கருதி போர்க்கள நிலமைகளின் கீழ் சிறைப்பிடிக்கப்பட்டோரின் எண்ணிக்கை குறைவாக இருந்ததை சில நோக்கர்கள் அவதானித்துள்ளனர்.

அனேகமான எல்ரிரிஈ போராளிகள் கைதிகளாகக் கொண்டுசெல்லப்பட்டதற்கு மாறாகக் கொல்லப்பட்டுவிட்டது போல தெரிவதாக நோக்கர்கள் முடிவு செய்தனர். அரசாங்கத்தரப்பைப் பொறுத்தவரை “கைதுகள் செய்யாதே” என்ற வகையில் எழுத்தில்லாத ஒரு கொள்கை பின்பற்றப்பட்டு வந்ததாக சில நோக்கர்கள் நம்பினர். போர் முனையிலிருந்து காயப்பட்டோரை எடுத்துச் சென்றுவிடுவதான எல்ரிரிஈ யின் முயற்சிகள், கைதுசெய்யப்படுவதைவிட தற்கொலை செய்வது மேல் என்ற அவர்களது போராளிகளின் தேர்ந்த விருப்பு ,மிகமோசமாகக் காயமடைந்த தனது போராளிகளை அவ்விடத்திலேயே கொன்றுவிடும் எல்ரிரிஈ யின் நடைமுறை என்பன போன்ற வேறு காரணிகள் இவ்வாறு கைதிகளின் எண்ணிக்கைக் குறைவுக்குத் துணை போயிருக்கலாம் எனக் கூறி இராணுவம் இந்த உரிமைக்கோரிக்கையை மறுதளித்துள்ளது. அவ்வாண்டின்போது பாதுகாப்புப்படையினர் எல்ரிரிஈ ஆட்களைத் தூக்கிலிட்டதாக எத்தகவலுமில்லை. முன்னைய ஆண்டுகளில் அரசாங்கத்தின் பொறுப்பில் ஒப்படைக்கப்படும் காயமடைந்த எந்தவொரு எல்ரிரிஈ போராளிக்கும் மருத்துவ சிகிச்சை வழங்க அரசாங்கம் முன்வைத்தபோதும் நிவாரண அமைப்புகள் அத்தகைய உதவிகளை வழங்க அது அனுமதிக்கவில்லை. நம்பகரமான தகவல்களின்படி அரசாங்கத்திடம் சரணடையும் காயமடைந்த எல்ரிரிஈ போராளிகள் உரிய மருத்துவக் கவனிப்பைப் பெற்றுவந்துள்ளனர்

.கடந்த காலத்தில் பாதுகாப்புப்படை ஆட்களைச் கைதிகளாகச்சிறைப்பிடித்துச் செல்வதைவிடத் தாங்கள் கொன்றுவிட்டதாக எல.ரிரிஈ ஒப்புக்கொண்டது. காயமடைந்த படை வீரர்களைப் போர்முனையில் வைத்தே எல்ரிரிஈ கொன்றுவிடுவதைக் கடந்த காலச் கண்ணால்கண்ட சாட்சியங்கள் உறுதிப்படுத்தியுள்ளன. ஆண்டின் இறுதியின்போது தான் தடுத்துவைத்திருந்த அனைத்துப்பாதுகாப்புப்படை ஆட்களையும் விடுவித்துவிட்டதாக எல்ரிரிஈ அறிவித்திருந்தது, எனினும் அது கடந்த சில ஆண்டுகளில் கைது செய்திருந்த பொலிஸ் அதிகாரிகள் மற்றும் பாதுகாப்புப்படையினரில் அனேகமானோரைக் கொன்றுவிட்டதாகவே நம்பப்படுகிறது.

குடிமக்களைக் குறிவைப்பது உட்பட எல்ரிரிஈ, வழக்கமாகவே போரில் அளவுக்கதிகமான பலாத்காரத்தைப் பயன்படுத்தி வந்துள்ளது. 2001 டிசெம்பரில் சமாதான நடைமுறை ஆரம்பமான பின் எல்ரிரிஈ ஆட்கடத்தல், ட்றக்களில் கொண்டுசெல்லப்படும் பொருட்களைக் கொள்ளையிடல், பிள்ளைகள் உட்பட கட்டாயத்தின் பேரில் ஆட்சேர்ப்பு போன்ற செயற்பாடுகளில் ஈடுபட்டு வந்திருக்கிறது. அந்த

# இலங்கை

ஆண்டின்போது எல்ரிரிஈ அதன் ஆட்சேர்ப்புச் செயற்பாட்டினை அதிகரித்திருப்பதாக நம்பகரமானவட்டாரங்கள் பரவலாகக் கருதுகின்றன. 13முதல் 17வயதுவரையிலான சிறுவர்கள், எல்ரிரிஈ முகாங்களிலிருந்து தப்பி ஓடுவதாக அடிக்கடி செய்திகள் வெளிவந்தன. குறிப்பிட்ட ஆண்டின்போது எல்ரிரிஈ 141 சிறார்களை விடுவித்தது. (பிரிவுகள் 1ஊ,5பஜப் பார்க்க). அவ்வாண்டின்போது இலங்கை போர் நிறுத்தக்கண்காணிப்புக்குழு (எஸ்.எல்.எம்.எம்) வுக்கு சிறுவர்கள் கடத்தப்பட்டது தொடர்பில் ஏறத்தாழ 200 புகார்கள் கிடைத்துள்ளன. அவர்கள் சிறார் போராளிகளாகவே திரட்டப்பட்டனர் என நம்பகரமான தகவல்கள் தெரிவித்தன. அத்தகைய சிறார்களை தொண்டர்களே என சிரேஷ்ட எல்ரிரிஈ அதிகாரிகள் வெளிநாட்டு அதிகாரிகளுக்குத் தெரிவித்துள்ளனர் என நம்பப்படுகிறது. அவ்வாண்டின்போது எல்ரிரிஈயும் யுனிசெப்பும் அந்தச் சிறுவர்படையணியைக் கலைத்து அந்தச் சிறார் வீரர்களுக்கு புனர்வாழ்வு அளிப்பதில் ஓர் இணக்கப்பாட்டுக்கு வந்து, வயது குறைந்தோரைப் படையில் சேர்ப்பது உட்பட சிறுவர்களை வேலைக்கு அமர்த்துதல் சம்பந்தமான விவகாரங்கள் தொடர்பில் ஒரு செயற்திட்டத்தை நடைமுறைப்படுத்த முனைந்தன. எனினும் இந்தத்திட்டத்தினைத் தொடர்ந்து மேற்கொள்வதில் எல்ரிரிஈயின் பங்களிப்பு சொற்பமானதாகவே இருந்துள்ளது. ஐடிபிகளின் பாவனைக்கென அனுப்பப்படும் உணவு, எரிபொருள் மற்றும் அவசியமான பொருட்களை எல்ரிரிஈ பலாத்காரமாகப் பறித்தெடுத்ததன் மூலம் எல்ரிரிஈயின் கட்டுப்பாட்டிலுள்ள பகுதிகளில் வாழும் அத்தகைய மக்களின் அவல நிலைமை மேலும் மோசமாக்கிவிட்டது. எல்ரிரியின் கட்டுப்பாட்டிலுள்ள பகுதிகளிலும், வன்னிப்பிரதேசத்தின் ஏனைய பகுதிகளிலும், போசாக்கு மட்டங்கள், தேசிய சராசரி மட்டத்தைவிட மிகவும் குறைந்து காணப்பட்டன. இதன் விளைவாக இரத்தச்சோகை ஓர் உயர் மட்டத்திலும், பிறப்புவீதம் குறைந்திரு ந்ததாகவும் நிபுனர்கள் தெரிவித்தனர்.

கண்ணிவெடிப் பிரச்சனை யாழ்ப்பாணத்திலும் வன்னியிலும் சொற்ப அளவில் கிழக்கிலும் அதி மோசமான பிரச்சனையாக உருவெடுத்திருந்தது (பிரிவு 5ஜப் பார்க்க) .நிலக்கண்ணி வெடி, மிதிவெடி மற்றும் வெடிக்காத வெடிப்பொருட்கள் என்பன இடம்பெயர்ந்த மக்களின் மீள் குடியேற்றத்திற்கும், மீள் நிர்மாணப்பணிகளுக்கும் ஒரு பிரச்சனையாகவே இருந்துள்ளன. 2002ம் ஆண்டின் இறுதியின்போது ஓர் ஐக்கிய நாட்டுக் குழாம், நாட்டின் கண்ணிவெடி புதைக்கப்பட்ட பகுதிகளை வரையறை செய்வதற்கான இணைப்புப்பணிகளைத் தொடங்கி, கண்ணிவெடி அகற்றும் வேலைகளை மேற்பார்வை செய்வதற்கான ஓர் அமைப்பை நிறுவியது. அவ்வாண்டின்போது ஐ.நா.குழுவொன்று நாட்டின் கண்ணிவெடி அகற்றும் பணிகளில் தங்களை ஈடுபடுதிக்கொண்டுள்ள 12 அமைப்புகளினதும் தகவல்களை பங்கீட்டுக்கொள்வதான ஒரு முறைமையில் கண்ணிவெடி புதைக்கப்பட்டுள்ள பகுதிகளை இனங்காட்டும் வரைபடங்கள் அடங்கிய தரவுத்தளமொன்றை அமைத்தது. அவ்வாண்டின் போது இராணுவமும் எல்ரிரிஈயும் தத்தமது கட்டுப்பாட்டின் கீழுள்ள பகுதிகளில் கண்ணிவெடிகளை அகற்றின. மாதமொன்றுக்கு கண்ணிவெடி தொடர்பில் குடிமக்களுக்கு 15 வரையிலான பாரிய பாதிப்புகள் சம்பவித்துள்ளதாக அரசாங்கம் அறிவித்தது.

## பிரிவு 2 பொதுத்துறை சார்ந்த சிறப்புரிமைகளுக்கு மதிப்பளித்தல், உட்பட
## அ. பேச்சுரிமையும் எழுத்துரிமையும்

பேச்சுரிமைக்கும் எழுத்துரிமைக்கும் அரசியலமைப்புச் சட்டம் வகை செய்கிறது. அரசாங்கம் நடைமுறையில் இந்த உரிமைகளுக்கு பொதுவில் மதிப்பளிக்கிறது. கடந்த காலத்தில் சட்டம் அனுமதிக்கும் தேசிய பாதுகாப்புக் காரணங்களைப் பயன்படுத்தி,அரசாங்கம் இந்த உரிமைகளை மட்டுப்படுத்தி வந்திருக்கிறது. 2002ல் சுகந்திர ஊடகங்களின் வெளியிட்டுவாயில்களைப் அரசாங்கத்தினால் பயமுறுத்த அடிக்கடி பயன்படுத்தப்பட்டு வந்த குற்றவியல் அவதூறுச்சட்டங்கள் ஒழிக்கப்பட்டன. 2001ல் போர்ச் செய்திகளை வெளியிடுவது தொடர்பில் மேற்கொள்ளப்பட்டிருந்த செய்தித்தணிக்கையை அரசாங்கம்

## இலங்கை

உத்தியோகபூர்வமாக நீக்கியது. எனினும் அரசாங்கத்தின் திட்டவட்டமான செய்தித்தணிக்கை அமுலில் இல்லாத போதிலுங்கூட, தனியார் தொலைக்காட்சி நிலையங்கள் நாட்டில் மறு ஒளிபரப்புச் செய்யப்பட்ட சர்வதேச தொலைக்காட்சிச் செய்திகள் மீது, சுயமாகவே தனிமுறையான விதத்தில் தணிக்கை செய்திருந்தன.

நாட்டின் மிகப்பெரிய செயிதித்தாள் சங்கிலித் தொடரினையும் இரண்டு பெரிய தொலைக்காட்சி நிலையங்களையும் ஒரு வானொலி நிலையத்தையும் அரசாங்கம் சொந்தத்தில் கொண்டிருந்தபோதும் தனியார் வசமுள்ள பல்வேறு தரப்பட்ட சுயேச்சையான செய்தித்தாள்களும் சஞ்சிகைகளும் வானொலி மற்றும் தொலைக்காட்சி நிலையங்களும் ஊடகங்கள் மீது மேலாட்சி நிலையைக் கொண்டிருந்தன. அனேகமான சுகந்திர ஊடக இல்லங்கள், அரசாங்கத்தையும் அதன் கொள்கைகளையும் சுகந்திரமாக விமர்சித்து வந்தனர். புதிய ஊடக அமைப்புகளை நிறுவுவதில் அரசாங்கம் எந்தவித அரசியல் மட்டுப்பாடுகளையும் விதிக்கவில்லை. ஜனாதிபதி 2000மாம் ஆண்டில் வெளியிடப்பட்ட ஒரு சுற்று நிருபத்தில் வெளிநாட்டுச் செய்தியாளர்கள் மீது விதிக்கப்பட்டிருந்த செய்தித்தணிக்கை மட்டுப்பாடுகளை உத்தியோக பூர்வமாகத் தளர்த்தியிருந்தார். எனினும் தணிக்கைச்சட்டங்கள் 2001ல் நீக்கப்பட்டதுவரை படைப்பாளி எவராயிருப்பினும் சரியே, நாட்டிற்குள் இடம்பெற்ற பிரசுர ஒலிபரப்புச் சாதனங்கள் அரசாங்கத்தின் அங்கீகாரத்திற்கு உட்பட்டதாகவே இருந்துவந்தன. தனியார் ஊடகங்கள் மீதான தொல்லைகள் பயமுறுத்தல்கள் குறைவடைந்தன.

‘ “எல்லைகளற்ற நிருபர்கள்” என்ற றிப்போட்டர்ஸ் விதபுட் போர்டோர்ஸ் -(ஆர்.டபிள்.யு.பி) எல்ரிரிஈ தலைவர் ஒருவருடன் நேர்காணல் ஒன்றை சற்று முன்னரே நடத்திமுடித்திருந்த (இதனை பிபிசி ஒலிபரப்பியிருந்தது) பிரிடிஷ் ஒலிபரப்புக் கூட்டுத்தாபன நிருபர் பொன்னையா மாணிக்கவாசகம் மீது ,மே 7ந் திகதி கொலைப்பயமுறுத்தல் விடுக்கப்பட்டது தொடர்பில், ஜனாதிபதிக்கும் பிரதமமந்திரிக்கும் கடிதம் எழுதியிருந்தது. மாணிக்கவாசகம் நிலைகொண்டிருந்த வடக்குப்பட்டணமான வவுனியாவில் இரண்டு சிங்களச் செய்தியாளர்கள் எல்ரிரிஈ உறுப்பினர்களால் பயமுறுத்தப்பட்ட ஒரு சில நாட்களின் பின் அவர் மீதான கொலைப் பயமுறுத்தலுக்கு ஈழ மக்கள் ஜனநாயகக்கட்சி அரசாங்க சார்ப்புடைய துணைப்படைத் திறன் கொண்ட ஒரு குழுவே காரணம் என தான் நம்புவதாக அதில் தெரிவித்திருந்தது. மாணிப்பாயிலும் நெல்லியடியிலும் 4 செய்தியாளர்கள் இராணுவத்தால் தாக்கப்பட்டதை எதிர்த்து ஒக்டோபர் 12ல் யாழ்ப்பாணத்துச் செய்தியாளர்களை அச்சம்பவத்திற்கு வலுச்சேர்க்கும் விதத்தில் ஆர்ப்பாட்மொன்றை நடத்தியதாக ஆர்.சி தெரிவித்திருந்தது. 2002ல் அவமதிப்புச் சட்டங்கள் விலக்கிக்கொள்ளப்பட்டதுடன் அச்சட்டங்களோடு தொடர்புடைய சகல வழக்குகளும் கைவிடப்பட்டன.

இலங்கை தமிழ் ஊடகக் கூட்டமைப்பு (எஸ்.எல்.ரி.எம்.ஏ) தாங்கள் தமிழ்த்துணைப்படைத்திறன் கொண்ட குழுக்களாலும் அரசாங்கப் பாதுகாப்புப்படைகளாலும் தொல்லைகளுக்கும் அச்சுறுத்தல்களுக்கும் ஆளாகிவருவதால் தமிழ் செய்தியாளர்களின் நலன்களைப் பாதுகாப்பதற்கென 1999ம் ஆண்டில் அமைக்கப்பட்டது. யுத்தப்பிரதேசங்களில் பணியாற்றிவரும் பிரரந்திய தமிழ் நிருபர்களை கடந்த காலத்தில் தன்னிச்சையான கைதுகளுக்கும் தடுப்புக்காவலில் வைக்கப்படுவதற்கும் ஆளாகி வந்ததாகவும் பத்திரிகையாளர்களுக்கான சான்றிதழ் பெறுவதில் கஷ்டங்கள் அநுபவித்துவந்ததாகவும் புகார் தெரிவிக்கப்பட்டிருந்தது. எஸ்.எஸ்.ரி.எம்.ஏ தமிழ்ச்செய்தியாளர்களின் சாப்பில் வழக்குகள் தொடர்ந்தது; ஆனால் அதன் வழக்குகள் நீதிமன்றங்களில் வெற்றியளிக்கவில்லை. இலங்கை பத்திரிகை முறைப்பாடுகள் ஆணைக்குழு ஊடகங்களுக்கு எதிரான மக்கள் தங்களுடைய முறைப்பாடுகளை முன் வைப்பதற்கு

# இலங்கை

ஏதுவாக அவ்வாண்டின்போது ஏற்படுத்தப்பட்டது. நவம்பரளவில் அது முழுமையாகச் செயற்பட ஆரம்பித்து புகார்களை விசாரணை செய்யத் தொடங்கியது.

முன்னைய ஆண்டுகளில் போலன்றி உள்ஊர் -மற்றும் வெளிநாட்டுச்செய்தியாளர்கள் சண்டை நடைபெற்ற இடங்களுக்குச் சென்றுவருவதில் கட்டுப்பாடுகள் இருக்கவில்லை. எல்ரிரிஈ கருத்துச் சுகந்திரத்தைச் சகிக்கவில்லை. அது தனது கட்டுப்பாட்டுக்கு உட்பட்ட பகுதிகளில் அச்சு மற்றும் ஒலிபரப்பு ஊடகங்களை இறுக்கமாக மட்டுப்படுத்தியிருந்தது. ஆர்.டபிள்யு.பி யின் கருத்துப்படி ஆகஸ்ற் 7ந் திகதி கிழக்கிலுள்ள மட்டக்களப்பு நகரக்கருகே ஆயுதம்தரித்த 50 எல்ரிரிஈ தீவிர செயற்பாட்டாளர்கள் தமிழ்மொழி வாரவெளியீடான தினமுரசுப்பத்திரிகை விநியோக வாகனமொன்றை மறைந்திருந்து கைப்பற்றி அதன் 5000 பிரதிகளைத் தீயிட்டுக் கொழுத்தினர். கடந்த காலத்தில் எல்ரிரிஈ மனித உரிமைகள் பற்றி எழுதிய செய்தியாளர்களையும் வெளியீட்டாளர்களையம் கொன்றுள்ளது.

2002ல் பாதுகாப்பு விவகாரங்கள் தொடர்பில் ஓர் ஒழுங்கு முறையாக எழுதிவரும் ஒரு பிரபல செய்தியாளரின் வீட்டுக்குள் பலாத்காரமாகப் புகுந்து அவரைப்பயமுறுத்திய இரண்டு விமானப்படை ஆட்கள் குற்றவாளிகளாகக் காணப்பட்டனர். 9 ஆண்டுகால சிறைத்தண்டனைக்கு உள்ளான அவர்களிருவரும் பிணையில் விடுவிக்கப்பட்டனர்; அவர்கள் அவ்வாண்டின்போது அக்குற்றச்சாட்டுக்கு எதிராக தொடர்ந்து மேன்முறையீடு செய்தனர்.

அரசாங்கம் கணனி வலையமைப்பு வசதியைப்பயன்படுத்துவது தொடர்பில் கட்டுப்பாட்டு விதிக்கவில்லை. அரசாங்கம், புத்திஜீவிகளின் சுகந்திரமான செயற்பாடுகளினதும் கட்டுப்பாடு விதிக்கவில்லை. எல்ரிரிஈ, கல்விமான்களின் சுகந்திரத்தை மட்டுப்படுத்தியதோடு அதன் செயற்பாடுகளைக் கண்டித்த புத்திஜீவிகளை ஒடுக்கியதுடன் கொல்லவும் செய்தது. மனித உரிமைகளுக்கான பல்கலைக்கழக ஆசிரியர்கள் அமைப்பு (யூ.ரி.எச்.ஆர்) போன்ற மனிதஉரிமை அமைப்புகளையும் ஏனைய குழுக்களையும் சேர்ந்த உறுப்பினர்களையும் மோசமாக அடக்கி ஒடுக்கி வந்துள்ளது. யு.ரி.எச்.ஆரின் அனேக உறுப்பினர்கள் கொல்லப்பட்டிருக்கின்றனர், ஏனையோர் ஒழிந்து மறைந்து வாழ்கின்றனர்.

### ஆ. அமைதியான மக்கள் மன்றங்கள் சங்கங்கள் என்பனவற்றுக்கான சுகந்திரம்

மக்கள்மன்றங்கள், சங்கங்கள் என்பனவற்றின் சுகந்திரமான இயக்கங்களுக்கு சட்டம் வகை செய்கிறது. அரசாங்கமும் இந்த உரிமைக்கு நடைமுறையில் பொதுவாக மதிப்பளித்து வருகிறது. இந்த சுகந்திரத்தை மட்டுப்படுத்துவதற்கு பி.ரி.ஏ பயன்படுத்தப்படலாம் எனினும் அவ்வாண்டின்போது, அரசாங்கம் அச்சட்டத்தை இந்த நோக்கத்திற்காகப் பயன்படுத்தவில்லை. அவ்வாண்டின்போது நாடெங்கிலும் பெரும் எண்ணிக்கையிலான சமாதான அரசியல் கூட்டங்களும் அரசியல்தன்மையற்ற மாபெரும் திரளணிகளும் இடம்பெற்றிருக்கின்றன. மக்கள் கருத்துக்கணிப்பு ஒன்று இடம்பெறுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கும் வேலையில் அரசியல்தன்மையுடையதான திரளணிகளும் ஆர்ப்பாட்ட ஊர்வலங்களும் இடம்பெறக் கூடாதென 1981ன் கருத்துக் கணிப்புச்சட்டம் கூறுகிறது. எனினும் அரசாங்கம் எதிர்க்கட்சிகளை மற்றும் சிறுபான்மைக்குழுக்கள் உட்பட ஏனையோர்க்கும் ஆர்ப்பாட்டங்களை நடத்துவதற்குப் பொதுவில் அனுமதி வழங்கி வந்திருக்கிறது. 2002 ஒக்ற்றோபரில் எஸ்ரிஎப் பொலிஸார் அக்கரைப்பற்றில் எதிர்ப்பு ஆர்ப்பாட்டமொன்று நடைபெற்ற சமயம் எட்டுத் தமிழர்களைக் கொன்றுவிட்டனர். அச்சம்பவம் பற்றி விசாரணை நடத்துமாறு பணிக்கப்பட்டிருந்த பொலிஸும், விசாரணைக் குழுவும் கும்பல் பொலிஸ்வளவுக்குள் பிரவேசிக்க முயன்றதாகவும் பொலிஸார் தங்களைக் காப்பாற்றிக் கொண்டிருந்தனர் எனவும்

உரிமைபராட்டினர். தமிழர்கள் இந்த முடிவையிட்டுத் தொடர்ந்து மறுதவிப்புத் தெரிவித்துவந்துள்ளனர், அதற்கு அவர்கள் கூறிய காரணம் அந்த எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் அமைதியாகவே நடந்தது என்பதாகும். எல்ரிரிஈ தன்கட்டுப்பாட்டிலுள்ள பகுதிகளில் சுகந்திரமான ஒன்று கூடங்களை அனுமதிப்பதில்லை. ஆனாலும் அது தான் நடத்தும் திரளணிகளில் மக்களைக்கலந்து கொள்ளச்செய்வதற்கு கட்டாயப்படுத்தும் முறையினைக்கையாண்டு வருவதாக கருதப்படுகிறது. யாழ்ப்பாணக்குடா நாட்டில் எல்ரிரிஈ பாதுகாப்புப்படைகளுடனும் ஏனைய அரசாங்க அமைப்புகளுடனும் தொடர்பு வைத்திருந்ததாக குற்றஞ்சார்த்தப்பட்டுள்ள தமிழ்க் குடிமக்களின் பெயர்களை அவ்வப்போது பகிரங்கமாகவே விளம்பரப்பலகையில் வெளியிட்டுவருவது வழக்கம். யுத்தத்தின்போது நாசப்படுத்தப்பட்ட யாழ்ப்பாண நூலகம் புனரமைக்கப்பட்டு அவ்வாண்டில் திறந்துவைக்கப்பட ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. ஆனால் எல்ரிரிஈ அதன் திறப்பினைத் தடுத்துவிட்டது.

1998ல் தெரிவுசெய்யப்பட்ட சுகந்திரமானதும், நியாயமானதுமான ஓர் அரசியல் தலைமையின் கீழ் யாழ்ப்பாணத்தில் ஒரு சிவில் நிர்வாகத்தை ஏற்படுத்துவதில் பாதுகாப்புப்படைகளுடன் ஒத்துழைத்த தமிழ்க்குடிமக்களை எல்ரிரிஈ கொன்றது.

### இ. மத சுகந்திரம்

அரசியலமைப்புச்சட்டம் பௌத்த மதத்திற்கு ஒரு முன்னிலை அந்தஸ்தை வழங்கியிருப்பினும் அது ஏனைய மதங்கள் சார்ந்த உறுப்பினர்களுக்கு தத்தமது மதங்களைச் சுகந்திரமாகப் பின்பற்றிவருவதற்கான உரிமையையும் வழங்குகிறது, அரசாங்கமும் நடைமுறையில் இந்த உரிமைக்கு பொதுவாக மதிப்பளித்தே வருகிறது. பௌத்தத்திற்கு அரசியலமைப்புச்சட்டம் இந்த விசேட அந்தஸ்தை வழங்கியிருப்பினும் கூட அனைத்து மதங்களினதும் பிரதான மதக்கொண்டாட்டங்களுக்காக விடுமுறைகள் வழங்கப்பட்டுள்ளன.

வெளிநாட்டு மதப்பெரியார்கள், இந்த நாட்டில் சேவை செய்யலாம் எனினும் அரசாங்கம் தற்காலிக வேலை அனுமதிப்பத்திரங்கள் வழங்கி இத்தகைய வெளிநாட்டு சமயப்பணியாளர்களின் எண்ணிக்கையை மட்டுப்படுத்தவிழைகிறது. அரசாங்கத்துடன் பதிவு செய்யப்பட்டுள்ள மதங்களைச் சார்ந்தோருக்கெனவே வழக்கத்தில் இந்த மட்டுப்பாடு பின்பற்றப்படுகிறது. ஒரு நிரந்தர அடிப்படையில் வெளிநாட்டு சமயப்பெரியார்களைப் புதிதாக அனுமதிப்பதை அரசாங்கம் தடைசெய்துள்ளது. ஏற்கனவே இந்த நாட்டிலுள்ள அத்தகையோர்க்குத் தொடர்ந்து தங்கியிருக்க அனுமதி வழங்கியுள்ளது. அவ்வாண்டின்போது பௌத்தமதக்கும்பல்களால் அடிக்கடி தீவிர பௌத்த பிக்குகளின் தலைமையில் புரட்டஸ்தாந்து மற்றும் கத்தோலிக்க தேவாலயங்களையும் அவைசார்ந்தோரையும் தாக்கி வந்ததிற்கான ஆதாரபூர்வமான தகவல்கள் வெளிவந்தன. தாக்குதல்களின் எண்ணிக்கை அதிகரித்து வந்ததாக ஆண்டின் இறுதிவாக்கில் வாரத்திற்குப் பலதடவைகளாக கிறிஸ்தவ அமைப்புகள் தெரிவித்தன. அவர்கள் கொண்டுள்ள சமய அந்தஸ்து தொடர்பிலான கண்ணியம் காரணமாக கிராமத்துப் பொலிஸார் அத்தகைய தூண்டுதல் செயலில் ஈடுபடும் தீவிர பௌத்த பிக்குகள் மீது நடவடிக்கை எடுக்க அடிக்கடி தயக்கம் காட்டி வந்துள்ளனர். ஆண்டின் இறுதிவாக்களவில் கைதுகள் எதுவும் இடம்பெற்றிருக்கவில்லை. அவ்வாண்டின் போது தோன்றிய 2 நிகழ்வுகள் மத சுகந்திரம் தொடர்பில் கவலையைத் தோற்றுவித்தன. ஏழை மக்களுக்கான மருத்துவசேவைகள் வழங்கப்படுவது என்பது இங்கு மதமாற்றச் செயற்பாடு நோக்கங் கொண்டதாகக்கூறி ஜுலையில் உச்ச நீதிமன்றம், கத்தோலிக்க மதப்பிரிவொன்றைச் சேர்ந்த கன்னியஸ்தீரிகளைத் கூட்டிணைப்பதற்கான உரிமையை மறுத்தது. ஜனவரியில் கிறிஸ்தவகழகங்கள், சமயக்கல்விப்போதனையை,தர்மப்பணிகளுடன் ஒன்றிணைக்ககூடாது எனக் கூறி ஓர் எவஞ்சலிக்கல்

குழுவான நியூ ஹாவெஸ்ற் வைன் மினிஸ்ற்றியைக் கூட்டிணைப்பதற்கெதிராக உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்தது. மேலும் அந்த ஆண்டின்போது இந்து சமய விவகார அமைச்சு, இந்துக்கள் மதமாற்றத்துக்கு உட்படுவதைச்தடைசெய்யும் மசோதா ஒன்றை வரைந்திருந்தது, அதில் எம் மக்களை எட்டக்கூடிய சாதனங்களையோ அல்லது ஊடகப்பயன்பாட்டிணையோ உபயோகிக்கப்படக்கூடாது என்பது உட்பட இந்துக்களின் சகல மதமாற்றச் செயற்பாடுகளும் அவை அனேகமாகக் கட்டாயத்தின் பேரிலா அல்லது வசப்படுத்தியதன் பேரிலா நிகழ்ந்தன என்பதை விசாரிப்பதற்காக உளஊர்ராட்சி அதிகாரி ஒருவருக்கு அறிவிக்கப்பட வேண்டும் என்ற கட்டுப்பாடும் அதில் இடம்பெறவிருந்தது. ஆண்டு இறுதியின்போது அந்த மசோதா பரிசீலனையிலிருந்தது.

2001ல் நான்கு சிங்களவர்கள் ஒரு முஸ்லிம் காசாளரைத்தாக்கியிருந்தனர். பொலிஸார் நடவடிக்கை எடுக்காதது குறித்து முஸ்லிம் சமூகத்தினர் ஆட்சேபம் தெரிவித்தபோது அந்த முஸ்லிம்களை எதிர்கொண்டு கிளர்ச்சி செய்த சிங்களவர்கள் இரண்டு முஸ்லிம்களைக் கொன்றனர். இந்தச்சம்பவம் தொடர்பிலான பொலிஸ் விசாரணை தொடர்ந்தது, ஆனால் எவரும் கைது செய்யப்பட்டதாகத் தகவலில்லை. அவ்வாண்டு இந்த விவகாரத்தில் முன்னேற்றம் எதுவும் ஏற்படவில்லை.

எல்ரிரிஈ 1990ல் தீவின் வடபகுதியிலிருந்து அநேகமான எல்லா முஸ்லிம்களையுமே அவர்களின் இல்லங்களிலிருந்து வெளியேற்றினர். இவர்களின் அனேகமானோர் இன்னும் இடம்பெயர்ந்த நிலையிலேயே உள்ளனர். அவ்வாண்டில் எல்ரிரிஈ யின் தலைமைத்துவம், சமாதான நடைமுறைகள் பற்றி கலந்துரையாடுவதற்கான முஸ்லிம் சமுதாயத்தவர்களைச் சந்தித்தது. கடந்த காலத்தில் எல்ரிரிஈ முஸ்லிம்களின் வீடுகள், நிலம் மற்றும் வர்த்தக நிலையங்கள் என்பனவற்றை அபகரித்ததோடு திரும்பிவர முனைந்தால் கொல்லப்படுவர் என முஸ்லிம் குடும்பங்களுக்குப் பயமுறுத்தல்களும் விடுத்திருந்தனர். முஸ்லிம் சமூகத்தினர்க்கு எல்ரிரிஈ சில சமரச அறிக்கைகளையும் விடுத்திருந்தது, ஆனால் அனேக முஸ்லிம்கள் அவற்றைச் சந்தேகக்கண்ணோடே பார்க்கின்றனர். எல்ரிரிஈ கிழக்கிலுள்ள முஸ்லிம்களுக்கும் பயமுறுத்தல் விடுத்திருந்தனர். ஆண்டு முழுவதிலுமே எல்ரிரிஈ ஆட்களுக்கும் முஸ்லிம்களுக்குமிடையே ஆங்காங்கே மோதல்கள் இடம்பெற்றே வந்துள்ளன. உதாரணமாக ஏப்பரலில் 17-18 ல் கிழக்குத்துறைமுக நகரமான திருகோணமலைக்குச் சமீபமாகவுள்ள மூதூரில் எல்ரிரிஈயுடன் இடம்பெற்ற சண்டையின்போது ஐந்து முஸ்லிம்கள் கொல்லப்பட்டனர். இருபதுகளான தாக்குதல்களில் அவர்கள் இடம்பெயரவேண்டியேற்பட்டது. ஓகஸ்ற் மாதம் கிழக்கு மாகாணத்தில் இடம்பெற்ற சண்டைகலின்போது ஐந்து முஸ்லிம்கள் கொல்லப்பட்டனர். முஸ்லிம்களக்குச் சொந்தமான அனேக வர்த்தக நிலையங்கள் தீக்கிரையாக்கப்பட்டன. மோதல்கள் சம்பவிக்கும் போது தேவாலயங்கள் கோயில் வளவுக்குள் தஞ்சமடையுமாறு அரசாங்கம் விடுத்த அறிவுறுத்தலுக்கு அமைய மக்கள் அங்கு தங்கியிருந்த போது எல்ரிரிஈ அவர்களைக் கேடயங்களாகப் பயன்படுத்த அங்கெல்லாம் ஆயதங்களைச் சேமித்து வைத்திருந்ததாக அவர்கள் மீது குற்றஞ்சுமத்தப்பட்டிருக்கிறது. மேலும் விரிவானதொரு விளக்கத்தை தெரிந்துகொள்ள 2003இன் சர்வதேச சமய சுகந்திர அறிக்கையைப் பார்க்க.

### ஈ. நாட்டிற்குள் சுகந்திரமான நடமாட்டம், வெளிநாட்டுப் பயணம், குடியகழ்வு மற்றும் தாயகம் திரும்புதல்

அரசியலமைப்புச்சட்டம் ஒவ்வொரு பிரஜைக்கும் ''சுகந்திரமான நடமாட்டம், சொந்த இல்லத்தைத்சேர்வதற்கான உரிமையும் (நாட்டிற்குத்திரும்பி வருவதற்கான சுகந்திரத்தையும் வழங்குகிறது) அரசாங்கம் நடைமுறையில் இந்த உரிமைக்குப்பொதுவில் மதிப்பளிக்கிறது, எனினும் கடந்த காலத்தில்

## இலங்கை

எல்ரிரிஈ யுடனான யுத்தம் காரணமாக அரசாங்கம் வடக்கிலும் கிழக்கிலுமிருந்து வருவோர்போவோர் மீது அதிகடுமையான பரிசோதனை நடத்தவதற்கும், கொழும்பில் நடமாடுவதற்கும் அதிலும் குறிப்பாக இருள்தவிந்த பிறகு நடமாட்டங்களைக் கட்டுப்படுத்துவதற்கும் கட்டாயப்படுத்தப்பட்டுவிட்டது. வடக்கிலும் கிழக்கிலும் தமிழர்கள் சுகந்திரமாக நடமாடுவதற்கு பொலிஸ் அனுமதிப்பத்திரங்கள் எடுக்கவேண்டியிருந்தது. அடிக்கடி அவர்கள் நாடெங்கிலும் பரிசோதனை நிலையங்களில் தொந்தரவுகளுக்கு ஆளாகவேண்டியிருந்தது. இந்தப்பாதுகாப்பு ஒழுங்குகள் தமிழர்களின் நடமாட்டங்களை மட்டுப்படுத்துவதாக அமைந்தன.

2001 தொடக்கம் அனேகமான பிரயாணக்கட்டுப்பாடுகள் அரசாங்கத்தினால் விலக்கிக்கொள்ளப்பட்டன. மட்டுப்படுத்தப்பட்ட நடமாட்டங்களை உட்படுத்திய பகுதிகள் தொடர்ந்தும் இராணுவத்தளங்களை மற்றும் உயர் பாதுகாப்பு வலயங்களை அண்மித்திருந்தன. இவை இராணுவம் நிலைகொண்ட பகுதிகள், முகாங்கள், வீரர்களின் விடுதிகள் அல்லது பரிசோதனை நிலையங்கள் என விவரிக்கப்பட்டிருந்தன. இப்பகுதிகளுக்கு பொதுமக்கள் பிரவேசிக்க முடியாது. பாதுகாப்புவலயங்கள் அளவுக்கு அதிகமான நிலப்பரப்பை உட்படுத்தியிருந்ததாகவும், தமிழர்களின் விவசாய நிலங்களை நியாயமாக அதிலும் குறிப்பாக யாழ்ப்பாணத்திலும் அது உள்ளடக்கியிருந்தது என்றும் சில நோக்கர்கள் உரிமைபாராட்டினர். வடக்கில் யாழ்ப்பாணத்தையும் நாட்டின் எஞ்சிய பகுதிகளையும் இணைக்கும் பாதையில் பயனம் செய்வதை எல்ரிரிஈ மட்டுப்படுத்தியிருந்தது, எனினும் 2002 ஏப்றலில் அரசாங்கம் யாழ்ப்பாணத்துக்கான பிரயானம் தொடர்பில் தான் விதித்திருந்த கட்டுப்பாடுகள் அனைத்தையும் விலக்கிக்கொண்டது.

2001 பிற்பகுதியளவில், இலங்கையின் ஐடிபிக்கள் 800,000க்குக் கூடுதலாக இருந்தது. சமாதான நடைமுறைகளின் வருகையோடு அகதிகளுக்கான ஐக்கிய நாடுகளின் உயர் ஸ்தானிகர் (யூ.என்.எச்.சி.ஆர்) 341,000 ஐடிபிக்கள் தத்தமது சொந்த இடங்களுக்குத் திரும்பிவிட்டனர் என்றும் நாட்டில் எஞ்சியிருக்கும் அத்தகைய ஐடிபிக்களின் எண்ணிக்கை ஏறத்தாழ 500,000 எனவும் தெரிவித்திருந்தார். ஆர்.சியின் கருத்துப்படி ஏறத்தாழ 100,000 ஐடிபிக்கள் உயர் பாதுகாப்புவலையம் காரணமாக மீள்குடியேற முடியாதுள்ளனர். ஒரு மதிப்பின்படி தென்இந்தியாவிலுள்ள தமிழ் நாட்டில் ஏறத்தாழ 65,000 தமிழ் அகதிகள் முகாங்களில் வாழ்ந்து வருகின்றனர். கடந்த ஆண்டுகளின்போது ஏறத்தாழ 100,000 அகதிகள் அங்குள்ள தமிழ் சமூகத்துடன் இரண்டறக்கலந்து விட்டிருக்க கூடுமென மதிப்பிடப்படுகிறது. யூ.என்.எச்.ஆர்இன் கருத்துப்படி அவ்வாண்டின்போது ஒரு சிறு தொகையினர் இந்தியாவிலிருந்து திரும்பியிருக்கக்கூடும்.

எல்ரிரிஈ முஸ்லிம்களுக்கெதிராக வேறுபாடுகாட்டி வந்திருக்கிறது. 1990ல் அது தீவின் வடக்குப்பகுதியில் எல்ரிரிஈயின் கட்டுப்பாட்டிலுள்ள பகுதிகளிலிருந்து சுமார் 46,000 முஸ்லிம்களை, அனேகமாக அத்தனைபேரையுமே அவர்கள் வீடுகளிலிருந்து பலாத்காரமாக வெளியேற்றின. இவர்களில் அனேகமானோர் இடம்பெயர்தோராக நலன்புரி நிலையங்களில் அல்லது அவற்றிற்கு அணித்தாக வாழ்ந்துவருகின்றனர். மன்னார்ப் பகுதியிலிருந்து இடம்பெயர்ந்த ஆயிரக்கணக்கான முஸ்லிம்களுக்கு போர் முடியும்வரை தங்களின் வீடுகளுக்குத் திரும்பவேண்டாம்மென எல்ரிரிஈ எச்சரிக்கை செய்ததாக நம்பகரமான அறிக்கைகள் தெரிவித்தன எனினும் எல்ரிரிஈயின் இத்தாக்குதல்கள் தங்களின் மதநம்பிக்கைகள் காரணமாக அவர்களுக்கு எதிராய்த் தொடுக்கப்பட்டவைபோல் தெரியவில்லை, மாறாக ஒரு சுகந்திரதமிழ் ராஜ்யத்தை அமைக்கும் இலட்சியத்திற்கு ஆதரவு தராத அத்தகையோரை வடக்கிலிருந்தும் கிழக்கிலிருந்தும் வெளியேற்றும் ஒரு முழுமையான தந்திரோயாயத்தின் ஒரு பகுதியே எனத் தோற்றுகிறது. அவ்வாண்டின்போது எல்ரிரிஈ இந்த முஸ்லிம் ஐடிபிக்களை தாங்கள் அவர்களுக்கு தீங்கிழைக்கப்போவதில்லை என்ற உத்தரவாதத்துடன் வீடுதிரும்புமாறு அழைப்புவிடுத்திருந்தனர். சில முஸ்லிம் ஐடிபிக்கள் வீடு திரும்பத் தொடங்கியபோதும் அவர்களின் அதிகப்பெரும்பான்மையோர்

திரும்பவில்லை. மாறாக அவர்கள் எல்ரிரிஈயின் கட்டுப்பாட்டிலுள்ள பிரதேசங்களில் தங்களின் பாதுகாப்புக்கு அரசாங்கத்தின் உத்தரவாதத்திற்காகக் காத்திருக்கின்றனர்.

வன்னிப்பிரதேசத்திலிருந்து அமைக்கப்பட்டுள்ள 2 சோதனை நிலையங்களின் கூடாக ஆட்கள் வெளியெறுவதை எல்ரிரிஈ அவ்வப்போது சீர்குலைத்து வருகிறது. எல்ரிரிஈ குறிப்பாக தன்கட்டுப்பாட்டிலுள்ள பகுதிகளின் கூடாக ப்பயனஞ்செய்யும் குடிமக்களிடமிருந்து வரி அறவிடுகிறது. கடந்த காலத்தில் எல்ரிரிஈ ஐடிபிக்கள் திருகோணமலையிலிருந்து யாழ்ப்பாணத்திற்குச் செல்வதை கடத்தல் அல்லது சிவிலியன்களின் கப்பல் போக்குவரத்தைத் தாக்கித்தடுதல் மூலம் சீர்குலைந்து வந்திருக்கிறது. ஆனால் அவ்வாண்டின் போது அத்தகைய தகவல் எதுவும் வெளிவரவில்லை. 1951ன் அகதிகள் அந்தஸ்து தொடர்பிலான ஐ.நா.பொது இணக்க ஒப்பந்தம் அதன் 1967ன் உடன்படிக்கை தீர்வு குறிப்பு என்பவைதரும் விளக்கத்திற்கு உட்படுவோர்க்கு புகலிடம் அத்தோடு அல்லது அகதி அந்தஸ்து வழங்குவதற்குச் சட்டம் வகை செய்யவில்லை. நடைமுறையில் அரசாங்கம் யு.என்.எச்.சி.ஆர் உடனும் ஏனைய மனிதாபிமான அமைப்புகளுக்கும் ஐடிபிக்களுக்கும் அகதிகளுக்கும் உதவி செய்தே வருகிறது என்பது குறிப்பிடத்தக்கதாகும், அவ்வாண்டின்போது புகலிட விவகாரங்கள் எதுவும் தலைதூக்கவில்லை. ஒரு நாட்டுக்குத்திருப்பியனுப்பப்பட்டால் தாங்கள் அங்கு அடக்குமுறை அட்டுழியங்களுக்கு ஆளாக நேரிடும் என அஞ்சுவோரை முறைகேடாகவோ அன்றிப் பலாத்காரத்தின் பேரிலோ அனுப்பியதாகத் தகவலில்லை.

### பிரிவு 3 அரசியல் உரிமைகளுக்கான மதிப்பு தங்களின் அரசாங்கத்தை மாற்றுவதற்கு பிரஜைகளுக்குள்ள உரிமை

அரசியலமைப்புச்சட்டம் பிரஜைகளுக்குத் தங்களின் அரசாங்கத்தை சமாதான முறையில் மாற்றுவதற்கான உரிமையை வழங்குகிறது. பிரஜைகள் இந்த உரிமையை நடைமுறையில் பல கட்சிமுறைமை காலத்துக்காலம் உலகளாவிய வாக்குரிமை அடிப்படையில் சுகந்திரமான நியாயமான தேர்தல்கள் மூலம் பயன்படுத்தி வருகின்றனர், எனினும் சமீபத்தைய தேர்தல்கள் வன்செயல்களாலும் சில ஒழுங்கீனங்களாலும் பாழ்படுத்தப்பட்டிருக்கின்றன. அதிகாரம் ஜனாதிபதிக்கும் (6 ஆண்டுபதவிக் காலத்துக்காக 1999ல் தேர்ந்தெடுக்கப்பட்டவர்) 225 அங்கத்தவர்களைக்கொண்ட பாராளுமன்றத்திற்குமிடையே பகிர்ந்து கொள்ளப்பட்டுள்ளது. அரசாங்கத்தை மாற்றுவதற்கான உரிமை 2001 பாராளுமன்றத் தேர்தலில் பிரயோகிக்கப்பட்டது. ஆதில் யூஎன்.பி யின் தலைமையிலான யூ.என்.எப் கட்சிகளின் கூட்டமைப்பு பாராளுமன்றத்தில் பெரும்பான்மையுடன் வெற்றிபெற்றது. அதன் பதவிக்காலம் அடுத்த 6 ஆண்டுகளுக்கானது. எல்ரிரிஈ யினர் ஊடுவக் கூடும் எனத்தான் அஞ்சுவதாகக் கூறி அரசாங்கம் எல்ரிரிஈயின் கட்டுப்பாட்டிலுள்ள பிரதேசங்களிலிருந்து 40,000க் கூடுதலான தமிழ் வாக்காளர்களை வாக்களிப்பதற்கு இராணுவச்சோதனை நிலைகளைத்தாண்டிவருவதற்கு அனுமதி மறுத்தது. அவ்வாண்டின்போது உச்சநீதிமன்றம் இந்தச்செயல் அனேகமாக வாக்களிக்கவிருந்த தமிழ் வாக்காளர்களின் அடிப்படை உரிமைகளை மீறியதாகத் தீர்ப்பு வழங்கியது. உச்ச நீதிமன்றம் அந்தத் தீர்ப்பைச்சுட்டிக்காட்டி பிரஜைகள் தங்களின் உரிமையை பிரயோகிப்பதற்குத் தடை ஏற்படுத்தியதாகத் தெரிவித்தது. இராணுவத்தளபதி அன்றைய தேர்தல் கமிஷனர் ஆகியோர்க்கும் அரசாங்கத்துக்கும் தண்டம் விதித்தது எல்ரிரிஈ தேர்தல் தினத்தன்று அரசாங்கத்தின் கட்டுப்பாட்டிலுள்ள பகுதிகளுக்குள் ஊடுருவவிருந்ததான தகவலின் அடிப்படையில் அரசாங்கத்திடமிருந்து கிடைத்த கட்டளையையே தான் பின்பற்றியதாக இராணுவத்தளபதி உரிமை பராட்டினர்.2001 டிசம்பரில் இடம்பெற்ற தேர்தலைத்தொடர்ந்து யூ.என்.பியும் அதன் கூட்டணியினரும் சேர்ந்து புதிய அரசாங்கத்தை அமைத்தனர். ஜனாதிபதியின் கட்சியான பி.ஏ பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சியை வழிநடத்தியது. ஜனாதிபதிக்கும் பிரதமமந்தரிக்குமிடையிலான

## இலங்கை

கூட்டு வாழ்க்கை பிணைப்புகள் கஸ்டமாயின. கசப்புணர்வு டிசம்பரில் கடுமையானதால் ஜனாதிபதி அவசரகால நிலைமையொன்றைப் பிரகடனம்செய்து பாராளமன்றத்தை 15 நாட்களுக்கு நிறுத்திவைத்ததுடன் 3 அமைச்சர்களைப் பதவி நீக்கம் செய்து பாதுகாப்பு அமைச்சின் கட்டுப்பாட்டினைத் தமது சொந்தக்கட்டுப்பாட்டின் கீழ்க் கொண்டுவந்தார். அவ்வாறு செய்தபோது ஜனாதிபதி தேசிய பாதுகாப்புபற்றி கவலை தெரிவித்தார். அந்த அமைச்சுக்களின் கட்டுப்பாடு தொடர்பிலும் சமாதான நடைமுறையில் பிரதமமந்திரியின் பங்குப்பணி பற்றியும் ஆண்டின் இறுதியின்போது பேச்சுகள் தொடர்ந்து இடம்பெற்றன.

உறுப்பினர்கள் கட்சியிலிருந்து வெளியேறியதன் காரணமாக அவரின் கூட்டணி கொண்டிருந்த அதன் பெரும்பான்மையை இழந்துவிட்டதாலும் ஜனாதிபதி 2001 ஜுலை முதல் செட்டம்பர்வரை பாராளுமன்றத்தை இடைநிறுத்தியிருந்தார். அந்த இடைநிறுத்தம் எதிர்க்கட்சிகளைக் கோபத்திற் குள்ளாககியதால் அவை பல ஆர்ப்பாட்டங்களுக்கு ஏற்பாடு செய்தன. இந்த ஆர்ப்பாட்டங்களில் ஒன்று பாதுகாப்புப்படையினர் ஊர்வலத்தில் கலந்துகொண்ட இருவரைக்கொன்றதுடன் முடிவடைந்தது.(பிரிவு 2 ஆ வைப் பார்க்க) தமது கூட்டமைபிலிருந்து மேலும் பல விலகல்களைத் தொடர்ந்து ஜனாதிபதி 2001 பாராளுமன்றத்தை கலைத்து டிசெம்பரில் தேர்தல்களுக்கு உத்தரவிட்டார்.

2001 டிசெம்பரில் தேர்தல் தினத்தன்று இலங்கை முஸ்லிம் காங்கிரஸ் ஆதரவாளர்கள் 12பேர் ஒரு பி.ஏ அபேட்சரினால் வாடகைக்கமர்த்தப்பட்டோர் எனக் கருதப்படும் காடையர்களினால் கொல்லப்பட்டனர். முன்னால் பி.ஏ பாராளுமன்ற உறுப்பினர் அனுருத்த ரத்வத்தையும் அவரின் இரு புதல்வர்களும் அந்தக் கொலைகளுக்கு சதி செய்தனர் என்றதன் பேரில் குற்றவாளிகளாகக் காணப்பட்டனர். அத்தோடு அக்கொலைகளில் ஈடுபட்டதாக கருதப்பட்ட வேறு 15 பேரும் இவர்களில் பாதுகாப்புப்படையினரும் அடங்குவர் குற்றவாளிகளாகக் காணப்பட்டனர். உயர் நீதிமன்றத்தில் ஜுரர்கள் முன்னிலையில் நடைபெற்ற விசாரணையின்போது பெரும்பான்மையோர் வழங்கிய அத்தீர்ப்பினைப் புறந்தள்ளிவைத்து 5 நீதியரசர்களைக்கொண்ட உச்சநீதிமன்றம் ரத்வத்தைக்கும் மற்றும் 14 பேருக்கும் ஜுனில் பிணை வழங்கியது.

2001 தேர்தலுக்கு முன்னர் நிலவியிருந்த மிகமோசமானதொரு வன்முறையின் பின்னணியில் பெரும்பான்மைக்கட்சிகள் இரண்டும் பயமுறுத்தும் செயற்பாடுகளில் ஈடுபட்டிருந்ததாக வெளிவந்த நம்பகரமான அறிக்கைகளின் மத்தியிலும் வாக்களிக்கவந்தோரின் எண்ணிக்கை 70 சதவீதத்தை விஞ்சியிருந்தது. சுகந்திர மற்றும் நேர்மையான தேர்தலுக்கான மக்கள் கூட்டணி 755 வன்முறைச்சம்பவங்களும் 49 உயிரிழப்புகளும் ஏற்பட்டதாக அறிவித்தது. தேர்தல் வன்முறைகளைக் கண்காணிக்கும் நிலையம் 4208 சம்பவங்கள் நிகழ்ந்ததாகவும் 73 உயிரிழப்புகள் ஏற்பட்டதாகவும் அறிவித்தது. தேர்தல் தொடர்பில் 2247 சம்பவங்கள் நிகழ்ந்ததாகவும் 45 உயிரிழப்புகள் ஏற்பட்டதாகவும் பொலிஸ் அறிவித்தது. 2001 செட்டம்பரில் பாராளுமன்றம் 17வது திருத்தத்தை அங்கீகரித்தது(ஏனைய விசாரணைச்சபைகளுடன்) அது சுகந்திரமானதும் நேர்மையானதுமான தேர்தல்களை உறுதிப்படுத்தும் பணிப்பொறுப்பை உடைத்ததாக சுகந்திரமானதொரு தேர்தல் கமிஷனை அமைத்தது. எனினும் ஆண்டின் இறுதிவாக்கில் அதனைச் செயற்படுத்துவதற்கான சட்டம் அங்கீகரிக்கப்படாதிருந்தது. 2001 தேர்தலைக் கண்காணித்த ஐரோப்பிய யூனியனின் ஒரு தூதுவக்குழு வன்முறை தொடர்பிலும் வாக்களிப்பின்போது நிகழ்ந்த முறைகேடுகள் பற்றியும் கவலை வெளியிட்டிருந்துத. ஆனாலும் அத்தேர்தல் தொகுதியின் உறுதிப்பாட்டை நியாயமான ஓர் அளவுக்குப் பிரதிபலித்தது என முடிவு காட்டியது.

225 ஆசனங்களைக்கொண்ட பாராளமன்றத்தில் 10 பெண் உறுப்பினர்கள் இடம்பெற்றிருந்தனர். மேலும் அமைச்சரவையில் ஒரு பெண்ணும் உச்ச நீதிமன்றத்தில் இரு பெண்களும் இடம்பெற்றிருந்தனர்.

## இலங்கை

1999 டிசம்பரில் ஒரு பெண் - சந்திரிகா குமாரதுங்க, ஜனாதிபதியாக ஓர் இரண்டாவது பதவிக்காலத்திற்கெனத் தேர்ந்தெடுக்கப்பட்டார். இந்த 225 உறுப்பினர்களைக் கொண்ட பாராளமன்றத்தில் 28 தமிழர்களும் 24 முஸ்லிம்களும் இடம் பெற்றிருந்தனர்.

தனது கட்டுப்பாட்டின் கீழுள்ள பகுதிகளில் தேர்தல்களை நடத்துவதற்கு எல்ரிரிஈ தொடர்ந்தும் அனுமதி மறுத்துவந்திருப்பினும் 2001 டிசம்பரில் இடம்பெற்ற பாராளுமன்றத் தேர்தலில் கிழக்கில் சில தமிழ்க்கட்சிகள் தேர்தல் பிரச்சாரம் செய்வதை எதிர்க்கவில்லை. முன்னைய ஆண்டுகளின்போது எல்ரிரிஈ கொலை பயமுறுத்தல் இயக்கமொன்றின் மூலம் யாழ்ப்பாணத்தில் உள்ஊர்ராட்சி சபைகள் செயற்படுவதை நடைமுறை சாத்தியமான ஒரு விதத்தில் அடியறுப்புச் செய்துள்ளது. இந்தச்செயற்பாட்டில் யாழ்ப்பாண மேயர்கள் இருவரின் கொலைகள் 17 உள்ஊர்ராட்சிசபை உறுப்பினர்களுக்கெதிரான கொலைப்பயமுறுத்தல்கள் என்பனவும் இடம்பெற்றிருந்தன. யுத்த காலத்தின்போது எல்ரிரிஈ தமிழ்த் தாயகத்தின் ஒரு பகுதி என அது உரிமை பாராட்டும் பகுதிகளில் தமிழ் மக்களால் தெரிவு செய்யப்பட்டோர் உட்பட மிகுந்த செல்வாக்குடன் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசியல்வாதிகளையும் கொன்றுள்ளது.

### பிரிவு 4 மனித உரிமைகள் மீறப்படுவதான கருது கோட்பாட்டின் அடிப்படையில் சர்வதேச மற்றும் அரசார்பற்ற அமைப்புகள் விசாரணை நடத்துவது பற்றிய அரசாங்கத்தின் மனப்பான்மைப் பிரதிபளிப்பு.

அரசாங்கத்தின் கட்டுப்பாடுகளின்றி பொதுவாக இயங்கிவரும் பல உள்ஊர் சர்வதேச மனிதஉரிமைக்குழுக்கள் மனித உரிமைகள்கள் வழக்குகள் தொடர்பில் சொந்த முறையில் தாங்கள் விசாரணை நடத்தி அவற்றின் பெறுபேறுகளை அறிக்கைகள் வடிவில் வெளியிட்டும் வருகின்றன. அரசாங்க அதிகாரிகள் ஒத்துழைப்பு வழங்குவதுடன் அவர்களின் கருத்துக்கள் தொடர்பில் ஆக்கபூர்வமான செயற்பாடுகளிலும் ஈடுபட்டுவருகின்றனர். மனித உரிமை முகாமைத்துவங்களின் இணையம் மனித உரிமைகளுக்கான யாழ்ப்பாண பல்கலைக்கழக ஆசிரியர்கள் அமைப்பு, சிவில் உரிமைகள் இயக்கம், சட்ட சமூக நம்பிக்கை அமைப்பு உட்பட உள்ஊரில் இயங்கும் அனேக மனித உரிமைகள் சம்பந்தப்பட்ட என்.ஜி.ஓக்கள் சிவில் மற்றும் அரசியல் சுகந்திரங்கள் பற்றிக் கண்காணித்து வருகின்றன. பதிவு செய்யும் நடைமுறையின் ஒரு பகுதியாக என்.ஜி.ஓக்கள் தங்களின் செயற் திட்டங்களை உட்படுத்துவதோடு நீதி வழங்கும் வட்டாரங்கள் பற்றிய விரிவான விளக்கங்களையும் தர வேண்டுமென அரசாங்கம் உத்தியோக பூர்வமாகக் கேட்பினும் உள்ஊர் மற்றும் வெளிநாட்டு என்.ஜி.ஓக்களின் செயற்பாடுகள் மீது பாதிப்பு ஏற்படுத்தக் கூடியதான எந்த நிபந்தனைகளும் விதிக்கப்படவில்லை. முன்னைய மனிதஉரிமைகள் குழுக்களின் விமர்சனங்களைத் தொடர்ந்து என்.ஜி.ஓ துறை மீது கூடுதலான அளவு கட்டுப்பாட்டினைப் பிரயோகிப்பதற்கான அரசாங்கத்தின் முயற்சி இதுவென சில என்.ஜி.ஓ பணியாளர்கள் இதனை நோக்குகின்றனர். இத்தகைய தகவல் தெரிவிப்புத் தேவைகளை ஒரு சில என்.ஜி.ஓக்கள் மட்டுமே பூர்த்தி செய்கின்றன.

தடுப்பு நிலையங்களுக்கு ஐ.சி.ஆர்.சி எந்த கட்டுப்பாடுமற்றதாகச் சென்றுவருவதற்கு அரசாங்கம் தொடர்ந்து அனுமதியளித்து வருகிறது. (பிரிவுகள் 1இ, 1ஈ யைப் பார்க்க) ஐ.சி.ஆர்.சி பாதுகாப்புப்படைகளுக்கு சர்வதேச மனித உரிமைகள் சட்ட விவகாரம் தொடர்பில் பயிற்சி நெறிக்கான சாதனங்களை வழங்குவதுடன் உரிய பயிற்சிகளையும் வழங்குகிறது. யு.என்.எச்.ஆர், ஐ.சி.ஆர்.சி மற்றும்

# இலங்கை

பலவகைப்பட்ட சர்வதேச என்.ஜி.ஓக்களும் வன்னிப்பகுதிக்கு மருத்துவ மற்றும் அத்தியாவசியப் பொருட்களின் விநியோகத்திற்கு உதவி புரிந்துவருகின்றன (பிரிவு 1ஊ வைப்பார்க்க)

எச்.ஆர்.சி சட்டம் வழங்கும் பாரிய அதிகாரங்களையும் வளங்களையும் கொண்டுள்ளது. எந்த ஒரு நீதிமன்றத்திலும் சாட்சியளிக்கவோ அல்லது அதன் உத்தியோகபூர்வ கடமைகள் தொடர்பில் அதன் மீது வழக்குத் தொடரப்படவோ முடியாத விதத்தில் அதன் அதிகாரங்கள் இறுக்கமாக உள்ளன. எனினும் எ.எல்.ஆர்.சியிக் கூற்றுப்படி அது திருப்த்திகரமாக இயங்க வேண்டிய அளவுக்கு செயற்பாடு அடிக்கடி இல்லாதுள்ளது. விசாரணைகளில் எச்.சி.ஆர் ஒரு தீர்ப்பு மன்ற ரீதியிலான ஒரு போக்கைக் கடைப்பிடிக்கிறது. குற்றவியல் விசாரணையாளர் மாதிரியில் பூர்வாங்க விசாரணைகளை மேற்கொள்ள மறுப்பதுடன் சொந்தத்தில் தமது சான்றுகளைத் தேடிக்கொள்ளுமாறு அது பாதிக்கப்பட்டோரிடம் அடிக்கடி சொல்லியும் வருகிறது. மனித உரிமைகள் துஷ்பிரயோகங்கள் தொடர்பில் எச்.சி.ஆர் ஆண்டறிக்கையெதையும் வெளியிடுவதில்லை, எவ்வாறாயினும் எச்.சி.ஆர் பொலிஸ் நிலையங்களுக்கு 690 தடவையும் தடுப்பு நிலையங்களுக்கு 96 தடவையும் சென்று வந்துள்ளது. மனித உரிமைகள் துஷ்பிரயோக குற்றச்சார்த்துதல்கள் தொடர்பில் 2500 வழக்குகள் அதன்வசம் விசாரணையிலுள்ளன. 2000மாம் ஆண்டின் பிந்துநுவெவ படுகொலைகள் தொடர்பில் உடன் விசாரணையை ஆரம்பித்தற்காக எச்.ஆர்.சியின் தலைமைத்துவத்திற்கு தீவிர செயற்பாட்டாளர்கள் ஒரளவு திருப்தியைத் தெரிவித்துள்ளனர்.

## பிரிவு 5 இன,பால்,வலுக்குறைவு,மொழி அல்லது சமூக அந்தஸ்து என்பனவற்றின் மீதானப்பாகுபாடு

அரசியலமைப்பு அச்சட்டத்தின் கீழ் சகல பிரஜைகளுக்கும் சம உரிமைகளை வழங்குகிறது. அரசாங்கம் பொதுவில் இவற்றை மதித்து நடக்கிறது. தங்களின் அடிப்படை சிவில் உரிமைகள் குறைக்கப்படுவதாக தனிப்பட்டவர்கள் தொடுக்கும் வழக்குகள் மீது வழங்கப்படும் தீர்ப்புகளை உச்ச நீதிமன்றம் ஒழுங்குமுறையாக ஏற்றுச் செயற்பட்டு வருகிறது. நீதிமன்றத்தக்கு செல்லும் உரிமைக்கு மேலதிகமாக அரசியல் அமைப்புச் சட்ட ஏற்பாடுகள் அமுல் நடத்தப்படுவதை உறுதி செய்வதற்கான ஏற்பாடாக அரசாங்கம் எச்.ஆர்.சியையும், சி.ஐ.யு.ஏ.எச் ஐயும் அமைத்துள்ளது(பிரிவு 1 ஈ யைப்பார்க்க).எச்.ஐ.வி தடுப்புச் சேவைகளை வழங்குவோர்க்கும் அல்லது எச்.ஐ.வி எய்ட்ஸ்களை பரப்பக்கூடிய அதி அபயத்தன்மையுடைய குழுக்களுக்கும் எதிராக உத்தியோகபூர்வமான எந்தவித வேறுபாடும் காட்டப்படுவதில்லை. எனினும் இக்குழுக்களுக்கு எதிராக சமூக ரீதியில் ஓரளவு வேறுபாடு காட்டப்பட்டே வருகிறது.

### பெண்கள்

பாலியல் பலாத்காரம், வன்புணாச்சி, வாழக்கைத்துணையைத் துன்புறுத்துதல் (இது அடிக்கடி மதுபாவனையுடன் தொடர்புபட்டிருக்கிறது) என்பன தொடர்ந்தும் மோசமானதும் தகாவழிச்செல்கிற வகையிலானதுமான பிரச்சனைகளாகவே இருந்துவருகின்றன. 1995ல் குற்றவியல் சட்டத்திற்கு கொண்டுவரப்பட்ட திருத்தங்கள் பால்ரீதியான துஷ்பிரயோகம் மற்றும் தவறான நடத்தை தொடர்பிலான விவகாரங்கள் விடயத்திற்கு பிரதானமாக கவனம் செலுத்துவதோடு ஆதாரங்கள்விடயத்தில் அதி சம அளவில் நிலைப்படுத்தலை உருவாக்கும் விதத்திலும் தண்டனைகளை மிகவும் கடுமையாக்குவதற்காகவும் வன்புணர்ச்சிச்சட்டம் திருத்தப்பட்டுள்ளது. நீதிவழியில் பிரிந்திருக்கும் வாழ்க்கைத்துணை மீது மேற்கொள்ளாடும் மணமுறை வல்லுறவு மற்றும் வேலைத்தளங்களில் மேற்கொள்ளப்படும் பாலியல் நச்சரிப்பு மற்றும் தொல்லை என்பனவும் குற்றச்செயலாக கணிக்கப்படும் வழக்கத்தில் சட்டம்

# இலங்கை

திருத்தப்பட்டிருக்கிறது. பாலியல் ரீதியில் பாதிப்புக்குள்ளாகும் பெண்கள் எதிர்நோக்கும் பிரச்சனைகளை சிலவற்றைக் குற்றவியல்சட்டக்கோவை குறைக்கும் என்றாலும் பொலிஸாரையும் நீதித்துறை அதிகாரிகளையும் இவ்விடயத்தில் கூடுதலான உணர்வுநிலைக்கு உட்படுத்துவது அவசியமாகும் என அனேக மாதர் அமைப்புகள் நம்புகின்றனர். பொலிஸின் கட்டமைப்புக்குள் பிள்ளைகளையும் பெண்களையும் பாதுகாப்பதற்கென மேலும் அதிகமான அக்கறையையும் கவன ஈர்ப்பையும் ஏற்படுத்தும் நோக்கில் அரசாங்கம் 1994ல் அதற்கான பணியகமொன்றை நிறுவியது. இப்பணியகம் எந்த நடவடிக்கையும் எடுத்ததாகவோ அல்லது பெண்களுக்கெதிரான குற்றச் செயல்களின் எண்ணிக்கை எத்தனை என்பது தொடர்பிலோ எந்தத் தகவலுமில்லை.

அந்த ஆண்டின்போது பாதுகாப்புப்படையினரால் மேற்கொள்ளப்பட்ட பாலியல் வல்லுறவு அல்லது அத்தகைய முயற்சி தொடர்பில் அனேக முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. ஆர்.சியின் தகவல்படி மன்னார் மாவட்டத்தில் உள்ள உயிலங்குளத்தில் ஒக்ற்றோபர் 23 திகதி 2 பொலிஸார் திருமதி.செல்வராஜா என்ற பெண் மீது பாலியல் வல்லுறவு கொள்ள முயன்றுள்ளனர் எனக் குற்றஞ் சாட்டப்பட்டிருந்தது. யாழ்ப்பாணக்குடா நாட்டில் வடமராட்சியிலுள்ள இன்பறுட்டி என்ற இடத்தில் வைத்து ஒரு பெண் மீது வல்லுறவு முயற்சி மேற்கொள்ளப்பட்டதாக மூன்று பொலிஸார் குற்றவாளிகளாகக் காணப்பட்டனர். அந்த ஆண்டின்போது 2002ல் பாலியல் வல்லுறவு தொடர்பில் இடம்பெற்ற 865 சம்பவங்களோடு ஒப்பிடுகையில் அந்த ஆண்டில் அது 900 ஆக இருந்ததாய்ப் பொலிஸார் அறிவித்தனர். பல வன்புணர்ச்சிச் சம்பவங்கள் அறிவிக்கப்பட்டிருந்தும், பாதுகாப்புப்படையினர் சம்பந்தப்பட்ட வழக்குகளில் யாரும் குற்றவாளிகளாகக் கானப்படவில்லை.

1995ல் கூட்டிணைவிப்பு, இழிதொடர்புகொள்ளல் என்பனவற்றிற்கெதிரான சட்டங்கள் வலுப்படுத்தப்பட்ட போதிலும் கட்டாயத்தின் பேரில் பெண்கள் வேலைக்கமர்த்தும் நோக்கங்கொண்ட அத்தகைய செயற்பாடு நிகழ்ந்துள்ளது (பிரிவு 6 ஊ வைப் பார்க்க) விபச்சாரம் சட்டபூர்வமானதல்ல. அது ஒரு பிரச்சனையே. பொலிஸ் மற்றும் பாதுகாப்புப்படை உறுப்பினர்கள் சிலர் அதில் ஈடுபட்டிருப்பதாகவும் விபச்சார செயற்பாட்டுகளை மன்னித்துவிட்டதாகவும் அறிவிக்கப்பட்டிருந்தது. அரசாங்கத்துறையில் சம வேலைவாய்ப்பு வழங்கப்படுவதற்கு அரசியலமைப்புச்சட்டம் வகை செய்கிறது எனினும் தனியார் துறையில் பாகுபாடுகாட்டப்படுவதற்கு எதிராகப் பெண்களுக்குச் சட்டப்பாதுகாப்பு இல்லை. சமவேலைக்கு சில சமயம் அவர்களுக்கு அங்கு ஆண்களைவிடக் குறைவான சம்பளமே வழங்கப்படுகிறது. மேற்பார்வை நிலைகளுக்கு உயர்வதில் அவர்கள் அடிக்கடி கஷ்டத்தை எதிர் கொள்கின்றனர். அத்தோடு அவர்கள் பால்ரீதியிலான இன்னல்களையும் எதிர் நோக்க வேண்டியுள்ளது. முறையான தொழில் ஆளணியில் ஏறத்தாழ அரைப்பங்கினர் பெண்கள். தேசிய சிவில் மற்றும் குற்றவியல் சட்டம் என்பனவற்றிக் கீழ் பெண்கள் சமஉரிமையுடையவர்கள் எனினும் விவகாரத்து பிள்ளையின் பராமரிப்பு, சொத்துரிமை உட்பட குடும்பச்சட்டம் தொடர்பிலான விவகாரங்கள் ஒவ்வோர் இன அல்லது மத சம்பிரதாயச் சட்டத் தீர்ப்புக்கு உடபட்டதாக அமைந்துள்ளன. பெண்களின் மிகக்குறைந்த திருமனவயது 18 ஆகும். ஆனால் முஸ்லிம்களைப் பொறுத்தவரை அவர்கள் தங்களின் சம்பிரதாய திருமன நடைமுறைகளேயே பின்பற்றிவருகின்றனர். வெவ்வேறான சமய மற்றும் இன நடைமுறைகள் பாகுபாடுகாட்டுதல் உட்பட பெண்களை நடத்துவதில் சமசீரற்ற நிலைமையை அடிக்கடி உருவாக்கிவந்துள்ளது.

# இலங்கை

**பிள்ளைகள்**

அரசாங்கம், பிள்ளைகளின் சேமநலனையும் உரிமைகளையும் பாதுகாக்கக் கடமைப்பட்டுள்ளது. ஆனால் வளங்களின் போதாமை காரணமாக குறைபாடுகள் இருக்கவே செய்கின்றன. 1998 க்கும் 2001க்கும் இடைப்பட்ட காலப்பகுதியில் ஜி.டி.பியின் ஒரு விகிதமாக, பிள்ளைகளின் சுகாதாரம், கல்விக்கான செலவுகள் குறைவடைந்தன. எவ்வாறாயினும் பொதுக்கல்வி,மருத்துவ நலன் பேனுகை போன்ற விரிவான முறைமைகளுக்கூடாக அரசாங்கம் அதன் ஈடுபாட்டினை வெளிக்காட்டியது. 5க்கும் 14ற்கும் இடைப்பட்ட வயதுடைய சிறுவர்கள் பாடசாலையில் கற்பதை சட்டம் அவசியப்படுதுகிறது. 16 வயதுக்குட்பட்ட 85 சதவிகிதமான பிள்ளைகள்,பாடசாலைகளில் கல்வி கற்று வருகின்றனர். கல்வி பல்கலைக்கழக மட்டம்வரைக்கும் இலவசமே. நோய்த் தடுப்பு உட்பட சுகாதாரக் கவனிப்பு அனைத்துங் கூட இலவசமாகவே கிடைக்கின்றன. பிள்ளைகளைச் சுரண்டிப்பிழைக்கும் பிரச்சனைக்கு போதுமான சட்டமின்மைக்கு மாறாக சட்டத்தினை நடைமுறைப்படுத்துவதிலுள்ள குறைபாடே காரணம் என அனேக என்.ஜி.ஓக்கள் கருதுகின்றன. பிள்ளைகள், பெண்களின் பாதுகாப்புக்கான பொலிஸ் பணியகம் பிள்ளைகளுக்கும் பெண்களுக்கும் எதிரான குற்றவியல் செயற்பாடுகளையிட்டு விசாரணைகளை நடத்தியிருப்பினும் சட்ட அமுலாக்கல் வளங்கள் பல எல்ரிரிஈ யுடனான பிணக்குத் தொடர்பில் திசை திருப்பப்பட்டன .2002 செட்டம்பரில் பொலிஸால் சிறார் விவகாரங்கள் தொடர்பிலான தேசிய சிறார் பாதுகாப்பு அதிகாரசபையுடன் (என்.சி.பி.ஏ) நேரடியாகத் தொழிற்படுவதற்காய் ஓர் அலுவலகத்தைத்திறந்தனர். பிள்ளைகளுக்கெதிரான குற்றவியல் சம்பவங்களையிட்டு விசாரித்துவரும் என்.சி.பி.ஏ யிற்கு ஆதரவாகவும், அந்த விசாரணையின் அடிப்படையில் சந்தேக நபர்களைக் கைது செய்வதற்குமாக அது அமைக்கப்பட்டதாகும். சட்டத்தின் கீழ் பிள்ளையைத் தவறாக பயன்படுத்துவதற்கான விளக்கம், அவர்களுக்கு எதிரான பாலியல் வன்முறை ,அவர்களை அந்த இழிசெயலில் ஈடுபடுத்துவது ,சிறுவர்களைக்கொடுமைப்படுத்தல் உட்பட அத்தகைய செயற்பாடுகள் அனைத்தையும் உள்ளடக்கிறது. பிள்ளைகளை ஏய்துப்பிழைக்கும் விதத்தில் தொழில்களில் ஈடுபடுத்துவது, அல்லது சட்டவிரோதமான செயற்பாடுகள் அல்லது கட்டாய கல்வி விதிமுறைகளுகளுக்கு மாறான எந்த ஒரு செயலிலும் ஈடுபடுவது என்பனவற்றையும் சட்டம் தடைசெய்கிறது. பிள்ளைகளைப் போரில் ஈடுபடுத்துவதை உள்ளடக்கும் விதத்தில் அது சிறார் துஷ்பிரயோகம் என்பதற்கான விளக்கத்தையும் விரிவுபடுத்துகிறது. என்.சி.பி.ஏ, கல்வி, மருத்துவ, ஒய்வு பெற்ற பொலிஸ் மற்றும் சட்ட வாழ்க்கைத் தொழிலர் பிரதிநிதிகளை உள்ளடக்கியிருந்தது, அது ஜனாதிபதிக்கே நேரடியாகவே தகவல் தெரிவித்து வந்தது.

சிறுவர்களைப் பாலியல் துஷ்பிரயோகங்களுக்கு உட்படுத்தும் குற்றவாளிகளை நீதியின் முன் நிறுத்துவதில், சர்வதேச அளவில் கூடுதலான ஒத்துழைப்பை அரசாங்கம் நாடிச் செயற்பட்டு வந்தது. அத்தகையோர்க்கான தண்டனை 5 ஆண்டுகளுக்குக் குறையாததும் 20 ஆண்டுகள் வரையிலுமான சிறைத்தண்டனையோடு தொகை குறிப்பிடத்படாத அபராதமாகும். அந்த ஆண்டின்போது அத்தகையோர் தொடர்பிலான 11 வழக்குகள் நீதி மன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டிருந்தன. எனினும் குற்றத் தீர்ப்பெதுவும் வழங்கப்படவில்லை.

சிறுவர் விபச்சாரம் சில கரையோர உல்லாசப் பயனப்பகுதிகளில் ஒரு பிரச்சனையாகவே இருந்துள்ளது. நாட்டில் 2000க்குக் கூடுதலான சிறார் விபச்சாரர்கள் உள்ளதாக அரசாங்கம் மதிப்பிட்டது. ஆனால் தனியார் குழுக்கள் அந்த எண்ணிக்கை அதைவிடக் கூடுதலானதாகும் என மதிப்பிடுகின்றன(பிரிவு 6 ஊ வைப்பார்க்க) பிரஜைகளே சிறார் விபச்சாரம் மாதிரியில் அதிகமான சிறார் பாலியல் துஷ்பிரயோகங்களில் ஈடுபட்டுவருகின்றனர். எவ்வாறாயினும் சில சிறார் விபச்சாரர்கள் சிறுவர்கள்,

## இலங்கை

அவர்கள் வெளிநாட்டு உல்லாசப் பிரயாணிகளின் தேவைகளைப்பூர்த்தி செய்து வருகின்றனர். இச்சிறார்களில் சிலர் விபச்சாரத்தில் கட்டாயத்தின் பேரில் ஈடுபடுத்தப்படுகின்றனர். (பிரிவு 6 ஊ வைப் பார்க்க) . சிறார் நன்நடத்தை பராமரிப்புச் சேவைகள் திணைக்களம், இழிவழியில் பாலியல் ரீதியில் துஷ்பிரயோகங்களுக்கு உள்ளாகிப் பாதிக்கப்பட்ட சிறுவர்களுக்குப் பாதுகாப்பு அளித்து அவர்களுக்குப் புகலிடவசதிகளை வழங்கும் உள்ஊர் என் ஜி.ஓக்களுடன் இணைந்து பணியாற்றியும் வருகிறது. பாலியல் உல்லாசப் பிராயண அபாயத்திற்கு உட்படக் கூடிய கவர்ச்சிப் பிரதேசங்களில் அந்த அநியாயத்திற்கு உட்படக்கூடிய சிறுவர்களுக்கு உல்லாசப்பயனப் பணியகம் கவன ஈர்ப்பு நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்து வந்திருக்கிறது. எல்ரிரிஈ போர்க்களத்தில் ஆதாரப் பணிகளுக்கும் சண்டையில் ஈடுபடுத்துவதற்குமாக சிறார் படைவீரர்களைப் பயன்படுத்தினர். எல்ரிரிஈ தமது படைகளில் சேர்ந்தோரில் 13 வயதினரும் கூட இடம்பெற்றிருந்தனர். அவர்களில் சிலர் இராணுவத்திடம் சரணடைந்தனர். படைக்கு ஆட்களைத்திரட்டும் முயற்சிகளை எல்ரிரிஈ அதிகரித்ததாக நம்பகத் தகவல்கள் உணர்த்தின (பிரிவு 1 எ யைப் பார்க்க). 1998 ல் எல்ரிரிஈ ஆயுதப்போரில் தாங்கள் 17வயதுக்குக் குறைவான சிறார்களைச் சேர்க்கப்போவதில்லை என ஐ.நா.நிலையச் செயலாளாரின் விசேடப்பிரதிநிதிக்கு உறுதியளித்திருந்தது. ஆனாலும் எல்ரிரிஈ இந்த உத்தரவாதத்தைக் கண்ணியப்படுத்தவில்லை. அத்தோடு போர்நிறுத்த ஒப்பந்தம் ஏற்பட்ட பிறகுங் கூட எல்ரிரிஈ கட்டாயத்தின்பேரில் பிள்ளைகளைப் படையணியில் சேர்த்துவந்ததாக நம்பகரமான பல அறிக்கைகள் வெளிவந்தன. (பிரிவு 6ஈ யைப்பார்க்க)உதாரணமாக அவ்வாண்டின்போது எல்ரிரிஈ பலாத்காரமாக பிள்ளைகளைச் சேர்த்ததாக 700க்கும் மேற்பட்ட நேர்வுகள் இடம் பெற்றதாக யுனிசெப் அறிவித்தது. ஆண்டு இறுதியளவில் 1300க்கு மேற்பட்ட பிள்ளைகள் எல்ரிரியின் வசமிருந்தனர். அக்காலப்பகுதியில் ஆயதப்போரில் சிறுவர்கள் ஈடுபடுத்தப்படுவதைத் தடுப்பதற்கும் அவர்களை மீட்டிணைப்பதற்குமான நோக்கங்கொண்ட பிராந்தியங்களுக்கிடையிலான திட்டமொன்றில் அரசாங்கம் பங்குபற்றத் தொடங்கியது. சிறார்கள் வேலைக்கமர்த்தப்படுவதை ஒழிப்பதற்கென சர்வதேச தொழில் ஸ்தாபனம் ஏற்பாடு செய்த சர்வதேசத் திட்டம் இது. அரசாங்கம் அதனை 1996ல் இயக்கத் தொடங்கியது.

**வலுக்குறைந்தோர்**

வலுக்குறைவின் காரணமாக எந்த ஒரு ஆளுக்கெதிராகவும் வேற்றுமை காட்டப்படுவதைச் சட்டம் தடைசெய்கிறது. அச்சட்டத்தின் கீழ் எந்தவொரு வழக்கும் தொடரப்படவில்லை என நம்பப்படுகிறது எனினும் வேலைவாய்ப்பு கல்வி அல்லது வேறு அரசாங்கத்துறைச் சேவைகளில் வலுக்குறைந்தோர்க்கெதிராக ஒரளவு வேற்றுமை காட்டப்பட்டே வந்திருக்கிறது. வலுக்குறைந்த ஆட்கள் கட்டிடங்களுக்குச் சென்று வேலைபார்ப்பதைச் சட்டம் தடுக்கவில்லை. மக்கள் தொகையில் 7 சதவிகிதமானோர் வலுக்குறைந்தோராயுள்ளனர் என உலக சுகாதார ஸ்தாபனம் மதிப்பிட்டிருக்கிறது. உடல் -மனோரீதியாக வலுக்குறைந்தோர்க்காக சமூகசேவைகள் திணைக்களம் எட்டு தொழிற்பயிற்சி ப் பாடசாலைகளை நடத்திவருவதோடு அத்தகைய பட்டதாரிகளுக்கு தொழிழ் பயிற்சி வழங்கி பொருத்தமான பதவிகளில் அமர்த்துவதற்கான ஒரு திட்டத்தையும் ஏற்பாடு செய்திருக்கிறது. வலுக்குறைந்த ஆட்களுக்காக உதவிவரும் என்.ஜி.ஓக்களுக்கு அரசாங்கம் ஒரளவு நிதி உதவியும் வழங்கிவருகிறது. அத்தகைய உதவியில் உடற் கூறுகளில் உள்ள குறைபாடுகளை போக்க உதவும் சாதனங்களைத் துணை ஆதரவாயிக் குறைந்த விலையில் வழங்குவது வலுக்குறைந்தோர் உறபத்தி செய்யும் பொருட்களைக் கொள்வனவு செய்தல் என்பனவும் இடம் பெற்றுள்ளன. அத்தோடு அது வலுக்குறைந்தோர்க்கென என்.ஜி.ஒக்களால் நடத்தப்படும் 74 பாடசாலைகள், பயிற்சிக் கழகங்கள் என்பவற்றைப் பதிவு செய்து ஆக்கபூர்வமான உதவிகளையும் செய்துவருகிறது. வலுக்குறைந்தோராயும் வேலைசெய்யும் தகுதியுள்ளோராகவும் இருக்கும் சுமார் 200,000 பேருக்கு பொருத்தமான வேலை தேடித்தருவதற்கென சமூக சேவைகள் திணைக்களம் அப்பணிக்குப் பொருத்தமான அதிகாரிகளையும் தேர்ந்தெடுத்துள்ளது. இத்தகைய முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருந்தும் எதிர்மறையான போக்கு மற்றும் வேறுபாடுகாட்டும்

# இலங்கை

சமூக அமைப்பு காரணமாக வலுக்குறைந்த நிலையிலுள்ள ஆட்கள் கஷ்டங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

**பழங்குடிமக்கள்**

வேடுவர் என அழைக்கப்படும் நாட்டின் பழங்குடி மக்களின் எண்ணிக்கை 1000க்கும் குறைவாகும். தங்களின் சம்பிரதாய ஒதுக்குப்புற வாழ்க்கையையே அவர்களில் சிலர் விரும்புகின்றனர். அவர்கள் அரசியல் அமைப்புச்சட்டத்தினால் பாதுகாக்கப்பட்டுள்ளனர். அரசியலிலோ அல்லது தேசத்தின் பொருளாதார வாழ்விலோ பங்குபற்றுவதற்கு அவர்களுக்குச் சட்டக்கட்டுப்பாடுகள் எதுவுமில்லை. பாதுகாக்கப்பட்டுள்ள காட்டுப்பகுதிகலிருந்து விரட்டியடிக்கப்படுவதாக சில வேடுவர்கள் முறையீடு செய்துள்ளனர்.

தேசிய/இன/குல சிறுபான்மையினர் ஒப்பீட்டு அளவில் சமீபத்திய இந்தியவம்சாவளியினர் எனச் சொல்லப்படும் தேயிலைத்தோட்டத் தமிழர்கள் அல்லது இந்திய தமிழர்கள் என அழைக்கப்படும் ஏறத்தாழ 1 மில்லியன் தமிழர்கள் இங்கு உள்ளனர். இவர்களின் மூதாதையர்கள் 19ம் நூற்றாண்டில் பெருந்தோட்டங்களில் வேலைசெய்வதற்கென இங்கு கொண்டுவரப்பட்டவர்களாவர். இவர்களில் ஏறத்தாழ 75,000 பேர் எந்தவொரு நாட்டிலும் பிரஜா உரிமை பெறுவதற்குத்தகுதி பெறவில்லை அதிலும் குறிப்பாக கல்விக்கான அரச நிதி ஒதுக்கீட்டுவிடயத்தில், தேசிய அடையாளஅட்டைகள் இல்லாததால் அவர்கள் பாதுகாப்புப்படையினரால் கைது செய்யப்படக்கூடிய அபாயத்தை எதிர்நோக்கியுள்ளனர். எனினும் இவர்களில் எவரேனும் கட்டாயத்தின் பேரில் நாட்டிலிருந்து வெளியேற்றப்படமாட்டார்கள் என அரசாங்கம் தெரிவித்தது. 1999ன் போது இந்த மக்களைப் பதிவுசெய்யத் தொடங்கும் விதத்தில் அரசாங்கம் ஒரு திட்டத்தை ஆரம்பித்தது. இதன்படி 2001ல் 15,300 தேயிலைத்தோட்டத் தமிழர்களுக்கு அடையாள அட்டைகள் கிடைத்தன. பதிவுப்பணியும், இவ்வாண்டின்போது தொடர்ந்தது. ஒக்ற்றோபர் 7 அன்று 160,000க் கூடுதலான தேயிலைத்தோட்டத் தமிழர்களுக்கு முழுமையான குடியுரிமை வழங்குவதற்காக மசோதா ஒன்றை பாராளுமன்றம் நிறைவேற்றியது.

பல்கலைக்கழகப்படிப்பிலும்,அரசாங்க வேலைவாய்ப்பு மற்றும் அரசாங்கத்தினால் கட்டுப்படுத்தப்பட்டிருக்கும் ஏனைய விவகாரங்களிலும் தாங்கள் நீண்டகாலமாகவே ஓர் ஒழுங்குமுறையான பாதிப்புக்குள்ளாகி வந்திருப்பதாக உள்ஊர் மற்றும் தேயிலைத்தோட்டத் தமிழர்கள் தங்களின் நிலைப்பாட்டை வலியுறுத்தி வந்துள்ளனர்.

**பிரிவு 6 தொழிலாளர் உரிமைகள்**

**அ. சங்க அமைப்புரிமை**

தொழிலாளர்கள் யூனியன்களை அமைப்பதற்கு அரசியலமைப்புச்சட்டம் வழங்கும் உரிமையை அரசாங்கம் மதித்துவந்திருக்கிறது. நாடும் ஓர் வலுவான தொழிற்சங்க சம்பிரதாயத்தைக் கொண்டுள்ளது. எந்த ஏழு ஊழியர்களும் சேர்ந்து ஒரு யூனியனை அமைக்கலாம். ஒரு சாசனத்தை அமைப்பது, தலைவர்களைத் தேர்தல், தங்களின் கருத்துக்களை வெளியிடுதல் என்பனவற்றிற்கு அது வகை செய்யினும் நடைமுறையில் அத்தகைய உரிமைகள் நிர்வாகக்காலதாமதங்களுக்கு உட்படுவதோடு உத்தியோகபப்றறற ரீதியில் அவை ஊக்கக்கேடுகளுக்கும் உள்ளாகின்றன. எனினும் நாடெங்கிலுமுள்ள 6.9 மில்லியன் பேரைக்கொண்ட தொழிலாளர் அமைப்புகளில் ஏறத்தாழ 20 சதவிகிதமானோரும் மற்றும் 70 சதவிகிதத்திற்கு கூடுதலான பெருந்தோட்டத்துறை தொழிலாளர்களைக் கொண்ட அதில் மிகப் பெரும்பான்மையோர் மலைநாட்டுத்தமிழர்கள் அமைப்புகள் யூனியன்

# இலங்கை

மயப்படுத்தப்பட்டிருக்கின்றன. மொத்தத்தில் யூனியன் அங்கத்தவர்களாக 1 மில்லியனுக்கும் கூடுதலானோர் உள்ளனர். தனியார்துறையில் விவசாயத்துறை சாராத ஊழியர்களில் ஏறத்தாழ 15 -20 சதவிகிதமானோர், யூனியன்களில் இணைந்துள்ளனர். பாரிய தனியார் நிறுவனங்களில் அனேகமான தொழிலாளர்களை யூனியன்கள் பிரதிநிதித்துவப்படுத்துகின்றன. ஆனால் சிறிய அளவிலான விவசாய மற்றும் சிறிய வியாபார அமைப்புக்களில் வழமையில் தொழிலாளர்கள் யூனியன்களில் இடம்பெறுவதில்லை. அரசாங்கத்துறை ஊழியர்கள் அதிகூடுதலான விகிதங்களில் யூனியன் மயப்படுத்தப்பட்டுள்ளனர்.

அனேகமான பெரிய யூனியன்கள் அரசியல் கட்சிகளோடு இணைந்ததாக அரசியல் நடைமுறையில் குறிப்பிடத்தக்கதான பங்கினை ஏற்றுவருகின்றன. எனினும் அரசாங்கத்துறையில் உள்ள பெரிய யூனியன்கள் அரசியல் ரீதியில் சுயேச்சையானதாகவே உள்ளன. 30க்குக் கூடுதலான தொழிலாளர் யூனியன்கள் அரசியல் சார்புடையவை. எனினும் அத்தகைய சார்பற்ற ஒரு சிறு எண்ணிக்கையிலான யூனியன்களும் இருக்கவே செய்கின்றன. இவற்றில் சுறுசுறுப்பான தலைவர்களைக் கொண்டதாகவும் ஒப்பீட்டளவில் அதிக எண்ணிக்கையிலான உறுப்பினர்களை கொண்டதாகவும் இயங்கிவருகின்றன. 2002 ன் போது வேலை தொழில் வாய்ப்பு அமைச்சு 174 புதிய யூனியன்களைப் பதிவு செய்ததோடு ஏனைய 150ன் பதிவுகளை இரத்துச்செய்தது. இதன்படி 2002 இறுதிவாக்கில் மொத்தம் 1689 யூனியன்கள் செயல்படுவனவாக அமைந்திருந்தன. சுமார் 500 யூனியன்கள் தீவிர செயற்பாட்டிலுள்ளதாக கருதப்பட்டது. ஆண்டறிக்கை சமர்ப்பிக்கத்தவறும் எந்தவொரு யூனியனதும் பதிவை இரத்துச் செய்வதற்கு சட்டம் வேலைவாய்ப்பு தொழில் அமைச்சுக்கு அதிகாரம் வழங்கியுள்ளது. பதிவினை இரத்துச்செய்வதற்கு இது ஒன்றே சட்பூர்வமான அடிப்படையாக அமைந்துள்ளது.

1999ல் பாராளுமன்றம் தொழிற்சங்கங்களை மதித்து நடக்குமாறும் கூட்டாகப்பேரம் பேசுவதற்குரிய உரிமையை ஏற்று நடக்குமாறும் யூனியனுக்கெதிரான வேறுபாடுகளைத்தடுப்பதற்குமான அவசியத்தை மதித்து நடக்குமாறும் தொழில்கொள்வோரைக் கட்டுப்படுத்தும்விதத்திலும் கைத்தொழில் சர்ச்சைகள் சட்டத்திற்கு (ஐ.டி.ஏ) ஒரு திருத்தம் கொண்டுவந்து நிறைவேற்றியது. இந்தச் சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. வேறுபாடு காட்டுவதில் குற்றமிழைத்தோராகக் கானப்படும் வேலைகொள்வோர் யூனியன் செயற்பாடுகளுக்காக வெளியேற்றப்பட்ட தொழிலாளர்களை மீண்டும் வேலைக்குச் சேர்த்துக்கொள்ள வேண்டும் என்றும் ஆனால் வேறு இடங்களுக்கு விரும்பினால் இடமாற்றம் செய்யலாம் என்றும் அது வற்புறுத்துகிறது. யூனியனுக்கு விரோதமான விதத்தில் வேறுபாடுகள் காட்டப்படுவது தண்டனைக்குரியதொரு குற்றச்செயலாகும். அதற்கான அபராதம் 200 டொலர்கள்(20,000 ரூபா). அவ்வாண்டின்போது சர்வதேச சுகந்திர தொழிற்சங்க கூட்டுச்சம்மேளனம் (ஐ.சி.எப்.சி.யூ) ஐ.எல்.ஓவின் சுகந்திர சங்கக் குழுக் கூட்டத்தில், கட்டுநாயக்க சுகந்திர வர்த்தகவலயத்திலுள்ள ஜக்கலங்காவில் ஜுலை 9ந் திகதி தவறு நிறைந்ததான ஒரு கருத்துக்கணிப்பு நடைபெற்றதாகக் குற்றஞ்சார்த்தி, அரசாங்கத்திற்கெதிரான முறையானதொரு முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது. ஆண்டு இறுதியளவில் அவ்விவகாரத்தில் இரண்டு தரப்புகளும் சலுகைகளை வழங்கியதன் மூலம் அப்புகார் சுமுகமாகத்தீர்த்து வைக்கப்பட்டது. யூனியன்கள் சர்வதேச அமைப்புகளுடன் இணைந்துகொள்ளலாம், ஒரு சில அவ்வாறு இணைந்துள்ளன.

# இலங்கை

## ஆ ஒழுங்கமைத்தல் மற்றும் கூட்டாகப்பேரம் பேசுதலுக்கான உரிமை

கூட்டாகப்பேரம் பேசுதலுக்கான உரிமைக்கு சட்டம் வகை செய்கிறது. ஆண்டின் இறுதிவாக்கில் இலங்கை வேலைகொள்வோர் சம்மேளனத்தைச்சேர்ந்த (ஈ.எப்.சி) 50 கம்பனிகள் கூட்டு இணக்கங்களைக் கொண்டிருந்தன. அனைத்துக் கூட்டு ஒப்பந்தங்களும் தொழில் திணைக்களத்தில் பதிவு செய்யப்படவேண்டும். ஆண்டு இறுதியளவில் ஈ.எப்.சிக்குச் சொந்தமான கம்பனிகள் 128 கூட்டு ஒப்பந்தங்களைச் செய்துகொண்டிருந்தன.

ஐ.சி.எப்.ரி.யு இன் கூற்றுப்படி ஈ.பி.ஸற்களில் தொழில்சங்க உரிமைகள் தொடர்பில் சில மீறுகைகள் இடம்பெற்றிருந்தன. ஈ.பி.ஸற்களில் ஏழு யூனியன்களே சுறுசுறுப்பாக இயங்கின. அந்தப்பிராந்தியங்களுக்கு யூனியன் அமைப்பாளர்கள் சென்றுவருவதிலிருந்த கடுமையான கட்டுப்பாடுகளே இதற்கான காரணங்களில் ஒரு பகுதி. கூட்டுப்பேரம் மற்றும் தொழிற்சங்கச் செயற்பாடு சம்பந்தமான ஐ.டி.ஏ மற்றும் ஐ.எல்.ஓ பொது இணக்க ஒப்பந்தங்களுக்கு செயல் வலிமை தரும்விதத்தில் முதலீட்டுச்சபை (பி.ஓ.ஐ) ஈ.பி.ஸற்களிலுள்ளவை உட்பட பி.ஓ.ஐ கம்பனிகளுக்கு தொழிற்சங்கச்செயற்பாடுகள் மற்றும் கூட்டுப்பேர் உரிமை என்பனவற்றை மதித்து நடக்குமாறு உத்தரவிட்டு,2002 ஓக்ற்றோபரில் தொழில்தரங்களை உள்ளடக்கிய ஒரு புதிய கையேட்டினை வெளியிட்டது. ஈ.ஸற்களில் 10 தொழிற்சங்கங்கள் இயக்கி வருகின்றன. ஏறத்தாழ 200 தொழிற்சாலைகளில் 4ல் மட்டுமே கூட்டுப்பேரவ பிரிவுகள் தொழிற்சங்கங்களாக அங்கீகரிக்கப்படுகின்றன. ஈ.பி.ஸற்களில் உள்ளவை உட்பட யூனியன்களற்ற பி.ஓ.ஐ துணிவான்மை அமைப்புகளில் தொழிலாளர்கள் தொழில்கொள்வோர் மற்றும் அடிக்கடி அரசதுறைப்பிரதிநிதி ஒருவர் ஆகியோரைக்கொண்ட தொழிலாளர் சபைகள், தொழிழ் மற்றும் முதலமைப் பேச்சுவார்த்தைகள் பொதுவாக அவைக்களமாக இருந்துவருகின்றன. புதிய பி.ஜெ தொழில் கையேடு பி.ஓ.ஐ வட்டாரங்கள் என்பனவற்றின் தகவல்படி ஏற்று நடப்பதைக்கட்டாயப்படுத்துவதான கூட்டுப்பேர் ஒப்பந்தங்களைப்பேசி முடிப்பதற்கு இந்தச் சபைகளுக்கு அதிகாரமுண்டு, ஆனால் அத்தகைய ஒப்பந்தங்கள் எதுவும் இதுவரை கைச்சாத்திடப்படவில்லை. தொழில் தொடர்பில் முன்னேற்றகரமான விவகாரங்களை ஆதரித்து வாதிடுவோர் அந்த ஊழியர்சபைகளை திறமையற்ற தொழில் பிரதிநிதித்துவ ஏற்பாடுகள் என விமர்சித்துள்ளனர்.

பொலிஸ், ஆயுதப்படைகள், சிறைச்சாலைச்சேவை மற்றும் அத்தியாவசிய சேவைகளிலுள்ளோரைத்தவிர சகல தொழிலாளர்களுக்கும் வேலை நிறுத்தம் செய்யும் உரிமையுண்டு. தங்களின் உரிமைகளைப்பாதுகாப்பதற்காக தொழிலாளர்கள் சட்டப்பிரகாரம், தொழில் ஆணையாளர் ஒரு தொழில் தீர்ப்புமன்றம் அல்லது உச்ச நீதிமன்றத்திற்கு முறையீடு செய்யலாம். இந்தப் பின்னணி இயக்க ஏற்பாடுகள் திருப்திகரமானவைதான் எனினும் புதிய சீரமைப்புக்கள் மத்தியஸ்த வழக்குகளைத் தீர்த்து வைப்பதற்கு அனுமதிக்கப்படும் கால அவகாசம் மீது மட்டுப்பாடுகளை வைத்துள்ளன. எவ்வாறாயினும் வழக்குகளை தீர்த்து வைப்பதில் தொடர்ந்தும் கனிசமான தேக்கநிலை இருந்துவருகிறது. எந்த ஒரு தொழிற்றுறையையும், ஓர் அத்தியாவசிய சேவையாகப் பிரகடனப்படுத்தும் அதிகாரத்தை ஜனாதிபதி கொண்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

சிவில்சேவை அதிகாரிகள், தங்களுக்குள்ள தொழில் மனக்குறைகளை அரசாங்கசேவைக் கமிஷனுக்குச்(பி.எஸ்.சி) சமர்ப்பிக்கலாம். பி.எஸ்.சியின் தீர்மானங்கள் திருப்தியளிக்காவிடில் சிவில் சேவை அதிகாரிகள் அரசியலமைப்புச் சட்டத்திற்கான 17வது திருதத்தின் கீழே ஜுலை மாதம்

# இலங்கை

நிறுவப்பட்ட நிர்வாக மேன்முறையீட்டுக் கமிஷனுக்கு மேன்முறையீடு செய்யலாம். அரசியலமைப்புச்சட்டத்தின் கீழ் வழங்கப்பட்டுள்ள அடிப்படை உரிமைகள், பாதுகாப்பு ஏற்பாடுகளுக்கு அமைய நீதிமன்றப்பாதுகாப்பையும் நாடலாம். போக்குவரத்து, மருத்துவ, கல்வி, மின்பிறப்பாக்கம், நிதி, மற்றும் துறைமுகப்பிரிவுகளைச்சேர்ந்த அரச ஊழியர்கள் கடந்த சில ஆண்டுகளாகக் குறு பணிப்பகிஷ்களிப்புச் செயற்பாடுகளில் ஈடுபட்டுவந்துள்ளனர். குறிப்பிட்ட ஆண்டு காலப்பகுதியில் அனேக பொதுத்துறை வேலை நிறுத்தங்கள் இடம்பெற்றுள்ளன. ஆனால் ஒப்பீட்டளவில் தனியார்துறையில் ஏற்பட்ட வேலைநிறுத்தங்களின் எண்ணிக்கை சொற்பமே ஆகும். அத்தியாவசியமற்ற சேவைத்துறைகளில் இடம்பெறும் வேலை நிறுத்தங்களுக்கு எதிராக வஞ்சம் தீர்க்கும் வகையில் நடவடிக்கை எடுக்கப்படுவதை சட்டம் தடைசெய்கிறது. தொழில் கொள்வோர் தொழிலாளர்களை ஒழுக்காற்றுக்காரணங்களுக்காக மட்டுமே பிரதானமாக நடத்தைக்கேடு, வேலை நீக்கம் செய்ய முடியும். தகைமையீனம் அல்லது உற்பத்திக்குறைவு என்பன பதவிவிலக்கலுக்கு பொருத்தமான காரணங்களாகக் கொள்ளப்படுவதில்லை. பதவி நீக்கம் செய்யப்பட்ட ஊழியர்கள் தங்களின் பதவி நீக்கங்களுக்கு எதிராக தொழில் நீதிமன்றமொன்றில் மேன்முறையீடு செய்வதற்கு உரிமை பெற்றுள்ளனர்.

பி.ஓ.ஐயின் இயக்கத்தின் கீழ் ஈ.பி.ஸற் கைத்தொழில் பூங்காக்கள் 12ல் ஏறத்தாழ 125,000 தொழிலாளர்கள் வேலைக்கமர்த்தப்பட்டுள்ளனர். இந்தத் தொழிலாளர்களில் ஒரு பெரும் விகிதத்திலுள்ளோர் பெண்கள் ஆவர். சட்டத்தின் கீழ் ஈ.பி.ஸற்களிலுள்ள தொழிலாளர்கள் ஏனைய தொழிலாளர்களைப்போன்றே யூனியன்களில் சேர்ந்து கொள்வதற்கான அதே உரிமைகளைக் கொண்டுள்ளனர். யூனியன் அமைப்பாளாகள் அவ்வலயங்களுக்குச் சென்று வருவதில் கடுமையான கட்டுப்பாடுகள் இருப்பது பகுதியளவான ஒரு காரணமாயிருப்பதால் ஈ.பி.ஸற் களில் ஒரு சில யூனியன்களே அமைக்கப்பட்டுள்ளன. நாட்டின் எஞ்சிய பகுதிகளில் யூனியன் மயப்படுத்தும் விகிதம் ஏறத்தாழ 20 ஆக இருக்கையில் ஈ.பி.ஸற்களுக்குள் இது 10 சதவிகிதத்திற்கு குறைவாகவேயுள்ளது. ஈ.பி.ஸற்களில் ஊதியங்கள், வேலை நிலைமைகள் உட்பட ஈபிஸற் முகாமைத்துவப்படுத்தும் அரசாங்கத்தின் பி.ஓ.ஐ யூனியன் செயற்பாட்டினை ஊக்கங்கெடவைத்துள்ளதாக தொழிற் பிரதிநிதிகள் குற்றஞ்சாத்துகின்றனர். வேலைவாய்ப்பின் குறுங்காலத்தன்மையும் மற்றும் ஈ.பி.ஸற்களில் ஒப்பீட்டளவில் இளந்தொழிலாளர்கள் வேலை செய்வதும் அமைப்புப்பணியினை கஷ்டமாக்கியுள்ளன. ஈ.பி.ஸற்களில்லுள்ள தொழிலாளர் சபைகளுக்கு விதந்துரைப்பதற்கான அதிகாரம் மட்டுமே உள்ளது என தொழில் பிரதிநிதிகள் குற்றஞ்சார்த்துகின்றனர். சமீபத்தைய பி.ஒ.ஐ கைநூல் ஊழியர்கள் சபைகள் கூட்டுப்பேர மற்றும் கைத்தொழில் சர்ச்சைகள் தொடர்பான பேச்சுக்களில் தொழிலாளர்களைப் பிதிநிதித்துவப்படுத்த முடியுமெனத் தெரிவிக்கிறது. பி.ஓ.ஐ யினது வற்புறுத்தலின் கீழ் தொழிற்கமிஷனர் தொழிற்சங்கங்களுடன் கூட்டுப்பேரப் பேச்சுக்களில் ஈடுபடுவதையோ அல்லது அங்கீகரிப்பதையோ மறுக்கும் வேலைகொள்வோர் மீது வழக்குத் தொடர தவறிவிட்டதாக தொழிற் பிரதிநிதிகள் குற்றச்சாத்தினர். ஈ.பி.ஸற்களிலுள்ள வேலைகொள்வோர் ஏனைய இடங்களிலுள்ள வேலைகொள்வோர் வழங்குவதைவிட பொதுவில் கூடுதலான ஊதியம் வழங்கி சிறந்த வேலை நிலைமைகளை உருவாக்கித் தரவிருப்பினும் தொழிலாளர்கள், பாதுகாப்பு, பெருஞ்செலவில் ஆனால் குறைந்த தரத்திலான விடுதிகள் மற்றும் பாலியல் தொந்தரவுகள் போன்ற வேறுவித பிரச்சனைகளுக்கும் முகங்கொடுக்க வேண்டியுள்ளது. அதிகமான சந்தர்ப்பங்களில் ஊதியச்சபைகள் மிகக்குறைந்த ஊதியமாக வழங்கப்படவேண்டிய தொகைகள், வேலை நிலைமைகள் என்பவற்றைத் தீர்மானிக்கின்றன. ஈ.பி.ஸற்களிலோ அவற்றை பி.ஓ.ஐயே தீர்மானிக்கிறது.

# இலங்கை

## இ. பலாத்காரமாக வேலைக்கமர்த்தல் அல்லது அடிமைத்தனமாக வேலைகொள்ளல் மீதான தடை

பலாத்காரமாக வேலைக்கமர்த்தல் அல்லது அடிமைத்தனமாக வேலைகொள்ளல் மீதான தடை என்பவற்றை சட்டம் தடைசெய்கிறது. எனினும் அத்தகைய நடைமுறைகள் பின்பற்றப்பட்டிருப்பதை அறிக்கைகள் பலப்படுத்துகின்றன. பலாத்காரமாக வேலைக்கமர்த்தல் அல்லது அடிமைத்தனமாக வேலைகொள்ளல் என்பன தொடர்பில் குறிப்பாக பிள்ளைகள் விடயத்தில் சட்டம் அதனைத்தடை செய்யவில்லை. ஆனாலும் அரசாங்க அதிகாரிகள் அது சகல வயதினர்க்கும் பொருந்தும் என விளக்கந்தருகின்றனர்.(பிரிவு 6 ஈ யைப்பார்க்க) சில கிராமப்புறச்சிறார்கள் நகர்ப்புறவீடுகளில் கடனூகீடான முறையில் வீட்டு வேலைக்காரர்களாக உள்ளனர் என நம்பகரமான செய்திகள் தெரிவித்தன, இத்தகைய சிறுவர்கள் சிலர் தவறான வகைகளில் நடத்தப்படுவதாக அனேக செய்திகள் தெரிவித்தன.

## ஈ. சிறுவர்களை வேலையிலீடுபடுத்துவதான நடைமுறைகள் மற்றும் அவர்களை வேலைக்கமர்த்துவதற்கான ஆகக்குறைந்த வயது பற்றிய நிலை

வேலையில் ஈடுபடுத்துவதற்கான ஆகக்குறைந்த வயது 14, எனினும் தங்களின் பெற்றோர்களால் அல்லது பராமரிப்பாளர்களால் மட்டுப்படுத்தப்பட்ட குடும்ப விவசாயப்பணிகளிலோ அல்லது தொழில்நுட்ப பயிற்சியிலோ இளம் பிள்ளைகள் ஈடுபடுத்தப்படுவதை சட்டம் அனுமதிக்கிறது. பெண்கள், இளம் பிராயத்தினரை வேலைக்கமர்த்தும் சட்டத்திற்கு ( ஈ.டபிள்யு.வை.சி) சமீபத்தில் கொண்டுவரப்பட்ட திருத்தம் 14 வயதிற்குட்பட்ட சிறார்களை வேறு விதத்திலான அனைத்துக் குடும்பப்பணியமர்த்துகைகளையும் தடைசெய்கிறது. 5க்கும் 14 வயதுக்குமிடைப்பட்ட பிள்ளைகளைப் பாடசாலைக்கு அனுப்புவதைக் கட்டாயப்படுத்தும் பாடசாலைகள் சட்டம் 1998 முதல் நடைமுறைப்பட்டுவருகிறது, ஆனாலும் அது இன்னமும் நிறைவேற்றப்பட்டே வருகிறது. புள்ளிவிபர தொகைமதிப்புத் திணைக்களத்தினால் 1998, 1999ல் நடத்தப்பட்ட பிள்ளைச் செயற்பாட்டு மதிப்பீடொன்று 5 க்கும் 14க்கும் இடைப்பட்ட வயதுடைய அனேகமாக 11,000 சிறார்கள் முழுநேர அடிப்படையில் வேலைசெய்து வருவதையும் மற்றும் 15,000 சிறார்கள் பொருளாதார வீட்டுப் பராமரிப்பு ஆகிய இரு துறைகளிலம் ஈடுபட்டிருப்பதையும் புலப்படுத்தியது. 450,000 சிறார்கள் அவர்களின் குடும்பத்தினரால் ஈடுபடுத்திவருவதையும் அந்த மதிப்பீடு வெளிக்காட்டியது.

ஈ.டபிள்யு.வை.சியும் தொழிற்சாலைகள் உரிமைக்கட்டளையும் 14க்கும் 18க்கும் இடைப்பட்ட வயதுடைய யுவ -யுவதிகளின் வேலைதொடர்பான விடயங்களை ஆளுகையை உட்படுத்துகிறது. ஆயுளுக்கோ அல்லது அங்கங்களுக்கோ பாதிப்பை ஏற்படுத்தக்கூடிய எந்தவொரு அரச தொழில் முயற்சிகளிலும் 18 வயதுக்குறைந்தோர் ஈடுபடுத்தப்படக்கூடாது. சிறுவர்கள் சில சமயங்களில் பெருந்தோட்டத்துறையிலும் அத்தகைய அல்லாத விவசாயத்துறையிலும் அறுவடைக்காலத்தின்போது ஈடுபடுத்தப்பட்டுவரினும் ஈ.பி.ஸற்களில் மற்றும் ஆடைஉற்பத்தித் தொழிற்றுறை அல்லது வேறு ஏதாவது ஏற்றுமதித்துறைகளிலோ பிள்ளைகள் வேலைக்கமர்த்தப்படுவதாகத் தகவலில்லை. பல்லாயிரக்கணக்கான பிள்ளைகள் வீட்டு வேலைகளில் ஈடுபடுத்தப்பட்டிருப்பதாக நம்பப்படினும் இந்த நிலைமை தொடர்பில்

## இலங்கை

செயற்பாடுகள் ஒழுங்குபடுத்தப்பட்டிருக்கவுமில்லை அல்லது பதியப்பட்டிருக்கவுமில்லை. தென் மாகாணத்தில் உள்ள 8.6 சதவிகிதமான வீடுகளில் பிள்ளைகள் வீட்டுவேலைகளில் ஈடுபடுதப்பட்டிருந்ததாக 1997ல் மேற்கொள்ளப்பட்டிருந்த ஓராய்வு தெரிவித்தது. வீட்டுப்பணிச்சேவைப்பிரிவில் ஈடுபடுத்தப்பட்டிருந்த சிறார் தொழிலாளர்களுக்கு கல்விகளுக்கும் வாய்ப்பு அடிக்கடி மறுக்கப்பட்டிருக்கிறது என்றும் அந்த ஆய்வு மேலும் தெரிவித்தது. வீட்டுவேலைசெய்து வரும் அனேக சிறுவர்கள் உடல் ரீதியிலும் பாலியல் ரீதியிலும் மற்றும் உணர்ச்சி வசப்படக்கூடிய விதத்திலும் பயன்படுத்தப்பட்டுள்ளனர் என அறிவிக்கப்பட்டிருநதது. குடும்பப்பண்ணைகள், கைப்பணிப்பொருள் உற்பத்தி, சிறுவர்த்தக நிறுவனங்கள், சிற்றுண்டிச்சாலைகள், திருத்தவேலைகளில் ஈடுபடும் கடைகள் போன்ற குடும்ப ஆதிக்கத்திலுள்ள துறையிலும் நியாயமாக பிள்ளைகள் வேலையில் ஈடுபடுத்தப்படுகின்றனர்.

பிள்ளைகளின் பாதுகாப்பு மீது செயற்பாடுகளை ஒன்றிணைப்பது மற்றும் கண்காணிப்பது போன்ற பணிக்களின் மையத்தலமாக தேசிய சிறார் பாதுகாப்பு அதிகாரசபை விளங்குகிறது. தொழில் திணைக்களம் சிறுவர் நன்நடத்தை பாதுகாப்பு சேவைகள் திணைக்களம் மற்றும் பொலிஸ் திணைக்களம் என்பனவே சிறார் தொழிற்சட்டங்களின் நிறைவேற்றத்திற்குப்பொறுப்பாக உள்ளன. அரசாங்கத்தின் சோதனைச்செயற்பாடுகளினால் சிறார்கள் வேலைக்கமர்த்தப்படுவதை ஒழிக்க முடியாதுள்ளது.(பிரிவு 5 ஐப்பார்க்க) , ஒரு கவன ஈர்ப்பு இயக்கபணி உடனுக்குடன் தொடர்பை ஏற்படுத்தக் கூடியதான தொலைபேசி வசதிகளோடு இணைக்கப்பட்டதின் விளைவாக நீதிமன்றங்களில் வழக்கு தொடர்வதில் முன்னேற்றம் ஏற்பட்டு அவற்றின் எண்ணிக்கையும் அதிகரித்துள்ளது. 2002ல் சிறார்களின் தொழில் ஈடுபாடுதொடர்பில் தனக்கு 161 முறைப்பாடுகள் கிடைத்ததாக தொழிற்திணைக்களம் அறிவித்தது, இவற்றில் 72 வழக்குகள் சாட்சியக் குறைபாடு அல்லது தவறான முறைப்பாடு காரணமாக விலக்கிக்கொள்ளப்பட்டன. ஜனவரி முதல் ஜுலை வரையிலான காலப்பகுதியில் தனக்கு 102 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றதாகவும் இவற்றில் 14 வழக்குகள் விலக்கப்பட்டும் 23 விசாரனைக்கு உட்படுத்தப்பட்டதாகவும் தொழில் திணைக்களம் அறிவித்தது. வயது குறைந்த சிறுவர்களை வேலைக்கமர்த்துவதற்கான தண்டனைகள் ஏறத்தாழ 10 டொலர் (1000 ரூபா) அபராதமாகவிதித்த அத்தோடு அல்லது 6 மாதச்சிறைத்தண்டளையுமாக முன்னர் இருந்தது. தற்போது 100டொலர்களாக(10,000ரூபா) அத்தோடு அல்லது 12 மாதச்சிறைத்தண்டனையாக அதிகரிக்கப்பட்டன. கட்டாயத்தின் பேரில் அல்லது பிணைமுறியுடன் கூடியதாய் எந்த வயதினரையும் வேலைக்கமர்த்துவதை சட்டம் தடை செய்யினும் சில கிராமத்துப்பிள்ளைகள் கடன் முறிகளின் பேரில் வேலைக்கமர்த்தப்பட்டிருந்ததாக தகவல்கள் தெரிவிக்கப்பட்டிருந்தன. (பிரிவுகள் 5, 6 இயைப் பார்க்க)

எல்ரிரிஈ உயர்நிலைப்பள்ளி வயதுடைய சிறார்களைச்சமையற்காரர்களாகவும், தூதறிவிப்பாளர்களாகவும், எழுதுவினைஞர்களாகவும், ஜவான்களாகவும் தொடர்ந்து பயன்படுத்தி வந்திருக்கிறது. சில நேர்வுகளில் பிள்ளைகள் பாதுகாப்பரண்களின் நிர்மாணப்பணிகளிலும் ஈடுபடுத்தப்பட்டுவந்திருப்பதாகத் தகவல்கள் தெரிவித்தன. கடந்த காலத்தில் 10 வயதுடைய இளம்பிள்ளைகள் இயக்கத்தில் சேர்க்கப்பட்டதாகவும், அவர்கள் 2 முதல் 4 ஆண்டுகள் வரை எல்ரிரிஈ யின் கோட்பாடு கலந்ததாக முறையான கல்வி போதிப்பதற்கென விசேட பாடசாலைகளில் பயின்றுவந்ததாகவும் தகவல்கள் தெரிவித்தன. எல்ரிரிஈ 13 வயதுடைய சிறார்களைக் கூட போர்முனையில் ஈடுபடுத்தி வந்திருக்கிறது. பிள்ளைகள் சில சமயங்களில் பலாத்காரமாக இயக்கத்தில் சேர்க்கப்பட்டுள்ளனர்(பிரிவு 5 ஐப் பார்க்க) பிள்ளைகளுக்கும் வயது வந்தோர்க்கும் கூட போலியான இராணுவப்பயிற்சி உட்பட ,உடற்பயிற்சிகள் வழங்கப்பட்டு வந்ததாக அறிவிக்கப்பட்டிருந்தது. எல்ரிரிஈ தரப்பில் பேசவள்ளவர், மக்களின் ஆரோக்கியத்தை நிலை நிறுத்துவதே பயிற்சியளிப்பதன் நோக்கம்

## இலங்கை

எனத் தெரிவித்தார். எனினும் பயிற்சிமுறை புகுத்தப்பட்டதின் நோக்கம் கட்டுப்பாட்டை இறுக்கமாக நிலைநாட்டுவதற்கும் போராளிகளைச் சேர்ப்பதற்கான ஓர் ஆதாரமாககொள்வதற்குமாகும் என பரவலாக நம்பப்படுகிறது. தனிப்பட்டவர்கள் அல்லது சிறு குழவினராக பிள்ளைகள் அவ்வப்போது தாங்கள் எல்ரிரிஈ பயிற்சி முகாங்களிலிருந்த தப்பி வந்ததாகக்கூறி பாதுகாப்புப்படையினரிடம் அல்லது மதத்தலைவர்களிடம் சரணடைந்து வருகின்றன. இத்தகைய சம்பவங்கள் ஆண்டு முழுவதும் நிகழ்ந்து வருகின்றன.

### உ. வேலை ஏற்பு நிபந்தனைகள்

தேசிய மட்டத்தில் குறைந்த ஊதிய நிர்ணயம் தொடர்பில் சர்வதேச ரீதியில் எந்தவிதமான முறைமையும் இல்லாதிருப்பினும் கைத்தொழில் உட்பட சகலதுறைகளுக்குமென மிகக்குறைந்த ஊதிய அளவு மற்றும் வேலை நிலைமைகளை நிர்ணயிப்பதற்கென தொழில் திணைக்களம் ஏறத்தாழ 40 ஊதிய சபைகளை அமைத்தது. இந்த ஆகக்குறைந்த ஊதியங்கள் ஒரு தொழிலாளிக்கும் மற்றும் குடும்பத்துக்கும் ஒரு கண்ணியமான வாழ்க்கைத்தரத்தை வழங்கவில்லையெனினும் அதிபெரும்பான்மையான குடும்பங்கள் ஊதியம் பெறும் ஒன்றுக்கு மேற்பட்ட உறுப்பினர்களைக் கொண்டுள்ளன. பெரிய கம்பனிகளைப்பொறுத்தவரை தொழில் அமைச்சு மிகக்குறைந்த அளவு ஊதிதியக்கட்டுப்படுத்தும் சட்டத்தை பயனுறுதி உடைத்ததாக செயல்படுத்தி வருகிறது, ஆனால் முறைப்படி அமையாததுறையைப் பொறுத்தவரை உற்று நோக்கும் செயற்பாடு இல்லாதுள்ளது. ஆடைத் தொழில்துறையில் வழங்கப்படும் ஆகக்குறைந்த மாதஊதியம் ஏறத்தாழ 27 டொலர்கள் (2,800 ரூபா), உணவகத்தொழில் துறையில் அது ஏறத்தாழ 20 டொலர்கள் (2100 ரூபா)

2002 ஜுலையில் பெருந்தோட்ட முகாமைக்கம்பனிகளால் நிர்வகிக்கப்படும் தேயிலைத்தோட்டங்களில் கூட்டு ஒப்பந்தமொன்றின் அடிப்படையில் நிர்ணயிக்கப்பட்டிருந்த நாள் ஊதிய விகிதம் 1.24 டொலர்களிலிருந்து (121 ரூபா) 1.51 டொலராக(147 ரூபா) அதிகரிக்கப்பட்டது. இறப்பர் உற்பத்தித்துறையில் அது 1.15 டொலர்களிலிருந்து (112 ரூபா) 1..35 டொலர்களாக (113 ரூபா) அதிகரிக்கப்பட்டது. முழுநேரத்தொழிலாளர்களில் அனேகமானோருக்கு ஒழுங்குமுறையாக வாரத்திற்கு 45 மணித்தியாலங்களுக்குக் கூடுதலாக (ஓர் ஐந்தரை நாள் வேலை வாரம்) வேலை வழங்குவதை சட்டம் தடைசெய்கிறது. சமீபத்தைய ஒரு தீர்மானத்தின்படி முன்னர் மாதத்திற்கு 60 மணித்தியாலங்களாகவிருந்த மேலதிக நேர வேலைக்கொடுப்பனவு தற்போது ஆண்டுக்கு 100 மணித்தியாலங்களாக மாற்றப்பட்டுள்ளது. இப்புதிய சட்டம் தொழிலாளியின் இணக்கப்பாட்டுடன் மேலதிகநேரக்கொடுப்பணவுக்கு வகை செய்யவில்லை என தொழில் அமைப்பாளர்கள் கவலை தெரிவித்துள்ளனர். தொழிலாளர்கள் ஆண்டு விடுமுறையாக 14 நாட்களையும் 14 முதல் 21 நாட்கள் வரையிலான மருத்துவ விடுமுறைகளையும் ஆண்டுக்கு ஏறத்தாழ 20 உள்ஊர் விடுமுறைகளையும் பெற்று வருகின்றனர். பிரசவ விடுமுறை நிரந்தர, பருவகால, பகுதிநேரப் பெண் தொழிலாளர்களுக்கும் கிடைக்கிறது. அனேக சட்டங்கள் கைத்தொழில்துறைகளில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களின் பாதுகாப்பு, ஆரோக்கியம் என்பவற்றை உத்தரவாதப்படுத்துகின்றன. ஆனால் இதனை ஏற்று அமுல் நடத்துவதற்கு தொழில் அமைச்சின் ஒரு சிறு எண்ணிக்கையிலான பரிசோதகர் தொகை போதாதுள்ளது. ஆரோக்கிய மற்றும் பாதுகாப்பு தொடர்பில் தற்போதுள்ள விதிமுறைகள் சர்வதேச தரங்களை எட்டுவதாக இல்லை. அபாயகரமான நிலைமைகளிலிருந்து தங்களை விடுவித்துக்கொள்ள தொழிலாளர்களுக்குச் சட்டப்படியான உரிமை உள்ளது. ஆனால் அனேக தொழிலாளர்களுக்கு இது தெரியாது அல்லது பராமுகமாயுள்ளனர். அத்தகைய அபயகரமான வேலை நிலைமைகளிலிருந்து வெளியேறிட்டால் தாங்கள் வேலையை இழக்க நேரிடும் எனவும் அவர்கள் அச்சங்கொண்டுள்ளனர்.

# இலங்கை

**ஊ. ஆட்களை இழிதொழில்களில் ஈடுபடுத்தல்**

ஆட்களை அத்தகைய இழிதொழில்களில் ஈடுபடுத்துவதைச்சட்டம் தடைசெய்கிறது. எவ்வாறாயினும் ஆட்களை அதிலும் குறிப்பாக பெண்களையும் பிள்ளைகளையும் பலாத்காரமாக தொழிலில் ஈடுபடுத்துவதற்கும் பாலியல் செயற்பாடுகளில் தவறாக ஈடுபடுத்துவதற்குமான தொடக்க முடிவான ஒரு நிலையமாக நாடு ஆகியுள்ளது. பெண் பிரஜைகள் மத்திய கிழக்கு நாடுகளுக்கு வீட்டு வேலை செய்வதற்காக செல்கின்றனர். அவாகளில் சிலர் தாங்கள் பாலியல் ரீதியில் துஷ்பிரயோகங்களுக்கு உட்படுத்தப்படுவதாகத் தெரிவித்துள்ளனர். ஒரு சிறு தொகையினரான தாய், ரஷ்ய, சீனப்பெண்கள் பாலியல் துஷ்பிரயோகங்களுக்காக இலங்கைக்குக் கொண்டுவரப்பட்டுள்ளனர். சில சிறுவர்கள் வீட்டுவேலை செய்வதற்கும் மற்றும் பாலியல் துஷ்பிரயோகங்களுக்குமாக உள்ஊரிலும் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். பெண்களை அவ்வாறு ஈடுபடுத்துவதற்குச்சட்டப்படியான தண்டனை 2 முதல் 20 ஆண்டுகள் வரையிலான சிறைவாசம் மற்றும் அபராதமுமாகும். பிள்ளைகளைப் பொறுத்தவரை சட்டம் 5 மதல் 20 ஆண்டு வரையிலான சிறைவாசத்தையும் தண்டத்தையும் அனுமதிக்கிறது. உள்ஊரில் அதிலும் குறிப்பாக வடக்கு -கிழக்கு மாகாணங்களின் எல்லைப்புறங்களிலிருந்து ஆண்பிள்ளைகளை அவ்விதத்தில் ஈடுபடுத்தி வருவதும் ஒரு பிரச்சனையாக உருவெடுத்துள்ளது. சுற்றாடலையும் எங்கெல்லாமுள்ள சிறுவாகளையம் பாதுகாக்கும் (பீஸ்) ஓர் உள்ஊர் என்.ஜி.ஓ 8 க்கும் 15 வயதுக்குமிடைப்பட்ட 6000 சிறுவர்கள் கடற்கரையோரம் மற்றும் மலைநாட்டு உல்லாசப் பயணத்தலங்களில் பாலியல் தொழிலில் ஈடுபட்டுவருவதாக மதிப்பிட்டுள்ளது. இப்பிரச்சனைகளில் அவர்களின் பெற்றோர்களால் அல்லது ஒழுங்கமைவான குற்றச்செயல்களில் ஈடுபடும் கும்பலினால் கட்டாயத்தின் பேரில் விபசாரத்தில் ஈடுபடுத்தப்பட்டு வருகின்றனர். என்.சி.பி.ஏ யுடன் இணைந்து சிறார்கள் அத்தகைய இழிசெயல்களில் ஈடுபடுத்தப்படுவது உட்பட சிறார் பிரச்சனைகள் தொடர்பில் பொலிஸார் 2002 ல் அப்பணியில் ஈடுபடத் தொடங்கினர். வெளிநாட்டவரின் சிறார் துஷ்பிரயோக செயற்பாடுகள் காரணமாக நாட்டுக்கு ஏற்பட்டிருந்த அவப்பெயர் முன்னேற்றகரமான சட்ட அமுலாக்கம் மற்றும் மிகையான விளம்பரப் பிரயேபகம் என்பன மூலம் குறிப்பிடத்தக்கதாகக் குறைந்தது. முன் கூறப்பட்ட விதங்களில் பாதிக்கப்பட்டோர்க்கு அரசாங்கம் மறுவாழ்வு முகாம்களை அமைத்ததோடு பெண்களுக்கு அவைபற்றி அறிவூட்டுவதற்கென கவன ஈர்ப்பு பிரசாரங்களையும் ஆரம்பித்து நடத்தியது. எவ்வாறாயினும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் அனுசரனையுடன் மேற்கொள்ளப்பட்ட இந்த இயக்கங்களில் அனேகமானவற்றை உள்ஊர் சர்வதேச என்.ஜி.ஓ அமைப்புகள் கொண்டு நடத்தின.